# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



● ஐப்பசி - 2023

# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

ஐப்பசி - 2023

படைப்புக்கள் அனுப்ப :

neythal34@gmail.com

mahendran1954@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- அட்டை ஓவியம் : இணையம்
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :

R.Mahendran,
34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk

- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,

A/C No: 90759821
Sort.Code: 20-67-88,
SWIFTBIC BUKBGB22
IBAN GB80 BUKB 2067 8890 7598 21
BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

காற்றுவெளி கலை இலக்கிய மின்னிதழின் ஐப்பசி (2023)மாத இதழ் தங்களின் பார்வைக்கு வருகிறது. ஒவ்வொரு இதழையும் அலங்கரிக்கும் அனைத்துப் படைப்பாளர்களுக்கும் எமது நன்றி.நமது ஈழத்துப்படைப்பாளர் அமரர்.செம்பியன்செல்வன் அவர்களின் நினைவுச் சிறப்பிதழுக்கு கிடைத்த வாசகர்களின் ஆதரவு தொடர்ந்தும் நினைவுச் சிறப்பிதழ்களைக் கொண்டுவர ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

மார்கழி மாத(2023) இதழ் நமது எழுத்தாளர்.அமரர்.சொக்கன்(திரு.க.சொக்கலிங்கம்) அவர்களின் நினைவுச் சிறப்பிதழாக வெளிவரும்.சொக்கன் அவர்களின் நூல்கள்,அவரின் கதை மாந்தர்கள்,நாடகங்கள்,நாவல்கள், சிறுகதைகள்,கவிதைகள்,என உங்கள் ஆய்வைத் தரலாம். அவர் சார்ந்த புகைப்படங்களையும் தந்துவுங்கள்.

சிறப்பிதழ்களையாவது அச்சில் கொண்டுவரும் எண்ணத்தில் முயன்றோம். அச்சுச்செலவு, தபால் செலவுகள் அதிகமான சூழலில் சந்தா எதுவுமின்றி காற்றுவெளி வெளிவரும் சூழலில் சாத்தியப்படுவதில்லை.

நினைத்த போது வரும் இதழாக அச்சில் வந்தபோது ஏற்பட்ட வாசிப்பின் சுகானுபவம் மின்னிதழில் இருக்காது என்பதையும் அறிவோம்.

மாதா மாதம் இருபது வருடங்களுக்கு மேலாக வெளிவருவதும் மகிழ்வே.இப்படித்தான் ஆறுதல் கொள்கிறோம்.

காலச்சூழல் பல்வேறு நாடுகளிலுமிருந்தும் சிற்றிதழ்கள் வெளிவந்துகொண்டுதானிருக்கின்றன.அவைகளில் அச்சிதழ்களும்,மின்னிதழ்களும் அடங்கும்.அவைகளுக்கீடாக படைப்பாளர்களும் அதிகமாகவே எழுதிவருவதும் மகிழ்வாக இருக்கிறது.அவர்களின் வாழ்க்கை,கல்வி,மொழி ஆழுமை,இன முரண்பாடு,யுத்தம் என்பவைகள் கற்றுத்தந்தவைகள் படைப்புகள்,படைப்பாளர்கள் உருவாகவும் காரணிகளாகின.அனைத்துப் படைப்பாளர்களையும் நேசிப்போம்.

மேலும், உலகை அச்சுறுத்தும் யுத்தம்,வல்லாதிக்க சக்திகளிடையேயான போட்டிகள் நம்மைப் போன்ற விடுதலைக்காகப் போராடும் இனங்களையும் பாதிக்கின்றன.கொறோனா போன்ற நோய்த்தொற்றும் புதிய வடிவில் வருகிறதோ எனும் அச்சமும் இல்லாமலும் இல்லை.

பிரார்த்திப்போம். இணைந்திருங்கள்.

அன்புடன்,

சோபா

# படைப்பாளர்கள்

**கவிதைகள்:**

1. பா.சிவகுமார்
2. ஏரா மகள் சுமித்ரா
3. நேசன் மகதி
4. ஜெ.பி. ஆதிரன்
5. மு.முபாரக்
6. ஆதி பார்த்தீபன்
7. ச.ஆனந்தகுமார்
8. ஐ.தர்மசிங்
9. பாரியன்பன் நாகராஜன்
10. வளவ. துரையன்
11. ரகுநாத் வ
12. தங்கேஸ்
13. வட்டக்கச்சி வினோத்
14. க.புனிதன்
15. புசல்லாவை கணபதி
16. மட்டுநகர் கமல்தாஸ்
17. நகுலா சிவநாதன்
18. மல்லை.மு.இராமநாதன்
19. செ. இலட்சுமணக்குமார்
20. சத்தியபானு ச
21. பாக்யபாரதி
22. சா. கா. பாரதி ராஜா
23. மாலதி இராமலிங்கம்
24. மௌமிதா_ஆலம் (தமிழில்: 'ஸ்ரீ என் ஸ்ரீவத்ஸா')
25. நெய்தலூர்_தமிழாதன்
26. சுந்தரிமணியன்,புதூர்
27. ஸ்ரீவி.முத்துவேல்
28. இளையவன் சிவா
29. கவிஜி
30. இரா.வெங்கடேஸ் குமார்
31. சாய்சக்திஸ்ரீ

**சிறுகதைகள்:**

1. அ.முத்துவிஜயன்
2. கிறிஸ்டி நல்லரெத்தினம்
3. திக்குவல்லை கமால்
4. கவிஞர். அய்யனார் ஈடாடி
5. நௌஷாத் கான் லி
6. கமலினி கதிர்
7. இரா. மதிராஜ்
8. திக்குவல்லை கமால்
9. கவிஞர். அய்யனார் ஈடாடி
10. நௌஷாத் கான் லி
11. கமலினி கதிர்
12. இரா. மதிராஜ்

**கட்டுரைகள்:**

1. உடுவை.எஸ்.தில்லைநடராசா
2. சிறீ சிறீஸ்கந்தராசா
3. கஜனி சிவராஜா
4. இதயம் விஜய்
5. பிரேமா இரவிச்சந்திரன்
6. சங்கர சுப்பிரமணியன்
7. மைத்திரிஅன்பு

பா.சிவகுமார்

# சுட்டு விரலின் சூடான கோரிக்கை

உலகெங்கும்
தொடுதிரையை
தடவிக் கொண்டிருக்கும்
விரல்கள் நானே

தட்டச்சு பலகையில்
அதிக இடங்களில்
சுதந்திரமாக நடனமாடும்
கால்கள் எனக்கே

நான் பிடித்த
எழுதுகோல் வழியே
வழிந்த சிந்தனைகளில்
வெடித்துள்ளன
எத்தனையோ புரட்சிகள்

‘அவ்வளவு தான்’
என்ற மிரட்டலை
நானின்றி
சொல்லிப் பாருங்களேன்
தெரியுமென் வீச்சு

கிரிக்கெட்டில்
அவுட் என வீழ்ந்தாலும்
பந்து மைதானத்தைத்
தாண்டி பறந்தாலும்
உயர்ந்து நிற்பவன் நானே

திருமண நிகழ்வில்
மணப்பெண் முகம் சிவக்க
விரல் பற்றி
வேள்விக்குழி மேடையை
வலம்வரும் நற்பலன்
பெற்றவன் நானே

வாக்களித்து
குடிமக்கள்
கடமையாற்ற
மை கறையை
நகமுகத்தில்
அகமகிழ்ந்து
ஏற்பவன் நானே
இன்னும் எத்தனையோ
உண்டு சொல்ல
எதையும் செய்யா
மோதிரவிரலுக்கு
எதற்கு கிரீடம்
என்னத்தச் சொல்ல

விரல்களில்
உயர்ந்தவனென்ற
மமதையில்
என்னை அழுத்தி
ஆபாசக்குறி
காட்டுகிறான்
நடுவன்

தவறைச்
சுட்டிக்காட்டுமெனக்கு
“ஆள்காட்டி” என்ற
துரோகப் பெயரேன்

அரசிதழில்
வெளியிட்டு
மாற்றுங்கள்
என் பெயரை
சுட்டு விரலல்ல
‘சுட்டி விரல்’ என்று.

ஏரா மகள் சுமித்ரா, திருக்கோணமலை

# சொப்பனங்கள் அழகு!

வெண் சிவற்றில்
கரித்துண்டுகளால்
கருப்புக் காடு
வளர்த்தது
நான்தான்.

அடித்துப் பெய்த
அடைமழையில்
குடைசுருக்கி
சுழற்றி எறிந்தபின்
முழுவதுமாய்
நனைந்ததும்
நான்தான்.

தாழ்வாரத்து
மழைநீரில்
காகிதக்கப்பல்
விர்ரெனச்செல்ல
இசைகொடுத்தவளும்
நானேதான்.

கனகாம்பரத்
தோட்டத்துள்
விரல்களைக்
கூம்பாய்ச் சுருக்கி
அத்தனை கனகாம்பரங்களையும்
பறித்தவளும்
நான்தான்.

மீன்தொட்டி மீன்களுக்கு
மின்வெளிச்சம் கொடுத்து
அவை அழுவதைப் பார்க்க
கண்ணாடித் தொட்டியில்
மூக்குநுனி முட்டி
உதடுபதித்து
காத்திருந்ததும்
நானேதான்.

நுளம்பு வலைவிரித்து
ஒய்யாரமாய்
அவை தூங்கி ஓய்வெடுக்க
வெள்ளைவலை கட்டிக்
காத்திருந்தவளும்
நான்தான்.

நான் வளர்த்த
கனவுக்காட்டில்
எந்தப்
பறவைகளயும்
காணவில்லை.

கனவுமழை என்னை நனைக்கவில்லை.
காகிதக்கப்பல்
வெகுதூரம்
செல்லவில்லை.
பறித்த கனகாம்பரங்கள்
என் கூந்தலில்
சரங்களாய்
தொங்கவில்லை.
மீன்தொட்டியில்
சுற்றித்திரிந்த மீன்கள்
கடைசிவரைக்கும்
அழவேயில்லை.
நுளம்புகள் இரவு
முழுவதும்
தூங்கவேயில்லை.

அவள்மட்டும் தூக்கத்தில் திடுக்கிட்டு எழுந்து
ஏதுமறியாமல்
அழுகின்றாள்
இப்போது நனைகின்றாள்!



நேசன் மகதி

# குடிசைக்காரனின் விருந்தாளி..!

ஒரு யாசகனின் வார்த்தைகளாய்
நீண்ட நேரம்
வாசலில் நின்று பேசிக்கொண்டிருந்தன
மழையின் துளிகள்

பணக்காரர்கள் வீட்டினை அடைத்துக்கொண்டு
தேநீர் அருந்தினார்கள்
மழையின் ஈரம்
பட்டுவிடாது இருக்க

கிடைக்கும் இடங்களில்
ஒதுங்கி நின்று வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தனர்
நடுத்தரவர்க்கம்
மழையினை கிடைத்த வார்த்தைகளில்
திட்டிக்கொண்டே

வழக்கம்போல
குடிசை வாசிகளின் பாத்திரங்களில்
நிரம்பியபின்
துள்ளிக்குதித்து
விளையாடிக்கொண்டிருந்தன ஒவ்வொன்றாய்
மழைத்துளிகள்!

சா. கா. பாரதி ராஜா

# துளிப்பாக்கள்

ஒவ்வொரு சொட்டாய்
தரையில் இறங்குகிறது
தூறலிடும் வானம்

❍

நீச்சல் தெரியாதவன்
கரையில் நிற்கிறான்
நீந்துகிறது நிழல்

❍

உள்ளங்கையில் நீரை அள்ளினேன்
நழுவியது
நீல வானம்

❍

சிலந்தி கூட்ட
மனிதன் உருவுகிறான்
சிலையிலிருந்து ஆடை

❍

தொங்கி ஆடும் குழந்தைகள்
மகிழ்ச்சியில் அசைகிறது
கூன் விழுந்த மரம்.

# எண்ணக்காப்பும் எளனியும்

அ.முத்துவிஜயன்



அந்த பொன்னுச்சாமி அய்யாக்கிட்ட அவரோட கொள்ளுப்பேரன் அதாவது மகவழி ப்பேத்தியோட மகன் முத்து வந்து “தாத்தா எண்ணதேய்ச்சு எளனி குடுக்குறதுன்னா என்னா? “நு கேட்டான். அவர் சொன்னாரு” அது ஒனக்கெதுக்குடா அதெல்லாம் ஒனக்குத் தெரிய வேணாம் அதெல்லாம் ஒனக்கானது இல்ல வேற எதுனாச்சும் நா” கேளு ன்னாரு.

”வெளிய அதைத்தான் பேசிக்கிட்டு இருக்காங்க மாமாவும் அம்மாயியும் அவங்ககிட்டக்கேட்டாலும் வெரட்டுறாங்க நீங்களும் பதில் சொல்ல மாட்டீன்றீங்க என்னமோ போங்க இதுக்குத்தான் பெரியவனா வளரனும்றது அதுவும் நடக்கமாட்டேன்றது ஒங்க வெத்தலை பாக்கு இடிக்கிற ஒரலைக்குடுங்க நான் இடிச்சித்தாரேன் வழக்கம்போல காம்பு மட்டும் நான் வாயில போட்டுக்கிறேன்” நு சொல்லிட்டு எடுத்து இடிக்கதொடங்கினான் அவன்.

அவனுக்கு அவர் ஒரு வழில பெரிய அய்யாவேணும். அவனோட அய்யாவும் இவரும் அண்ணன் தம்பிங்க இவனோட அம்மா இவரோட மகவழிப் பேத்தி. தினம் அய்யாவுக்கு வெத்தலபாக்கு இடிச்சிக் குடுப்பான் அவரும் இவன் கூடப்பேசிக்கிட்டு இருப்பாரு , இவன் பெரியமனுசன் மாதிரி பேசுறது அவருக்குப் புடிக்கும் அதுவும் போக அவருக்கு மகன்கள் கிடையாது ரெண்டும் பொண்ணுகதான் அதுனால கொஞ்சம் அதிகமா பாசம்

இப்ப பொன்னுச்சாமிக்கி ஏதோ பொறிதட்டுன மாதிரி இருந்துச்சு. அவனக்கூப்புட்டு “யார்ரா அதுமாதிரி பேசிக்கிட்டு இருந்தது’ன்னு கேட்டார் . அதுக்கு அவன் சொன்னான் சின்ன அம்மாயியும் கொமார் மாமாவும்தான் பேசிக்கிட்டு இருந்தாங்க” நு சொன்னான்

அவருக்கு அடி வயிறு கலங்க ஆரம்பிச்சது. ஏன்னா கொஞ்சநாளா அவரோட சின்ன மகளும் பேரனும் சொத்த அவங்க பேருக்கு எழுதிவைக்கச்சொல்லி பாடாப்படுத்துறாங்க, இவருக்கு ஆண் வாரிசு இல்லாததாலயும் எல்லாமே இவர் சொந்தமாச்சம்பாரிச்ச சொத்துன்றதாலயும் அதுக்கு ஒத்துக்கல. ரெண்டு மகளுக்கும் சமமாத்தான் பிரிச்சிக்கொடுக்கனும் கொஞ்சம் ரெண்டு பேத்திகளுக்கும் கொடுக்கனும் றது அவரோட ஆசை. ஆனா அவரோட சின்னமக எல்லாத்தையும் தன்பேருக்கு வாங்கனும்னு ஆசைப்பட்டா

அவரோட பெரிய மக வெளியூர்ல கட்டிக்குடுத்துருந்தாரு. அவளோட புருசன் திடீருன்னு மனநிலை பாதிக்கப்பட்டு எந்த வேலையும் செய்யாம இவர் மகளையும்

பாடாப்படுத்திக்கிட்டு இருந்தாரு. வேற வருமானம் ஏதுமில்லாம அவ மூணு மகளுகளை வைச்சிக்கிட்டு ஒன்னுக்கு கலியாணம் முடிச்சி மத்த ரெண்ட எப்புடிகட்டிக்குடுக்குறதுன்னு முழி பிதுங்கி நின்னுக்கிட்டு இருந்தா. அவளோட மயனும் பெருசா வருமானமில்லாத வேலையில் இருந்தான். அதுனால அவளோட சொத்துப்பங்கு அவளுக்குபோய் சேரனும்றதுல உறுதியா இருந்தாரு.

ஆனா சின்ன மக எல்லாச்சொத்தையும் அபகரிக்க திட்டம்போட்டா . .இம்புட்டுக்கும் அவளுக்கு ரெண்டும் மகன்கள்தான் ஒரு பொண்ணு ஏற்கனவே கலியாணம் பண்ணிக்குடுத்துட்டா.இம்புட்டுக்கும் அவளுக்கு ரெண்டும் மகன்கள்தான் ஒரு பொண்ணு ஏற்கனவே கலியாணம் பண்ணிக்குடுத்துட்டா இருந்தாலும்

இவரப் பத்திரத்துல கைரேகை வைக்க வற்புறுத்திக்கிட்டு இருந்தா

அதுக்கு இவர் ஒத்துக்காததால ஏதோ திட்டம் போடுறமாதிரி இவருக்குத் தோணிச்சி.

கிராமங்கள்ல எண்ணதேய்ச்சி எளனி குடுக்குறதுன்னா வீட்டுல வயசானவங்க ரொம்ப முடியாம இழுத்துக்கிட்டுக்கெடந்தா அவங்களுக்கு நல்லா குளுர எண்ணதேய்ச்சுக்குளுப்பாட்டி இளனிய நெறையாக் குடிக்க வைச்சி பன்னிக்கறி குடுத்து சாப்பிடவைச்சா அன்னிக்கி ராத்திரி ஒடம்பு ஓவராக்குளுந்து போய் ஜன்னி வந்து போய்ச்சேந்துருவாங்க இப்படி ஒரு வழக்கம் கிராமங்கள்ல நடைமொறையில இருந்துச்சு. அது ரொம்ப முடியாதவங்களுக்குச் செய்யிறது. இத பகிரங்கமாச்செய்யிற அளவுக்கு எல்லாருக்கும் தெரிஞ்ச ரகசியமா இருந்துச்சு அந்தப்பழக்கம்

இவங்க அதைப்பத்திப்பேசுறாங்கன்னவன்ன இவருக்குத் திக்குன்னு இருந்துச்சு. நம்மளுக்குத்தேன் ஏற்பாடு பண்ணுறாங்கன்னு தெரிஞ்சிபோச்சி.

இவருக்கும் வயசு 80 ஆயிப்போச்சு. ஆனா நல்ல ஆரோக்கியம் ஆளு ஆறடிக்கு ஒங்குதாங்கா ஒசறமா இருப்பாரு. பாத்தவன்ன மரியாத குடுக்கத்தோணும்.

ரொம்ப நடக்கத்தான் முடியாது. ஆனா சாப்பாடு ஒன்னும் கொறவில்ல. இன்னிக்கும் அம்சவல்லி ஒட்டல் பிரியாணின்னா முழுசா சாப்புட்டு ஜீரணிக்கும் வயிறு, தலைக்கறி ஈரல்னு எதையும் சாப்பிட்டு செமிக்கிற ஒடம்பு. நடமாட்டம் இல்லையே தவிர வேற ஒன்னும் பிரச்சனை இல்ல. ஒன்னுக்கு ரெண்டுக்கு வெளியெபோய் போகமுடியாது அதுக்காக ஒரு சேரில் ஒக்காந்து போறமாதிரி ரெடி பண்ணிக் குடுத்துருந்தாங்க.

இப்ப இவங்க திட்டம் என்னவாயிருக்கும்னு இவரால ஊகிக்க முடிஞ்சது. வம்படியா சொத்த அவங்கபேருக்கு உயில் எழுதி சுயநெனவோட இருக்குறப்ப அதுல இவர் கைரேகை பதிக்கவைக்கிறது இல்ல எண்ணதேய்ச்சு எளனி குடுத்து உசிறுபோறதுக்கு முன்னாடி ரேகைய பதிக்கிறதுதான் திட்டம்னு தெரிஞ்சி போச்சு. இப்ப என்ன பண்ணுறது பெரிய மகளுக்குத் தகவல் சொல்லனும் அவ வந்தா இத நிறுத்தலாம் ஆனா அவ வெளியூர்ல இருந்தா எப்புடித் தகவல் சொல்லுறது ஆர் மூலமா சொல்லுறதுன்னு கொழப்பம் ஆயிறுச்சு.

எப்புடியும் நாளைக்கி இதச்செஞ்சி நம்மல க் காலி பண்ணி ருவாங்கன் னு தெரிஞ்வன்ன அவருக்கு கண்ணீர் முட்டிச்சி. இதே சின்ன மகளுக்குப் பெரியம்மை போட்டு ஒடம்பு பூராம் கொப்பளம்மாகி வாழை எலையில வெளக்கெண்ண தடவிப் படுக்கவைச் சிருந்தப்ப சாமிக்கிட்டக் காப்பாத்திக்குடு ஒனக்கு கெடாவெட்டிப் பொங்கல் வைக்கிறேன்னு வேண்டிக்கிட்டு ராப்பபகலா கண்ணு முழிச்சி வேப்பிலையில வீசிக்கிட்டு இருந்ததெல்லாம் நாவகம் வந்துச்சு.

அதுல பொழைச்ச மக இப்பத் தன்னை கொல்லத் திட்டம் தீட்டுறதை நெனைச்சி அழுக அழுகையா வந்துச்சு. என்ன செய்ய எல்லாம் பணம் காசு சொத்து. ஏன் இந்த சோதனைன்னு கண்ணீர்விட்டு அழுதார் பொன்னுசாமி

அப்ப பேரன் முத்து கேட்டான் ''ஏன்யா அழுகுறஎன்னாச்சு சொல்லுங்கய்யா? ''ந்னான் அப்ப அவருக்கு இவன் மூலமா அவனோட அம்மாகிட்டச் சொல்லி அவங்க அம்மாவான இவரோட பெரிய மகளை வரச் சொல்லலா முன்னு ஒரு யோசனை தோணிச்சி. ஒடனே அவர் முத்துவைக்கூப்புட்டு'' டேய் நீ போய் ஒங்க அம்மாகிட்ட சொல்லி ஊரில இருக்குற ஒங்க அம்மாயிய ஒடனே வரச்சொல்லு முக்கியமான விசயமாம் போய் சொல்லுவியா ஒனக்கு எட்டணா தாறேன்னு'' சொன்னார்

அவனும் சரின்னு காசவாங்கிக்கிட்டு தன்னோட டவுசர் பையில போட்டுக்கிட்டு அவங்க வீட்டுக்குப்போனான்.

அவன் போன கொஞ்சநேரத்துல அவரோட சின்ன மக தட்டுல சோத்தப்போட்டு ஈரல் கொழம்போட வந்து ''சாப்புங்க அப்பா''ன்னு குடுத்தா. நெஞ்சில துக்கம் அடைக்க ''வேணாம்மா பசியில்ல'' நு சொன்னார் அதுக்கு அவ ''காலாகாலத்துல திண்ணு தொலைச்சாத்தான மத்த வேலைகளைப் பாக்க முடியும்னு ''கத்துனா

இவர் வேணாமுன்னு பிடிவாதம் புடிச்சார். அதுக்குள்ள அவளோட மகன் உள்ள வந்து அவகிட்ட ஒரு பேப்பரைக்குடுக்க அதை வாங்கிப்பாத்துட்டு ''எங்குனக்குள்ள இவர் ரேகை போடனும் சொல்லு?'' நு கேட்டா அவன் அதைப்பிரிச்சி எடத்தக்காமிக்க அதை இவர்கிட்டக் கொண்டாந்து ''இங்குனக்குள்ள ஒரு ரேகை வையிங்க'' நு சொன்னா

அதுக்கு இவர் என்ன எழுதியிருக்கன்னு தெரியாம எப்புடி ரேகை வைக்கிறது என்னா எழுதிருக்கன்னு யாராவது படிச்சிக்காமிங்க'' நு சொல்ல அதுக்கு அவ என்ன எழுதியிருந்தா என்ன சொன்ன எடத்துல ரேகைவைச்சா எல்லாருக்கும் நல்லது ஒழுங்கா ரேகை வைக்கிறதுக்கு வழியப்பாருன்னு கத்துனா

அவர் முடியாதுன்னு சொல்லவும் வம்படியா இழுத்து வைக்க அவளும் அவ மகனும் முயற்சி பண்ணுனாங்க ஆனா அவங்களால முடியல. இவர் முழு பலத்தையும் காட்டிகட்ட விரல மூடி வைச்சிக்கிட்டார். விரிக்கவே முடியல

அவளுக்குக் கோவம் வந்துருச்சி அவர்கன்னத்துல பளார் பளார்னு அறைஞ்சா அவர் கண்ணுல இருந்து கண்ணீர் கொட்டுச்சே தவிர விரல விரிக்க முடியல. அப்ப அவ சொன்னா இத எப்புடி செய்யிறதுன்னு எனக்குத்துதெரியும்னு சொல்லிட்டு அடுப்படிக்குள்ள போய்ட்டு கொஞ்சநேரம் கழிச்சி செக்கச்செவேல்னு காய்ச்சின தோசைக்கரண்டியோட வந்தா, வந்து

''இப்ப ஒழுங்கா ரேகை வைக்கிறீயா இல்ல கையில சூடுவைக்கட்டுமான்னு'' மிரட்டினா

அப்பவும் அவர் அசைஞ்சு குடுக்கல. ஒடனே அவரோட இடது கைய இழுத்துவைச்சி காய்ச்சின சூடான கரண்டினால ஒரு இழுப்பு இழுத்தா. இப்ப அவர் அலறினார் ஆனாலும் கைவிரல விரிக்கல. அதுக்குள்ள இவர் அலறல் சத்தம் கேட்டுப் பக்கத்து வீட்டுல இருந்த ஒருபெரியவர் உள்ளாற வந்து “என்னா பெரியவர் கத்துனமாதிரி சத்தம் கேட்டதுன்னு கேக்க இவ சொன்னா “பெருச்சாளி இவர் மேல தவ்விடுச்சு அதான் சத்தம் போட்டார்னு “

ஆனா வந்தவர் இவ பொய்சொல்றான்னு தெரிஞ்சது ஆனா அதுக்கு மேல எதுவும் கேக்க முடியல ஆனா “ஏதோ கருகுன மாதிரி வாசம் வருதுன்னு'' கேக்க இவ சொன்னா உள்ளாற ஆட்டுக்காது வாட்டுறோம் அதான் கருகுற வாசம்''ன்னா அவர் நம்பிக்கை இல்லாம வெளியே போனார்.அப்ப அவ சொன்னா இது வேலைக்காவாது நாம பேசுன மாதிரி நாளைக்கிக்காலையில எண்ணக்காப்பு செஞ்சிறவேண்டியதுதான்னு சொன்னா. அப்ப அவர் அழுதார்

''வேணாம்மா இன்னிக்கி நாள் நல்லால்ல நாளைக்கி நான் ரேகைவைக்கிறேன் என்னக்கொன்னுறாத எல்லாச்சொத்தையும் ஒனக்கே எழுதிக் குடுத்துருறேன்'' நு அழுதார்அதைக்கேட்டுட்டு அவ சொன்னா உன் மாய்மாலம் எல்லாம் என் கிட்டப் பலிக்காது நாளைக்கி ஒனக்கு எண்ணக்காப்புதான் ஒன்ன நம்ப முடியாது நீ மகா நடிகனாச்சே இன்னிக்கி ராத்திரிதான் ஒனக்குக் கடைசி ராத்திரி நாளைக்கி உன் கதை முடியப் போகுது'' கொடூரமா சிரிச்சா

இதுக்கு நடுவில முத்து போய் அவங்க அம்மாகிட்ட அய்யா சொன்னதைச் சொன்னான். அதுக்கு இப்ப எப்புடிப் போய் அம்மா கிட்டச்சொல்லுறது இருட்டிருச்சே. காலையில பாத்துக்கலாம் நு சொல்லிட்டா.

மறுநாள் காலையில முத்துவோட அம்மா அவன் கிட்டக்காசு குடுத்து “நீயே போய் அம்மாயிக்கிட்ட வெவரத்தை சொல்லு வழக்கம் போல மாடக்கொளம் பாதையில நடந்துபோ.னு சொல்லி அனுப்புனா.

அதுக்குள்ள இங்க பொன்னுச்சாமிக்கு எண்ணதேய்க்க ஏற்பாடு நடந்துக்கிட்டு இருந்துச்சு. ஒரு பக்கம் எளனி வெட்டிக்கொண்டாந்து வைச்சிருந்தாங்க. கொள்ளைப்புரத்துல எல்லா ஏற்பாடும் நடந்துக்கிட்டு இருந்துச்சு. ஒரு பக்கம் பன்னிக்கறி வாங்கியாந்து வெந்துக்கிட்டு இருந்துச்சு.

வெளக்கெண்ணயக் காய்ச்சி பொன்னுச்சாமிய சேரில ஒக்காரவைச்சி ஒடம்பு பூராம் தேய்ச்சிக்கிட்டு இருந்தாங்க அப்பவும் அவர் கை மூடுனமாதிரிதான் இருந்துச்சு விரிக்கல. அதைப்பாத்துட்டு மக சொன்னா கெழவனுக்குப் பிடிவாதம் பாரு இப்பவும் கைவெரலு மூடியே கெடக்கு. எல்லாம் ஜன்னி வார வரைதான் அப்புறம் என்னா செய்யும் பெருசுன்னு வில்லத்தனமா சிரிச்சா

நல்லா எண்ணயதேய்ச்சு விட்டு குளுரவிட்டுட்டு பச்சத்தண்ணிய மேல ஊத்தி குளுப்பாட்டினாங்க. அப்பவே அவர் வாய் ஆட ஆரம்பிச்சது அப்புறமா தொவட்டி விட்டுட்டு எளனிய வெட்டி குடிக்கச்சொன்னாங்க. அவர் வாயத்தொறக்காம வம்பு பண்ணவும் சங்குல வைச்சி எளனிய ஊத்திவிட்டாங்க ஒன்னு ரெண்டுன்னு 5 எளனி ஊத்தியாச்சு. அவர் ஒடம்பு லேசாநடுங்கதொடங்குச்சு.

அவரைத்தூக்கிபெஞ்சில படுக்கவைச்சி பக்கத்துல பேனைவைச்சி ஓடவிட்டாங்க. பொன்னுச்சாமிக்கு தாங்க முடியல. கண்ணுல

கண்ணீர் ஊத்துச்சு. கொஞ்சநேரத்துல அவருக்குப் பசி எடுத்துச்சு. அப்ப பன்னிக்கறி வேக வைச்ச சூப்ப ஆறவைச்சிக் குளிறவைச்சி குடிக்ககுடுத்தாங்க. அப்ப அவருக்கு தன்னோட முடிவு தெரிய ஆரம்பிச்சது சுய நெனப்பு தப்ப ஆரம்பிச்சது.

இதுக்கு நடுவில முத்து அங்க போய் சேர மத்தியாணமாயிருச்சு. அம்மாயிகிட்டபோய் வெவரத்தைச்சொன்னான் ஒடனே அவனோட அம்மாயி என்னா நு தெரியலயே காரணமில்லாம சொல்லி அனுப்பமாட்டாரே அப்பான்னு அழுது பொலம்ப ஆரம்பிச்சிட்டா. சரி ஒடனே கெளம்பலாம்னு யோசிச்சா மகன்காரன் வேலைக்கிப் போயிருந்தான் இனி 2 மணிக்கித்தான பஸ் மகாலுக்கு இருக்கு அங்க இருந்துதான ஊருக்குபோகனும்னு சொல்லிட்டு கதவைப்பூட்டிட்டு கெளம்பினா . இப்பக் கெளம்பினாலும் அங்கபோய்

சேர சாயங்காலம் ஆயிடுமேன்னு சொல்லிக்கிட்டே கிளம்பினா

பொன்னுச்சாமியோட சுய நெனைவு தப்பவும் சின்ன மககாரி இதுதான் சரியான சமையம் போய் உயில எடுத்துட்டு வா ரேகைய வைச்சிரலாம் நு சொன்னவன்ன மகன் காரன் உள்ளாற போய் உயில் பேப்பரை எடுத்துட்டு வந்தான் அப்பவும் அவர் கை மூடித்தான் இருந்தது கஸ்ட்டப்பட்டு அந்த க்கைய விரிக்க முயற்ச்சிபண்ணி விரிச்சா அவங்களுக்கு அதிர்ச்சி காத்திருந்துச்சு

இதுக்கு முன்னாடி ராத்திரி பொன்னுச்சாமி யோசனை பண்ணினார். எப்புடியும் நம்மல கொன்னுறப்போறாய்ங்க. அவங்களுக்கு வேண்டிய ரேகை நாம மயக்கமானதும் எடுத்துக்குவாங்க அதுக்கு என்ன பண்ணுறதுன்னு யோசனை பண்ணுனாரு அவருக்கு ஒரு யோசனை தோணிச்சி வலி அதிகமானாலும் வேற வழி இல்லன்னு முடிவு பண்ணி வெத்தல இடிக்கிற ஒரல எடுத்து தன்னோட பெருவிரலை உள்ளாறவைச்சி இடிக்கதொடங்கினார். வலி உயிர்போற மாதிரி இருந்தாலும் பொறுத்துக்கிட்டு கண்ணீர்வழிய விரல நச்சி செதச்சிட்டார். அத்தோட விரல இருக்கமா மூடிக்கிட்டு ராத்திரி பூராம் கண்ணீர் விட்டு அழுதுக்கிட்டு இருந்தார்

சின்ன மக அவரோட நைஞ்சுபோன பெருவிரலப்பாத்ததும் கோவமாயிட்டா. இவன் நேத்துச் சொன்னப்ப வே உசாரா யிருந்திருக்கனும் இப்ப அம்புட்டும் கெட்டுப்போச்சே நு பொலம்புனாஅதுக்குள்ள பொன்னுச்சாமிக்கி ஜன்னி வந்து இழுத்துக்க ஆரம்பிச்சது. கொஞ்சநேரத்துல அவருடைய உசிறு பிரிஞ்சது.

அப்ப சின்ன மக பெருங் கொரொலெடுத்து அழுகதொடங்குனா சொத்துபோச்சேன்னு வருத்தத்துல. அதே நேரத்துல பெரிய மக உள்ளாற வர அவளைப் பாத்துட்டு அக்கா அப்பா நம்மல விட்டுட்டுப்போயிட்டாருக்கான்னு அழுக எல்லாருமா ஒப்பாரி வைச்சி அழுகத்தொடங்குனாங்க

அப்ப வந்த பக்கத்து வீட்டுக்காராரு வந்து பாத்துட்டு பாவம் நேத்துக்கூட நல்லா இருந்தாரு. அவர்மேல பெருச்சாளி வந்து தவ்வுச்சு நு சொல்லிட்டுத் தச்சேலா கைப்பெருவிரலப்பாக்க அட பெருச்சாளி அவர் வெரலக்கடிச்சிருக்கு ஆரும் பாக்கலயான்னு சொன்னாரு

கூடவந்த முத்து கீழ உருண்டு கெடந்த வெத்தல இடிக்கிற ஒரல்ல ரத்தம் காஞ்சிருந்ததப் பாத்துட்டு நேத்து வெத்தல இடிச்சிட்டு கழுவித்தான வைச்சோம் அப்புறம் யாரு அதுல இடிச்சதுன்னு யோசிக்க தொடங்கினான் எல்லாரோட சேந்து அவனும் அழுகத்தொடங்கினான். அய்யாவ நெனச்சி. பொன்னுச்சாமி மொகத்துல ஏதோ முடிச்சிட்ட அமைதியும் நிம்மதியும் தெரிஞ்சது.

# முபாரக் கவிதைகள்

குழந்தைகளைப் பிரிந்து
வெளியூர் செல்லும் போது
அழுத குழந்தைகள்
சில நொடிகளில் சமாதானப்படுத்தப்படுகிறது…
பிரிவை எண்ணி
நாம் தான் அழுதுகொண்டே தொடர்கிறோம்..
நமக்கான பயணங்களை!
காலமும்
ஓடிக்கொண்டிருக்கிறது…
நானும்
ஓடிக்கொண்டிருக்கிறேன்…
உன் பிரிவு தரும்
வலிகள் மட்டும்
ஓட மறுக்கிறது என்னை விட்டு!

❍

நம் உரிமைகள் பறிக்கப்படும் போது
போராடலாம்
புரட்சி செய்யலாம்
உண்ணாநோன்பிருக்கலாம்…
எல்லாம் செய்த பிறகும்
செவிடாகவும் குருடாகவும் வாழும்
மனங்களை என்ன செய்ய முடியும்,
வலியோடும் வேதனையோடும் இப்படி ஒரு
கவிதை எழுதுவதைத் தவிர!

❍

குக்கர் விசிலடித்ததும்
குழந்தையின்
உறக்கம் கலைந்து விடுமென
பாத்திரத்தில் சமைக்கும்
அம்மாவின் கையிலிருக்கும்
காயங்கள் பேசிக்கொண்டிருக்கின்றன…
தாய்மையை!

❍

மழை மழையென
மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்து
விளையாடுபவர்கள் வசிக்கும்
வீதியில் தான்,
எப்போது நிற்குமென
கலங்கி நிற்பவர்களும் வசிக்கிறார்கள்!



# கஷ்டமான காலத்தில் வடபகுதியில் கடமையாற்றிய பாடசாலை அதிபர்களின் பதவியுயர்வுக்கு பணியாற்றிய செம்பியன்செல்வன்

உடுவை.எஸ்.தில்லைநடராசா

1960 களின் நடுப்பகுதியில் மாணவனாக நான் இருந்த காலத்தில் ''செங்கை ஆழியன்'', ''செம்பியன் செல்வன்'', ''செ.யோகநாதன்'' ஆகியோர் எழுதிய பல கதைகளை படித்துள்ளேன். பின்னர் 1967 ல் அரசாங்க நியமனம் பெற்று 1973 ல் வவுனியா பொலீஸ் அலுவலகத்தில் கடமையாற்றிய காலத்தில் செட்டிகுள உதவி அரசாங்க அதிபர் செங்கை ஆழியனோடு நெருக்கமாக பழகியுள்ளேன். பின்னர் கல்வி அமைச்சில் கடமையாற்றிய காலத்தில் செம்பியன் செல்வனைப் பற்றி கேள்விப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால் அவர் யாழ்ப்பாண கல்வி அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றினார்.

அக்காலகட்டத்தில் திடீரென ஒரு நாள் கல்வி அமைச்சர் என்னை அழைத்து, வடபகுதியில் கடமையாற்றும் கல்லூரி அதிபர்கள் பலருக்கு இலங்கை அதிபர் சேவையின் முதலாம் வகுப்புக்குரிய பதவி உயர்வும் நியமனமும் தாமதமாகிக் கொண்டு வருவதாகவும், அந்த விடயத்தை கவனிக்கும் படியும் எனக்கு கட்டளையிட்டார். அதாவது இலங்கை கல்லூரி அதிபர் சேவை குறிப்பின்படி இலங்கை அதிபர் சேவை இரண்டாம் வகுப்பை சேர்ந்த தகுதியானவர்களை, கொழும்பு கல்வி அமைச்சுக்கு அழைத்து நேர்முகப் பரீட்சை நடத்தி, எல்லா தகுதிகளும் இருந்தால் அவர்களை இலங்கை அதிபர் சேவையின் முதலாம் வகுப்புக்கு தரம் உயர்த்தலாம். ஆனால் அந்தக் காலத்தில் நிலவிய பிரச்சினைகள் காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அதிபர்களை நேர்முகப் பரீட்சைக்கு கொழும்புக்கு பல தடவைகள் அழைத்தும் சமூகம் அளிக்கவில்லை. எனவே அவர்களுக்காக ஒரு விசேட நேர்முகப் பரிட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்தும்படி கல்வி அமைச்சர் கட்டளையிட்டார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கல்லூரி அதிபர்கள் எல்லோருக்கும் ஒரு திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் உள்ள கல்விப் பணிமனைக்கு சமூகமளிக்கும்படி அறிவுறுத்தல் வழங்கிவிட்டு, உரிய அனுமதிகளை பெற்று விமானப்படை விமானம் ஒன்றில்

ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பி லிருந்து புறப்பட்டு நல்லூர் முத்திரை சந்தைக்கு அருகாமையில் இருந்த கல்விப் பணிமனையை மாலையில் சென்றடைந்தேன். இரவு அந்த கல்விப்பணிமனையிலேயே தங்கியிருப்பதற்கும் ஒழுங்கு செய்து கொண்டேன். திடீரென்று இரவு 9 மணி அளவில் கல்விப் பணிமனைக்கு வந்த விடுதலைப் போராளிகள் மற்றும் சில பட்டதாரிகளும் என்னை சந்தித்து பலர் வேலை இல்லாதிருக்கும் போது கடமையாற்றும் அதிபர்களை பதவி உயர்வு செய்வதற்காகவும் இளைப்பாறிய சில அதிபர்களை பதவியுயர்வு செய்வதற்காகவும் கொழும்பிலிருந்து வந்திருப்பதை அனுமதிக்க முடியாது. எனவே நாளை திங்கட்கிழமை இந்த கல்விப் பணிமனைக்கு முன்பாக பட்டதாரிகளாகிய நாங்கள் சத்தியாக்கிரகம் இருக்கப் போகிறோம்., நீங்கள் நேர்முகப் பரீட்சை செய்வதை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்தார்கள். எனக்கு தர்மசங்கடமாகப் போய்விட்டது.

ஓரளவுக்கு அறிமுகமான கல்விப் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் இராஜகோபாலனை(செம்பியன்செல்வனை) சந்தித்தேன். அவருடன் உரையாடி ஒரு முடிவுக்கு வந்தேன். எப்படியும் நேர்முகப் பயிற்சியை நடத்தி முடிவுகளை ஒரு கிழமைக்குள் கொழும்பு கொண்டு சென்று தீர்மானிப்பதாகவும் அறிவித்து நேர்முகப் புரட்சியை எப்படியாவது நடத்த வேண்டும் என்றும் முடிவு செய்தேன். அதன்பின் இராஜகோபாலனின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி அதிபரை சந்தித்து வேம்படி மகளிர் கல்லூரியில் திங்கட்கிழமை காலை நேர்முகப் பரீட்சை நடத்துவதாகவும் அது பற்றிய தகவல்களை இரவோடு இரவாக யாழ்ப்பாணம் “ஈழநாடு” பத்திரிகையில் பிரசுரிக்கச் செய்ததோடு நேர்முக பரீட்சை சபை உறுப்பினர்களும் சமூகம் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகளை செய்தேன்.

எல்லாவற்றையும் ஒழுங்கு செய்துவிட்டு மீண்டும் கல்வி பணிமனைக்கு இரவு 12 மணி அளவில் வந்தேன்., கல்விப் பணிமனையில் நுளம்புகளுக்கும் எறும்புகளுக்கும் மத்தியில் அரைகுறையாக தூங்கிக் கொண்டிருந்த என்னை அதிகாலை 4 மணி அளவில் இரவுக்காவலாளி எழுப்பி, பட்டதாரிகள் விடிய ஆறு மணியிலிருந்து கல்விப் பணிமனைக்கு முன் மறியல் செய்ய ஆயத்தப் படுத்துவதாகவும், நான் அதற்கு முன் கல்வி பணிமனையை விட்டு வெளியேற வேண்டும் அல்லது அவர்கள் வெளியேற அனுமதிக்க மாட்டார்கள் என்றும் தெரிவித்தார். நான் அவசரம் அவசரமாக வெளியேறி வேம்படி மகளிர் கல்லூரிக்கு சென்றேன். அங்கும் வேம்படி மகளிர் கல்லூரி காவலாளியிடம் என் நிலையைச் சொல்லி செம்பியன் செல்வனுக்கு என்னைப் பற்றி அறிவிக்கும்படி சொன்னேன்.

வேம்படி மகளிர் கல்லூரி முகப்பில் காத்திருந்த போது செம்பியன் செல்வன் அதிகாலையே வேம்படி மகளிர் கல்லூரிக்கு வந்து, நேர்முகப் பரீட்சை நடத்துவதற்குரிய எல்லா ஒழுங்குகளையும் செய்து உதவினார். நேர்முகப் பரீட்சை நடந்தது., ஒரு சிலர் தேவையான சான்றிதழ்களை கொண்டு வரவில்லை. அவர்களிடம் அந்த சான்றிதழ்களை சனிக்கிழமைக்கு முன்பாக கொண்டு வந்து தரும்படியும், அவற்றை கொழும்புக்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும் தெரிவித்தேன்.

இப்படி இரண்டு நாட்கள் நேர்முகப் பரீட்சை நடத்தும் போது பயங்கரமான செய்திகள் பரவியது. யானையிறவு பாதுகாப்பு முகாமை போராளிகள் தாக்கி இறந்த சடலங்கள் பலாலியை நோக்கி கொண்டு வரப்படுவதாகவும் தகவல் பரவியது.

எப்படியோ என்னை சமாளித்துக் கொண்டு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கல்விப்பணிமனை வாகனத்தில் சாரதி மற்றும் சிற்றூழியருடன் பலாலி விமான படைத்தளத்திற்கு சென்று பெருத்த சிரமத்தின் மத்தியில் சடலங்கள் காயம் அடைந்தவர்களின் உடல்களோடு தனி ஒருவனாக பலாலியிலிருந்து கட்டுநாயக்கா விமானப்படை நிலையத்திற்குச் சென்றேன். அங்கும் நிலமையை சமாளித்துக் கொண்டு ஒருவாறாக தப்பி கொழும்புக்குச் சென்றேன்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்த அத்தனை அதிபர்களுக்கும் அவர்களது தகுதிகளை பார்த்து அவர்களை இலங்கை கல்லூரி அதிபர் சேவை முதலாம் வகுப்புக்கு பதவியேற்றம் செய்து உரிய முறையில் அரசாங்கத்தின் அனுமதியையும் பெற்று, அந்த நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கும், நான் பாதுகாப்பாக கொழும்பு செல்வதற்கும் உதவிகள் புரிந்த செம்பியன் செல்வனை (இராஜகோபாலனை) இன்றும் நன்றியுடன் நினைக்கின்றேன்.

ஏனென்றால் அவரது உதவி இல்லாவிட்டால்- அந்த நேர்முகப்பரீட்சை நடந்தி ருக்காவிட்டால் சுமார் நூற்றுக்கும் அதிகமான அதிபர்கள் இரண்டாம் தர அதிபர்களாகவே இருந்திருப்பார்கள். முதலாம் வகுப்பு பதவி உயர்வு கிடைத்திருக்காது. எனவே உரிய முறையில் யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை நடத்தவும், அவர்களது சான்றிதழ்கள் மற்றும் சாதனங்களை பெற்றுக் கொள்ளவும் அவர்களது பதவி உயர்வுக்கும் சம்பள அதிகரிப்புக்கும் உதவிகள் செய்தவர் செம்பியன் செல்வன் என்று புகழ் பெற்ற எழுத்தாளர் இராஜகோபாலன். அவரது உதவிகளை இலங்கை கல்லூரி அதிபர்கள் மட்டுமல்ல- கல்வியாளர்கள் எல்லோரும் என்றும் நினைவில் வைத்திருக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.



# உன் கண்ணில் நீர் வழிந்தால்!

கிறிஸ்டி நல்லரெத்தினம்

அந்தக் குடியிருப்பில் ஞாயிறு என்றும் போல் அமைதியாகவே விடிந்தது. செங்கல்பட்டு சந்தையின் பின்னால் அமைந்திருந்த அக்குடியிருப்பில் கல்வீடுகள் இல்லை. தொடர்மாடிக் கட்டிடங்களின் எச்சங்களாக அடிமட்ட வாழ்க்கைப் போராளிகள் நாள் நகர்த்தும் சந்து வீடுகள் அவை.

இங்கும் உரிமைப் போர்கள் நிகழ்வதுண்டு.

இப்படி வெடிக்கிறது போர்........

“ஏயா, இப்பிடியா பச்சப்புள்ளைய போட்டு அடிப்பாக. பாரு, வரி வரியா கம்பளி புழு மாதிரி சும்மா வீங்கியில போச்சு. என்ன மனுஷன்யா நீ? புள்ள என்னா குத்தம் செஞ்சிதாம்? ஆசைக்கு ஒரு பொம்மைய தொட்டதுக்கு.....”. அதற்கு மேல் வார்த்தைகள் கண்ணீராய் மாறி பொன்னம்மாளின் உலர்ந்த கன்னங்களை நனைத்தன.

“உம் பேத்தி சனியன நீதா கொஞ்சி கொஞ்சி..... “நாக்கை மடித்து கடித்துக் கொண்டு, ஒரு கோழிக்குஞ்சு தாய் கோழியின் செட்டையின் கீழ் அடைக்கலமான பாவனையில், பொன்னம்மா பாட்டியின் சேலைத் தலைப்புக்கள் ஒளிந்து கொண்டு விக்கி விக்கி அழும் மகள் சாருலதாவை நெருங்கினான் மாரிமுத்து. பொம்மை கிடைக்கவில்லையே என்ற தன் பொசுக்கப்பட்ட அசையை இன்னும் அவள் நினைத்து ஏக்கமாய் பார்ப்பது மாரிக்கு ஒரு பொருட்டாக தெரியவில்லை.

‘என்னமா அந்த நாயி கேட்டான்? “ரோசம் இருந்த உம் புள்ளைக்கு வாங்கி குடுடா சோம்பேறி. எம் புள்ள பாப்புளைய இனி தொட்டா அவ தோலு உரியும்.”

எதிர் வீட்டு பிச்சை தன் நாலு வயது மகளை வைதது மாரிக்கு பெரிதாய் படவில்லை. இத்தனைக்கும் அப்படி ஒன்றும் பெரிய தவறு நடந்து விடவில்லையே. சாருலதா பிச்சையின் குழந்தையின் பொம்மையை பிடுங்கிக்கொண்டு வந்ததால் வந்த வினை. ஆனால் மகளின் செயலால் பிச்சை முன் தன் மானம் மண்டியிட வேண்டியதாயிற்றே என்ற கசப்பு அவனை உறுத்திற்று. பிச்சைக்கும் தனக்கும் உள்ள நெடுநாள் குரோதப் போட்டியில் இத் தலைகுனிவு பிச்சைக்கு ஒரு புள்ளியை வழங்கியதாகவே அவனுக்கு பட்டது. இந்த தெருச்சண்டையை வேடிக்கை பார்த்த முகமற்ற மனிதர் முன் தான் சிறுமைப்பட்டதை எண்ணி வெதும்பினான் மாரி.

பல வருடங்களுக்கு முன் நடந்த ஒரு சாதாரண வேலிச் சண்டை புரையேறி இரு குடும்பங்களுக்கும் நடுவே ஒரு நிரந்தர விரிசலை ஏற்படுத்தி வைத்தது. கசப்பான முறுகல்களின் சாரம் சிலேற்றில் எழுதப்பட்டு சீட்டுக்கட்டாய் இவர்கள் மனதில் அடுக்கி வைக்கப்பட்டு உரசல்களின் போது மீண்டும் அவை இவர்கள் கண்களின் முன் திணிக்கப்படும் போது எழும் வலி கொடியது. அப்போது பேசப்படும் வார்த்தைகளின் வலிமை எவரையும் சிறுமைப்படுத்தும். தினக்கூலியில் வாழும் சாமானியர்களின் வாழ்வில் இது ஒன்றும் புதிதல்லவே?

நான்கு வருடத்திற்கு முன் மாரியின் மனைவி மகப்பேற்றில் மரித்த சோகம் அவனை விட்டுப் போகவில்லை. இரத்தப்போக்கை கட்டுப்படுத்த முடியாமல் அவள் உயிர் பிரிந்த சோகம் மாரியின் ஆத்மாவையே பிராண்டி எடுத்து எங்கோ தூர எறிந்து விட்டது. அவன் முகத்தில் குடியேறிய கவலைக் கோடுகள்.....அவை வறுமையோ வயதோ வரைந்த வரிகள் அல்ல. மனைவி சாருலதாவின் பிரிவால் அவன் நெஞ்சில் சாத்திய சோகச்சுமையின் வடுக்கள்.

செருப்பை கால் மாற்றி அணிந்து நடப்பவனின் சங்கடம் மாரிக்கு .....ஒவ்வோரு அடியையும் நினைத்து நிதானித்து வைத்து நகரும் நத்தை வேகம் அவன் வாழ்வில்.

அவனுக்கிருந்த எல்லா சுகங்களையும் மனைவி உறிஞ்சி எடுத்துப் போனாளோ என்ற ஒரு பிரமை.

குழந்தையை கையிலேந்தி நார்ஸ் ‘என்னா பேரு வைக்கீக?’ எனும் கேள்விக்கு கிழவி முத்திக்கொண்டு ‘அவ அம்மா பேரயே வச்சுக்க..... மகராசி, பச்ச புள்ளய பெத்து கையில கொடுத்துட்டு போயிடிச்சி. அவ போனாலும் பேரு நிக்குமில்ல’. கிழவியின் வாதம் மாரிக்கும் சரியாகவேபட்டது.

‘சாசாருலதாதாதா...’. கிழவி பெயரை ரப்பராக இழுத்து நீட்டி பொக்கை வாய் நிரப்பி குழந்தையின் காதருகே குனிந்து ஒரு இரகசிய மந்திரம் போல் மெதுவாய் ஓதினாள்.

நாட்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி...... ஓ! நான்கு வருடங்கள் என்னமாய் ஓடிவிட்டன?

மாரிக்கு மனைவி விட்டுச்சென்ற வெற்றிடம் இன்னும் தரிசு நிலமாகவே பட்டது. ‘சாரு, நீ என் உசிரு புள்ள’ என மனைவியை அணைக்கும் போது இருந்த அந்த நேசத்தின் சூடு இன்றில்லை.

அவளிடம் பகிர்ந்த அந்த அன்பு இன்று தேங்கிக் கிடக்கிறது. அது அவன் நெஞ்சை நிறைத்து தொண்டை குழியை அடைத்து கண்வழி வழிந்து கன்னங்களை நனைப்பதுண்டு. சோகம் என்பதும் செல்ல இடமில்லாத அன்புதானே!

ஆனால் அந்த காதலை அன்பாக உருமாற்றி தன் குழந்தை மீது செலுத்த அவன் மனம் மறுத்தது. ‘ என் சாருவோட உயிர குடிச்ச இந்த சனியன்......’.

கிழவி குழந்தையை ‘சாரு..., சாரு குட்டி... என் குஞ்சு’ என்று பல பெயர் சொல்லி கொஞ்சினாலும் அவனுக்கு அவள் சாருலதாதான். தன் சாருவுக்கு இருந்த அந்த ஸ்தானத்தில் வேறு ஒருவருக்கும், பெயரளவில் கூட, இடமில்லை.

மனைவி சாருவை நினைக்கும் போதெல்லாம் ஐந்து வருடங்களுக்கு முன் அவளை முதலில் சந்திந்த நினைவை அசை போடுவான். மாரி ஒன்றும் பெரிய குமாஸ்தா வேலை செய்து மாசச்சம்பளத்தில் நாட்களை நகர்த்துவபன் அல்ல.

செங்கல்பட்டு ரெயில் நிலையத்திற்கு முன்னால் உள்ள லக்ஷ்மி விலாசின் கக்கத்தில் பிளாஸ்டிக் துப்பட்டியில் கூரை கட்டி இணைத்து கடை என்ற பெயரில் இயங்கும் ‘டெயிலர் சாப்’. அங்கு ஒரு தையல் மெஷின், துணி அடுக்க கண்ணாடி போட்ட ஒரு அலுமாரி, வாடிக்கையாளர்கள் ‘ஃபிற் ஒன்’ பார்க்க ஒரு பலகை மூடிய மறைவிடம்.....லக்ஷ்மி

விலாசின் முதலாளியின் பரந்த மனதில் மாரிக்கும் ஒரு சின்ன இடம். தையல் மெஷினுக்கு மேல் மினுங்கும் மின்குமிழக்கு மட்டும்தான் 'கறண்ட் பில்' என்ற பெயரில் சிறு வாடகையை முதலாளி மாசா மாசம் வசூலித்துக் கொள்வார். தினமும் வேலை முடிந்ததும் வெளியே கிடக்கும் துணிமணிகளை அலுமாரிக்குள் போட்டு மூடி அதையும் மெஷினையும் மெதுவாய் தள்ளி கடைக்குள் வைத்த பின் கடையை பெருக்கி சுத்தம் செய்து 'வரேன் சாமி' என்று விடை பெற்று வீதியில் இறங்கி செங்கல்பட்டின் சமூகக்கும்பலுக்குள் கலந்து மறைவான்.

அவன் இவற்றை விரைவாக செய்து கடையை விட்டு வீதிக்கு வந்தாக வேண்டும். அதற்கு காரணம் இல்லாமல் இல்லை. 'மாரி, என்னா அவசரம்.... உனக்கென்ன பொண்டாட்டியா குடும்பமா? சும்மா ஒரு ஐஞ்சு நிமிஷம் இருந்துண்ணு போறது.... "என்று முதலாளி பேச்சுத்துணைக்கு பிடித்துக் கொள்வார். மாரிக்குத் தெரியும் அந்த ஐந்து நிமிடங்கள் ஐம்பது நிமிடங்களாய் நீளும் என்று. முதலாளி ஒரு நல்ல கதை சொல்லி. நல்ல வாசிப்பனுபவம் உள்ளவர். மாரி எட்டாம் வகுப்புடன் பள்ளிப் படியை மறந்தவன். ஆனால் முதலாளி தன் கல்லாப்பெட்டியில் இருந்தவாறு படிக்கும் இலக்கிய நயமுள்ள புத்தகங்களை பார்த்திருக்கிறான். "மாரி நீ புதுமைப்பித்தன் படிக்கணும்டோய். என்னா துணிவா மனுஷன் எழுதிவச்சான்? அது முப்பதுகளில எழுதுதினது கண்டியோ.... என்னா எழுத்து.... என்னா துணிவு" என சிலாகித்துக் கொள்வார்.

மாரியின் காதுகள் முதலாளியின் வார்த்தைகளின் பாதியை கிரகித்தாலும் கண்கள் கடைச்சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்திலும் அதன் இரு மருங்கிலும் மாட்டியிருக்கும் புதுமைப்பித்தன், பாரதி, ஜெயகாந்தன் படங்களிலும் பதிந்திருக்கும். தன் இலக்கிய நாட்டத்தை ஊருக்குச் சொல்லவே அவரின் இந்த சோடனை. ஆளுமை, படைப்பாளி, இலக்கிய சந்திப்பு, வாசிப்பனுபவம் போன்ற சொற்களை தம் பேச்சில் ஆங்காங்கே தூவி தானும் ஒரு இலக்கியவாதி என்ற காட்டிக் கொள்வார்.

"இந்தா இந்த வடைய கடிச்சுக்கோ" என தட்டை தள்ளி அவர் கல்லாப்பெட்டிக்கு அருகில் இருந்த கதிரையில் அவனை அமர்த்தி இறுதியாய் படித்த சிறுகதையொன்றை சொல்லத் தொடங்குவார். அவருக்கு காலம் ஒரு பொருட்டே அல்ல. கடையின் மேல் மாடியில் குடியிருப்பெனில் அது பற்றி கவலை ஏனாம்?

மாரிக்கு சாதகமானது ஒன்று இல்லாமல் இல்லை. முதலாளி நாவல்கள் படிப்பதில்லை.... அவர் வாசிப்பு சிறுகதைகளுடன் சரி. எனவே முதலாளியின் 'கதை கேட்போம் வாரீர்' அங்கங்கள் ஒரு மணி நேரத்துடன் முடிவுக்கு வந்துவிடும்.

"பொன்னகரத்தின்ட முடிவில பித்தன் என்னமா கேட்டான் கண்டியோ?.... என்னா புரட்சி!...' என்னமோ கற்பு கற்புணு கதைக்கிறீங்க... இதுதான்யா பொன்னகரம்' அப்பிடீனு போட்டானே ஒரு போடு. இப்போ இப்படி எழுதிப் பார்க்கட்டும்... கொழுத்திப்போடுவானுக!" என விமர்சனத்தை முடிப்பார்.

'ஜெயகாந்தனும் கொஞ்சம் துணிவாத்தான் எழுதிவச்சான். 'புது செருப்பு கடிக்குமுணு' ஒரு கத.... கல்யாணமாகி முத இரவில மாப்பிள கட்டின பொண்டாட்டிய விட்டுணு வேற பொண்ண தேடி போனானா... அந்த பொண்ணு கால் விரல்ல காயத்துக்கு எண்ண தேச்சிண்டு சொல்லறா... "புது செருப்பில... அதான் கால கடிச்சிரிச்சி". மாப்பிளைக்கு மூளையில செருப்பால அடிச்சாப்பல புத்தி வந்திடிச்சா.... சைக்கிளல ஏறி ஊட்டுக்கு போறான்.... அதான்யா கத....... கத பேரிலேயே கத முழுசா அடங்கிசிரிச்சில்ல?" என்று கேட்டு விட்டு பதிலுக்காய் காத்திருக்காமல் "மாரி, இதெல்லாம் படிச்சிப்பாத்து அனுபவிக்கணும் மாரி" என்பார்.

"சும்மா எழுதிக்குவிச்சா எல்லரும் படிப்பானுகணு நினைக்க வேணாம் மாரி. இலங்கையில மல்லிக ஜீவாணு எழுத்தாளரு..... புத்தகத்த அச்சடிச்சு தோள்ல சுமந்து இலக்கியம் வளர்த்தாரு கண்டியோ?"

முதலாளி மறைந்த படைப்பாளிகளை மட்டுமல்ல சமகாலத்தில் வாழும் எழுத்தாளர்களையும் மாரிக்கு அறிமுகப்படுத்த தவறுவதில்லை.

"மாரி, நவீன இலக்கியமெங்கிறது மரித்துப் போகல...... இப்போ ஜெயமோகன்னு ஒருத்தர் நல்லா எழுதுறாரு. அவரோட 'குருவி' எங்கிற கதயில் மாடன் பிள்ளைனு ஒரு எலட்றீசன். கத கடைசீல ஒரு தூக்கணாங் குருவி ஒயரில் பின்னின கூட்ட நெஞ்கோட அணைச்சிணு கதறி அழுது ஒரு புது மனுஷனா மாறி....ஒரு சடப்பொருளும் மனுஷாள மாத்தலாமுணு தெரியுமோ?' என கேள்வியிலேயே கதை முடிப்பார்.

மாரியை வாசிப்பின் பக்கம் சாய்த்துவிட அவர் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தாலும் அவனும் ஒரு நாள் வாசகனாவான் என்ற நம்பிக்கை அவருள் இருந்தது.

நாள் முழுவதும் குனிந்த தலை நிமிராமல் முயலைத் துரத்தும் வேட்டை நாய் போல் துணி மீது நூல்கோலம் போட்டு ஓடும் ஊசியின் நடனத்தை கண்ணயராமல் பார்த்துக் கொண்டிருப்பவனுக்கு வாசிப்பில் எப்படித்தான் காதல் வரும்? ஒரு டெயிலரின் தலைகுனிவில் கைகோர்த்து வரும் கழுத்து வலியையும் கண்ணயர்வையும் புரிந்தவரில்லை. ஆனால் வேலை முடிந்ததும் நடைபெறும் முதலாளியுடனான இலக்கியப்

பகிர்வு அவனுக்கு ஒரு கட்டாய விடிவாகவே பட்டது.

ஐந்து வருடங்களுக்கு முன் தீபாவளிக்கு ஒரு பிளவுஸ் தைப்பதற்காய் சாருலதா மாரியின் கடைக்கு வந்ததை கல்லாப் பெட்டியில் இருந்தவாறே முதலாளி கவனித்திருந்தார். பரந்த நெற்றியின் நடுவில் ஒரு சிறு கரும்பொட்டு, துரு துரு என எதையோ தேடும் கண்கள்...ஒற்றைப்பின்னல் கட்டிய சடையில் சொருகிய மல்லிகைச் சரம். தொட்டால் ஒட்டிக் கொள்ளும் சந்தண நிறம்.

“டெயிலர்ண்ணா, துணி எடுக்க லேட்டாகிடுது. தீபாவளியும் வந்திற்று... இத முடிச்சித்தர ஏலுமா?”

தலையை நிமிர்த்தி பார்த்த மாரிக்கு அவள் கண்களில் இருந்த அந்த தவிப்பை உணர முடிந்தது. கீழே இழுத்துக் கொண்ட அவள் உதடுகளில் இருந்த தாபம் அவனுக்குப் பிடித்திருந்தது.

“டெயிலரண்ணா இல்ல..... மாரி.... மாரி” என கூறி தம்மிடையே இருந்த உறவை ஒரு புன்முறுவலுடன் தட்டி நிமிர்த்திக்கொண்டான்.

அதை புரிந்தது போல் தலையை இருபுறமும் அசைத்து ஒரு புன்சிரிப்பை உதிர்த்தாள் சாருலதா.

அவர்கள் உறவின் முதல் அங்கீகர முத்திரை அது.

முதல் சந்திப்பில்.... அந்தக் கணத்தில்.... ஒரு தீப்பொறிபோல் தோன்றி மறையும் அந்த மகிழ்ச்சிக் கண்ணிவெடி அவன் - அவள் மட்டுமே புரிந்து அனுபவிக்கும் ஒன்று. அக்கணம் பற்றி அவர்கள் இன்னும் எத்தனையோ முறை நனவிடை தோய்ந்தாலும் ஒரு மத்தாப்பு, ஒளி எச்சம் உதிர்த்து வான் ஏறி வெடித்து விரிந்து ஒரு அரக்கனின் குடை போல் வண்ணத்தூவானத்தை வானில் பரப்பி மறையும் அந்த மகிழ்ச்சிப் பிரவகம் ஒரு முறைதான் எவர் வாழ்விலும் தோன்றி மறையும்! அந்த மகா மத்தாப்புக்காய் ஏங்கியவர் பலர். சிலர் வாழ்வில் தீக்குச்சி தொடாத திரியாய் அது மறைந்து போவதுண்டு.

தீபாவளியைத் தாண்டியும் மாரியைப் பார்க்க சாருலதா வருவதை முதலாளியின் கழுகுக்கண்கள் கவனிக்கத் தவறவில்லை.

ஒவ்வொரு சந்திப்பிலும் சாருலதாவின் கைகளில் இருக்கும் புத்தகங்களையும் அவர் பார்த்திருந்தார்.

“என்னா மாரி, அந்த பொண்ணு தினம் வர்ராப் போல?.... ஏதுண்ணா நமக்கிட்ட சொல்லலாமில்லையோ?” என தூண்டிலைப் போட்டார்.

‘’இல்லீங்க..... சும்மா ....’’ ஆணுக்குரிய அரை வெட்கத்துடன் ஒரு அசட்டுச் சிரிப்பை உதிர்த்துவைத்தான் மாரி.

முதலாளி அடுத்த கேள்விக்கணையை தொடுக்கும் முன்னரே “சாரு நாவல் எல்லாம் படிக்குமுங்க..... பார்த்தசாரதி, அகிலன் ... “

“ஓ! சாருவா பேரு?..... நாவல் படிக்கற பொண்ணுணா உனக்கு கத சொல்ல ஆள் கிடைக்கிரிச்சினு சொல்லு” என்று ஒரு கண் சிமிட்டலுடன் அவர்கள் உறவை அங்கீகரித்தார் அவர்.

நாவல் படிப்பதற்கு நேரத்தின் அர்ப்பணிப்பு தேவை என்பது அவர் வாதம். நாவலின் கதாபாத்திரங்களுடன் ஒன்றித்து ஒரு சகபயணியாய் அவர்களுடன் பயணித்து அலைக்கழிந்து அவர்களின் சுக துக்கங்களில் மூழ்கி எழுந்து ஒரு உணர்ச்சிக்குழம்பில் குளித்து வரும் அனுபவம் உன்னதமானது என்பார்.

ஒரு வாசிப்பனுபவம் உள்ள ஒரு துணை மாரிக்கு கிடைத்ததில் முதலாளிக்கு ஒரு பெருமை. மனித நேயத்தை அளவிடும் அளவுகோல் அவருக்கு வாசிப்பு மட்டுமே. படிப்பும் பட்டங்களும் அவருக்கு கடைசி வாங்கு வாசிகள்.

மணமான புதிதில் மாரி கடையை மூடிவிட்டு முதலாளியின் ‘கதை நேரத்தை’ குறுக்கிக் கொண்டு செங்கல்பட்டு சந்தையின் பின்னால் அமைந்திருந்த சந்தில் நுழைந்து மறைவான். போகும் வழியில் சாருவிற்காய் ஒரு மல்லிகைச்சரத்தை வாங்கத் தவறுவதில்லை. “இந்தா புள்ள..... வச்சுக்க” என அவன் கையில் அதைத் திணித்து அவள் அதை லாவகமாய் கூந்தலில் சொருகுவதை பார்த்து “ஆயிரங் கண் போதாது செல்லக் கிழியே......” என ஒரு நாடகக்காரனின் பாணியுடன் கைகளை உயர்த்திப் பாடி அவளை கட்டிக் கொள்வான். அவன் பிடிக்குள் சாரு சங்கமமாவாள்.

இவ்வகை குட்டிக்குறும்புகள்தானே இவர்களைப் போன்ற சாமானியர்கள் சிமிழில் அடைத்துவைத்து அவ்வப்போது தூவிக்கொள்ளும் இன்பப்பொடி?

X. X. X. X X X
X X X
X X

“ஏம்பா, இண்ணைக்கி என்னா தேதினு தெரியுமில? இண்ணையோட உம் மகளுக்கு ஐஞ்சு வயசு ஆயிடிச்சு. இண்ணைக்கு ஞாயிற்று கிழம.... உனக்கும் கட மூடி.... கொழந்தைய எங்காச்சும் கூட்டிண்ணு போறது..... பாவம்... பச்ச புள்ள... பொறந்த நாள் இல்ல?” எனும் கேள்வி நிரம்பிய தன் வேண்டுதலை மாரியிடம் நாசுக்காக சொல்லி

அவன் பதிலிற்காய் காத்து நின்றாள் கிழவி. தன் மகன் தன் வேண்டுதலை நிராகரித்துவிடக் கூடாதே என்ற தாபத்தை அவள் கண்கள் சொல்லிற்று.

"எங்கா போறதாம்?" என்ற மாரியின் பதில் கேள்வி பொன்னம்மாவின் கண்களில் ஒரு நம்பிக்கை கீற்றை விதைத்தது.

"அவதான் ஆன, சிங்கம், புலி எல்லாம் பாக்கணும்னு ஒரே சொல்றா... மிருகக்காட்சி காட்ட கூட்டிப் போறது?"

கிழவியின் பதில் மாரிக்கு சரியாகவே பட்டது.

வாழ்வின் மடிப்புகளுக்குள் ஒளிந்துள்ள அந்த ஈரத்தின் வலிமை என்றும் ஒரு புதிர்தான்! அது அவனை ஆட்கொண்டு அவனின் மூடப்பட்ட இதயத்தின் கதவுகளை சாவியின்றியே அகலத் திறந்து குடிபுகுந்ததை அவன் அப்போது உணரவில்லை!

கிழவிக்கு எல்லை மீறிய மகிழ்ச்சி.

"சாரு.... சாரு குட்டி.....அப்பாவோட சிங்கம் ஆன எல்லாம் பாக்க போயிற்று வாம்மா............ புதுச்சட்ட போட்டு தல சீவி .... பொறந்த நாளில்ல.... பொறந்த நாள்" என அவசரமாய் ஆயுத்தங்களை செய்யத் தொடங்கினாள். தன் மகன் மனம் மாறும் முன் அவர்களை பஸ் ஏற்றி அனுப்பிவிட வேண்டுமே என்ற அவசரம் அவளுக்கு.

மாரியும் மகளும் செங்கல்பட்டு பஸ் ஸ்டாண்டிற்கு நடந்து செல்வதை வீட்டு வாசலில் நின்று பர்த்து 'புள்ள கைய புடிச்சி கொண்டுபோப்பா' என நாக்கு நுனியில் வந்த வார்த்தைகளை வெளியே விடாமல் விழுங்கி சீரணித்துக்கொண்டாள்.

சென்னை பஸ் ஏறி வண்டலூரில் இறங்கி அறிஞர் அண்ணா விலங்கியல் பூங்காவினுள் நுழையும்வரை மாரி அமைதியாகவே எண்ணங்களில் லயித்தவனாய் ஒரு நடைபிணம் போல் நிழல் நகர்த்தினான். அவனின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் சாருலதா ஓட்டமும் நடையுமாக அவனை பின்தொடர்ந்தாள்.

இன்னும் இரு நாட்களில் அவன் மனைவி குழந்தை சாருலதாவைப் பெற்றெடுத்து அவன் கையில் கொடுத்து விட்டுப் பிரிந்த நாளின் ஐந்து வருட பூர்த்தி. என்னமாய் இருந்திருக்க வேண்டிய வாழ்க்கை இப்படியானதே எனும் வலி அவனை சுட்டுப்பொசுக்கியது.

ஒரு பொடிநடையாய் இருவரும் விலங்கியல் பூங்காவுக்குள் நுழைந்தனர்.

குழந்தை சாருலதா மிருகங்களின் விசித்திர தோற்றங்களை தன்னை மறந்து லயித்து முக பாவனைகள் செய்து ஒரு இன்பக் கூத்தாடலில் மூழ்கியிருந்தாள்.

அவளின் லயிப்பில் கலந்து கொள்ளாமல் ஒரு சகபயணியைப் போல் அவன் அவளுடன் நடந்து சிம்பன்சி வகை மனிதக்குரங்குகள் இருக்கும் காப்பகத்தின் முன் வந்து நின்றான்.

அரைவட்டமாய் ஒரு தீவு போல் சீமேந்து அரை சுவர் எழுப்பிய களம். அதன் எல்லையை சுற்றி உள்ள இடைவெளியில் தேங்கிநிற்கும் பாசிப்பச்சை கலந்த நீர் அகழி. அந்த வானரங்கள் பார்வையாளர்களை நெருங்காமல் இருப்பதற்காகவே இந்த ஏற்பாடு. தீவின் நடுவில் ஒரு பெரிய மரம். அதன் கீழ் அவை விளையாடிக்கழிக்க கூரை போட்ட கம்பி மேடைகள், கயிற்று ஊஞ்சல் மற்றும் மரக்கட்டை இருக்கைகள். அவைகளின் குடியிருப்பு அந்த அகழியில் அக்கரையில் இருந்த சீமேந்து பூசிய போலிக் குகைகள். தீவில் இருந்து அகழியை கடந்து குகைக்குள் செல்ல ஒரு மரக்கட்டைப்பாலம். இதுவே இவர்கள் உலகம்.

மூன்று குரங்குகள் ஒரு குடும்பமாக சோம்பலுடன் 'இங்கு பார்ப்பதற்கு ஒன்றுமில்லை' என்ற பாவனையில் அரைத்தூக்கத்தில் மரத்தின் கீழ் அமர்ந்திருந்தன.

சாருலதா கண்களை அகலத்திறந்து அவற்றின் ஒவ்வொரு அங்கஅசைவையும் கிரகித்துக்கொண்டிருந்தாள். அங்கிருந்த பெயர் பலகையில் அப்பா, அம்மா குரங்குகளின் பெயர்கள் கொம்பே, கோகோ எனவும் குட்டிக் குரங்கு பெயர் சுட்டி எனவும் எழுதி மாட்டியிருந்தார்கள்.

அவற்றிற்கான மதிய உணவு பகிரும் நேரமது. திடீரென வளர்ந்த இரு விலங்குகளும் உஷாராகி எழுந்து நின்று கைகளை நெஞ்சிலடித்து உதடுகளை சுருக்கி தம் பழுப்பு நிற பற்களைக் காட்டி ஆட்டம் போட்டன. தமக்கு படைக்கப்பட இருக்கும் பழங்களின் நறுமணம் நாசியில் நுழைந்து மேடையேற்றிய ஆனந்த நர்த்தனம் அது. சுட்டிக்கு இந்த சடங்கு புரிந்ததாய் தெரியவில்லை. குகையின் கதவுகள் திறக்கப்பட கொம்பேயும் கோகோவும் ஒரு பாய்ச்சலில் உள்ளே நுழைந்து மறைந்தன. அந்த கணத்தில் இணைப்புப் பாலத்தில் நின்று ஒரு குட்டிக்கறணமடித்து தன் குதூகலத்தை காண்பித்த சுட்டி கால்தவறி கீழே இருந்த அகழியில் தொபீர் என விழுந்து நீரில் மறைந்தது. அப்போது எழுந்த அந்த சப்தம் கோகோவின் காதுகளுக்கு எட்டியிருக்க வேண்டும்.... தொப்பிள்கொடி உறவல்லவா? குகை வாசலில் தோன்றி சுட்டி எங்குதான் போயிருக்கும் என கண்களால் அளவெடுத்து பின் கீழே குனிந்து நீரில் தத்தளிக்கும் தன் செல்வத்தை காப்பாற்றும் நோக்குடன் மேலிருந்து அகழிக்குள் ஒரு நீண்ட கீச்சல் ஒலியெளிப்பியபடி பாய்ந்து நீருள் மூழ்கி மறைந்தது.

பார்வையாளர் எல்லோரும் தம் கண்முன் விரியும்

அந்த பாசம் பிணைப்பின் புதிய பரிமாணத்தின் சாட்சிகளாய் வாயடைத்து நின்றனர்.

சிலர் ' சாப்பாடுண்ணா பிள்ள என்ன குட்டி என்ன?' என சமூக நீதி பேசினர்.

எங்கும் அமைதி!

அந்த சில வினாடிகள் மணிகளாக தோன்றிற்று!

அகழி நீரில் ஒரு அலைவட்டம்!

மெதுவாய் தெப்பமாய் நனைந்த கோகோவின் தலை முதலில் தோன்றிற்று.

கோகோவின் கைகளில் தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்துவிட்டதுபோல் சுட்டியின் ஈர உடல் ஒரு பந்தாக சுருண்டு கிடந்தது, ஒரு பொக்கிஷத்தை கைகளில் சுமக்கும் கவனத்துடன் மெதுவாக கோகோ அகழியை விட்டு வெளியேறி அந்த புல்தரையில் தன் செல்வத்தைக் கிடத்தி எழுந்து நின்று நெஞ்சிலடித்து ஒரு கர்ஜனையை எழுப்பிற்று.

கைகளில் பப்பாளிப் பழங்களை நெஞ்சுடன் அணைத்தவாறு குகை வாசலில் தோன்றிய கொம்பேவின் கண்களுக்கு புல்தரையில் கிடக்கும் தன் செல்வத்தின் ஈர உடலையும் அதன் அருகில் தெப்பமாய் நனைந்த மேனியுடன் எக்காளமிடும் தன் துணையின் இயலாமையையும் பார்த்து நிலமையை புரிந்து கொண்டது.

ஒரே பாய்ச்சலில் புல்தரைக்கு வந்து 'உவ்... உவ்... உவ்... உவ்' என ஒலியெமுப்பி ஒரு தந்தையின் கரிசனையுடன் தன் செல்வத்தை ஒரு பஞ்சுமிட்டாயை சுமக்கும் மென்மையுடன் தூக்கி தன் நெஞ்சுடன் அணைத்துக்கொண்டது. அந்த அன்பின் சூடு அந்த காப்பக வேலியை தாண்டி பல இதயங்களை தொட்டுக்சென்றது.

"குட்டி தப்பிடிச்சி..... .. அங்க பாருங்க... ... அதோட கால் ஆடறத ".

மாரி தன் கண் முன் விரியும் அந்த காட்சியின் ஆழத்தை புரிந்து கொண்டான். தன் குட்டி பிழைத்துவிட்டது எனும் பெருமிதம் நிறைந்த கண்களுடன் கூட்டத்தை நிமிர்ந்து பார்த்த கொம்பேயின் கண்களின் கரைகளில் திரண்டு நின்ற கண்ணீர் மாரியின் நெஞ்சை நனைத்தது. ஒரு மிருகத்திடம் இருந்த அந்த பாசப்பிணைப்பு அவன் வாழ்வில் எங்கே போனதாம்? சீ, ஒரு பிராணியிடம் இருப்பது தன்னிடம் இல்லையே என்ற குற்ற உணர்வு அவனை கடைந்தெடுத்தது.

மனைவி சாரு ஒரு முறை அவன் மார்பில் சாய்ந்து வாசித்த "உன் கண்ணில் நீர் வழிந்தால்....." கவிதை வரிகள் அவன் எண்ணத்தில் பளிச்சிட்டு மறைந்தன.

தன்னை கூட்டிலடைத்து மிருகங்கள் வேடிக்கை பார்ப்பதாய் அவனுக்கு தோன்றிற்று.

முதலாளி சொன்ன 'குருவி' கதையின் நாயகன் மாடன் பிள்ளை ஒயரால் பின்னிய தூக்கணாம் குருவிக்கூட்டின் நுட்பத்தைப் பார்த்து மனமுடைந்து அழுத புள்ளிக்கு தன்னை இந்த விலங்குகள் என்னமாய் இழுத்து வந்து உட்காரவைத்துவிட்டன என எண்ணி வெதும்பினான் மாரி.

உணர்ச்சி மேலீட்டால், நடுங்கும் தன் கைகளால், குனிந்து சாருலதாவின் தோள்களை பற்றினான் மாரி.

அவன் பிடியில் இருந்த இறுக்கம் சாருவிற்கு இதமாகவே இருந்தது. பாட்டி ஒரு முறை சொன்ன கதையில் வரும் மலைப்பாம்பின் பிடியின் இறுக்கம் அல்ல அது என அவள் உள்உணர்வுகள் சொல்லிற்று. இந்தத் தொடுகைக்காக அவள் பிஞ்சு மனது எத்தனை ஆண்டுகள்தான் காத்திருந்தது?

ஒரு அன்பின் மீட்டெடுதல் அங்கு அமைதியாய், ஒரு ஊமைப்படம் போல், அப்போது ஓடி முடிந்தது! அவர்களிடையே இருந்த ஒரு பெரு இடைவெளியில், வெற்றிடத்தில், அன்பு எனும் ஆறு ஓடி நிறைந்து பரிபூரணமானது! ஓடிய ஆறு அவன் கண்வழி வழிந்து கன்னங்களை நனைத்து துளியாய் திரண்டு மண்ணில் வீழ்ந்து மாண்டது.

தூரத்து பட்சிகளின் கூவல்களைத் தவிர எங்கும் அமைதி. வார்த்தைகளை விரையப்படுத்தாத அந்த கணங்களை மௌனம் ஆட்கொண்டது. வரிசைகட்டி நின்ற வார்த்தைகள் மாரியின் தொண்டைக்குழியில் பாசம் எனும் குண்டடிபட்டு வீழ்ந்து மாண்டன!

வாழ்க்கையில் தவறவிட்ட தருணங்களை மீட்டெடுக்கும் வேட்கையில் மாரி குனிந்து சாகுலதாவை தூக்கியெடுத்து அணைத்து "நீ என் உசிரம்மா.... ஊட்டுக்கு போவமா சாரு?" என நா தழுதழுக்க கொஞ்சலாக கேட்டான்.

தன்னை 'சாரு' என முதல் முறையாக அப்பா அழைத்ததை அவள் பரிபூரணமாக ஆட்சேபிப்பதைப்போல் தலையை பலமாக ஆட்டி அங்கீகரித்தாள்.

அவர்களின் துயரக்காவியத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த அந்த தருணத்தை கொண்டாடுவது போல் எங்கோ ஒரு யானை ஒரு நீண்ட மூச்சை உள்ளிழுத்து அதை பிளிறலாக்கி வெளிக்கொணர்ந்து பின்

மௌனித்தது!



# மாலை சூடும் மணநாள்

திக்குவல்லை கமால், இலங்கை

கல்யாண மண்டபத்திற்குச் செல்ல உம்மு ஸல்மாவும் ரெடி.கண்ணாடியை மாத்திரம் தானே எடுத்துப் போட்டுக் கொண்டாள்.கொஞ்சம் தளர்ந்துபோன உடல்நிலை. எழுபது வயதல்லலவா !

“காருவந்த ஆ.. உம்மவ கூட்டிக்கொணு போங்கொ. ஒரு போத்துக்காக்கி இருப்பட்டுங்கொ அவவ.அவக்கேல”

அதிக தூரமில்லை.இரண்டு கிலோ மீற்றருக்கு மேல் போகாது.எவரெஸ்ட் மண்டபத்தில்தான் ஏற்பாடு.நூறு சவன் சாப்பாடு.சாப் பிரியாணி.

மகள் சொன்னதுபோல் பெண்கள் மண்டபத்தில் ஓர் ஓரமாகஉம்மு ஸல்மாவுக்கு இருக்கை ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

விருந்தாளிகளின் வரவும் சாப்பாட்டு மணமும் கல்யாண மண்டபத்தைச் சோபிக்கச் செய்தது.

வித்தியாசமின்றி எல்லோரும்போல் வந்து ஸலாம் சொன்னார்கள்...சுகம் விசாரித்தார்கள்.உம்மு ஸல்மாவுக்கு பாதிப்பேர் யார் ?எவர்? என்றே தெரியவில்லை. இருந்தாலும் தன்னை எல்லோரும் மதிக்கிறார்களே என்ற பெருமிதமும் இல்லாமலில்லை.

உம்மு ஸல்மாவுக்கு நினைவு தெரிந்த காலத்தில் கல்யாண மண்டபங்கள் இருக்கவில்லை.அவரவர் வீடுகளிலேயே கல்யாணங்கள் நடக்கும்.அருகருகே உள்ள வீடுகள் ஒத்துழைப்புக் கொடுக்கும். மின்சாரமில்லாத காலம்.கட்டணம் செலுத்தி அந்த வசதியைப் பெறவேண்டும்.வீடுகள் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். டிக்குடிக்கு மெஷின் இயங்கத் தொடங்கியதும் மின்குமிழ்கள் ஒளிரும். வளவிலுள்ள மரமொன்றில் ஒருசோடி லோஸ்பீக்கர்கள் இரு கோணங்களை நோக்கிக் கட்டப்பட்டிருக்கும். இடைக்கிடை பாடிக்கொண்டிருக்கும்.' மாலை சூடும் மணநாள் , இளமங்கையின் வாழ்வில் திருநாள்' என்றபாடல் தவறாது ஒலிக்கும்.ஏனோ தெரியவில்லை அது உம்மு ஸல்மாவின் அபிமானப் பாடலும்கூட.

பெண்கள் மண்டபத்தில் ஒரு மேடை.அதில் அழகிய ஆடை அலங்காரங்களுடன் மணமகள் அமர்ந்திருந்தாள்.வெளியூர்க்கார பட்டதாரி மணமகன் சம்பிரதாயங்கள் முடிந்ததும் மற்ற அலுவல்களைக் கவனிக்கச் சென்றுவிட்டார் போலும்.

இந்தப் பெரிய விருந்தில் உம்மு ஸல்மா ஒரு கோப்பை சூப் மாத்திரமே குடித்துக் கொண்டாள். கல்யாணக் கலேபரங்களில் பெரிதாக அவளது கவனம் ஒடவில்லை.

ஊர்ப் பாடசாலையில் ஏழாம் வகுப்புவரை மட்டுமே அவள் கல்வி கற்றாள்.கோபால மாஸ்டர் , சின்னதுரை மாஸ்டர் போன்றவர்களை அவளுக்கு இன்னும் நல்ல ஞாபகம். அப்போது மலேஸ்கூல் மாத்திரமே இருந்தது.

வருட ஆரம்பத்தில் ஏழாம் வகுப்பில் ஆறு ஆண்பிள்ளைகளும் ஐந்து பெண்பிள்ளைகளும் இருந்தனர்.வருடக் கடைசியில் பெண்கள் மூன்றாகக் குறைந்துவிட்டனர்.இருவர் பெரிய பிள்ளையானதால் இடை நடுவில் வராமல் விட்டுவிட்டனர்.அப்படி ஆனாலும் ஆகாவிட்டாலும் ஏழாம் வகுப்பிற்கு மேல் பெண்பிள்ளைகள் படிக்கச் செல்வதில்லை.

ஆறு ஆண்பிள்ளைகளில் இரண்டுபேரைத் தவிர மற்றவர்கள் அடக்கமானவர்கள்.அடுத்த வகுப்பான எட்டாம் வகுப்பில் படிக்கும் அம்ஜாத் பெரும் குழப்படிக்காரன். ஆனால் ஆசிரியர்களிடமிருந்து தப்பிக்கொள்வான். உம்முஸல்மாவுக்கு கடும் தொல்லை கொடுப்பான். டஸ்டரால் அடித்துவிட்டு மறுபக்கம் பார்த்துக் கொள்வான். தண்ணீர் போத்தலைக் களவெடுப்பான்.சிலவேளை அவளுக்குத் தெரியாமல் அவளது புத்தகப் பைக்குள் பெரலிக்கா ,புளியங்காய்களை போட்டுவிடவும் செய்வான். அதை எடுத்து வீச அவளுக்கு மனம் வராது.அவளுக்கு விருப்பமானவை அல்லவா!அவள் சாப்பிட்டுவிட்டு மற்ற ஆண்பிள்ளைகள் இல்லாவிட்டால் அந்த பெரலிக்காக் கொட்டைகளால் அவனுக்கு அடித்துவிட்டு வாங்கில் தலையைக் கவிழ்த்துக் கொள்வாள்.

கடைசி மணியடித்து ஸலவாத்து சொன்னதும் பொடியன்கள் பாய்ந்தடித்துக் கொண்டு ஓடிவிடுவார்கள். ஒவ்வொரு பகுதியைச் சேர்ந்த பொம்புளப் பிள்ளைகள் கூட்டம் கூட்மாக கதைத்துக் கதைத்துச் செல்வார்கள்.

உம்முஸல்மா வீட்டுக்குச் சென்றதும் முகம் கழுவிக்கொண்டு சோறு தின்பாள்.கொஞ்சம் ஓய்வெடுக்க வேண்டுமென்றுகூட அவள் நினைப்பதில்லை. வடுபுளிப் பானைக்குள் கைவிட்டு ஒருபிடி அள்ளி கடதாசியில் சுற்றிக்கொண்டு மோதீன் அப்பாவின் குர்ஆன் பளிக்கொடத்துக்கு ஓடிவிடுவாள்.

அங்கு பொம்பிளைப் பிள்ளைகளின் ஆட்சிதான். ஆண்பிள்ளைகள் வருவது மிக்க குறைவு.ஆனால் அம்ஜாத் மாத்திரம் தவறாது வந்துவிடுவான்.ஸல்மாவுக்கு தொல்லை கொடுக்காவிட்டால் அவனுக்கு நேரமே ஓடாதுபோலும்.

அந்த வருடம் வேகவேகமாக நகர்ந்து டிசம்பர் லீவுக்கு இன்னும் இரண்டே நாட்கள்.கடைசிச் சோதினை முடிந்து பாஸ் பெயில் சொல்லிவிட்டார்கள். ஏழாம் வகுப்பில் இரண்டு ஆண்பிள்ளைகளைத் தவிர மற்ற எல்மோருமே சித்தி..ஆனாலும் உம்மு ஸல்மா உள்ளிட்ட பொம்பிளைப் பிள்ளைகளின் முகத்தில் கவலை அப்பிக் கிடந்தது.

திடீரென்று முன்னே வந்து நின்ற அம்ஜாத் ஸல்மாவைப் பார்த்துக் கேட்டான் “வார வரிசம்...”

அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு "வார வரிசம் நாங்க ஸ்கூலுக்கு வாரல்ல. பளிக்கொடத்துக்கும் வாரல்ல" என்று பட்டென்று சொல்லிவிட்டு அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவள் எதிர்பார்க்கவே இல்லை.அவன் கண்களில் இரு சொட்டுக் கண்ணீர்.அதை யாரும் கண்டுவிடக்கூடாது என்றுதான் போலும் மெல்லத் திரும்பி வெளியே போய்விட்டான்.

அவளது மனம் திக்கென்றது.இப்படியொரு குழப்படிக்காரனது கண்களும் கசியுமா?

உம்மு ஸல்மா இப்பொழுது வீட்டுச் சூழலோடு ஒன்றிப்போய்விட்டாள்.அவளது வாழ்க்கைக் கோலம் மாறிப்போய்விட்டது.எதிர்காலக் குடும்பப் பெண்ணாக அவளை உருவாக்குவதுல் அவளது உம்மா கண்ணும் கருத்துமாக இருந்தாள்.

"அடியேய் நாளக்கு மாப்பிளேக்கட்ட அடி தின்டு நாயாகாம செல்வாத்த கேட்டு ஊட்டு விஷயங்கள படிச்சுக்கோ "- இப்படி அதட்டல்கள் அடிக்கடி நடக்கும்.

பகல் சாப்பாட்டு வேலைகள் முடிந்ததும் சத்தங்காட்டாமல் பின்பக்கமாச் சென்றுவிடுவாள் ஸல்மா.

அந்த வட்டாரக் கொமருகள் எல்லாம் ஒன்றுகூடி ஊர்பலாய் பேசிக்கொள்வார்கள்.ஒரு வகையில் ஆசிரியர் இல்லாத பள்ளிக்கூடம்தான் அது.அஸருக்கி பாங்கு சொல்வது ஸகூல்விட ஸலவாத்துச் சொல்வது போலத்தான் அவர்களுக்கு.வாப்பா தொழுதுவிட்டு வரும்போது கோப்பிக் கோப்பையோடு அவள் நின்றே ஆகவேண்டும்.

குடும்பத்திற்கு ஒரே பிள்ளை ஸல்மா.அவளை வைத்துப் பாதுகாத்துக்கொண்டிருக்க வேண்டிய தேவை அவர்களுக் கிருக்கவில்லை.சீதனம் ஆதனமென்று தேடித்திரியாமல் உள்ளதைக்கொண்டு கல்யாணத்தைச் செய்து முடிக்கலாமென்ற நம்பிக்கை அவர்களுக்கு.

"நான் புத்தியறிஞ்சி ரெண்டு வரிஷமாலும் பொகல்ல. பதினாலு வயஸில எனக்கு கலியாணம் நடந்திட்ட" - உம்மா அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பாள்.

ஸல்மாவுக்கு அப்போது பதினாறு கடந்துவிடவில்லை.

யார்யாரோ பெண்கள் அவளைப் மார்க் க வந்தார்கள்.

உறவினர்கள் அவ்வப்போது வந்துவந்து போனார்கள்.

வீடு தோட்டமெல்லாம் துப்புரவு செய்யப்பட்டது. சாந்து சாயம் பூசப்பட்டது.

உடுப்பத் தைப்பவர்கள் வீட்டுக்கு வந்தே அளவெடுத்துச் சென்றார்கள். நகை நட்டுகள் தயாராகின.

எல்லாம் இரண்டொரு வாரங்கள்தான்.உம்மு ஸல்மாவிடம் எதுவும் கேட்கப்படவில்லை.அவள் வார்த்தைகள் அரங்கேறப் போவதுமில்லை.ஒருநாள் வீட்டுத் தோட்ட தென்னை மரத்தில் லோஸ்பீக்கர் பாடியது.

"மாலை சூடும் மணநாள்

இளமங்கையின் வாழ்வில் திருநாள் "

டிக்குடிக்கு மெஷின் சத்தம் கேட்டது.வீடெல்லாம் மின்குமிழ்கள் ஒளிர்ந்தன.

"யாநபீ ஸலாமலைக்கும்

யாரஸூல் ஸலாமலைக்கும்"

சோடனை மேடையில் வெண்துகிலுடுத்து அழகாக அமர்ந்திருந்த உம்மு ஸல்மாவின் காதுகளில் பைத் முழக்கம் ஒலித்தது.

கறுப்போ சிவப்போ... திக்திக்

உயரமோ குட்டையோ...திக்திக்

மெலிவோ கொழுப்போ...திக்திக்

அவளது இதயம் அடித்துக் கொண்டது.

எல்லாம் இனிதே நடந்து முடிந்தது.அன்பான கணவனோடு அவளது வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது.

உம்முஸல்மா - சக்கூர் நானா தம்பதின் ஒரே மகள்தான் ஷாஸ்னா.அவளுக்கு ஒரு குறையுமில்லை. உம்மாவும் வாப்பாவும் அவள்மீது அப்படி அன்பு. எந்தத் தடையமில்லாமல் ஜீசீஈ வரை படித்து பரீட்சை எழுதினாள்.நான்கு பாடம் பாஸ் பண்ணினாள்.

அவளுக்குத் திருமணம் பேசியபோது

"அந்த மாப்புள சரிவராது" என்றாள்.

இன்னொருவிஷயம் கொண்டுவந்தபோது" இதும் சரிவாரல் உம்மா "என்றாள்.

"எனத்தியென்டீ இது.படிச்சி மிஞ்சனவள்.ஓன்ட வாப்பவ எனக்கு பேசின டைமில நான் ' கிச்' சென்டு பேசல்ல.கறுப்போ சொகப்போன்டு தெரிய. ம்... இன்ட வரக்கும் ஒரு சண்டதக்கம் இல்லாம எவளவு சந்தோஷமா வாழியன்"- தனது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தாள் உம்மு ஸல்மா.

கவலைக் குள்ளான சக்கூர் நானா மூன்று மாதமாக கல்யாணக்கதையே பேசவில்லை.

மூன்றாவது தேடல் வந்தபோது நீண்ட துஆவுடன்

யார் எவரென்று மகளிடம் சொன்னாள் ஸல்மா.

மூன்று நாட்களின் பின் மிகவும் அடக்கமாக "வேலபாழ். சரிவாரல்ல" - என்றாள்.

அல்லாஹ் என்று நாலாம் விஷயத்தை அவள்ஏற்றுக்கொண்டாள்.தடதடவென்று காரியத்தை நடாத்தி முடித்தனர்.

உம்மு ஸல்மாவின் கல்யாணத்தில் உறவினர்கள் கள் பிடித்திருந்த இடத்தை மகள் ஷாஸ்னாவின் கல்யாணத்தில் அவளது கூட்டாளிமாரே நிரப்பினர்.

உம்மு ஸல்மா மிகவும் விரும்பும் "மாலை சூடும் மணநாள் "பாடல் தென்னை மரத்தில் ஒலிக்க வில்லை.அதெல்லாம் காலம் கடந்துபோயிருந்தது.

இப்போது நடந்துகொண்டிருப்பது ஷாஸ்னாவின் மகள் மானல் மிஷ்ராவின் கல்யாணம். உம்மு ஸல்மாவின் பேத்தி.

மானல் ஏஎல் சித்தியடைந்து பேராதனை பல்கலைக் கழகத்திற்கு பிரவேசம் பெற்று கலைப்பட்டதாரியாக வெளிவந்தாள்.விரைவில் அரசதுறையில் நியமனமும் எதிர்பார்க்கிறாள்.

அவளுக்குத் தெரியும் இனிக் கல் யாணக் கதைகள் ஆரம்பித்துவிடுமென்று.அதற்கிடையில் அவள் முந்திக்கொண்டாள்.

"எனக்கு கல்யாணங்க பேச ரெடியாக வாண.நான் எல்லாம் பேசிக்கொண்டுதான் வந்தீக்கி.எல்லாரும் சேந்து செஞ்சி வெச்சாச் சரி"

அந்தக் கலயாணம்தான் இதோ நடந்துகொண்டிருக்கிறது.

"தடார்ர்ர் "

"தாரோ புட்டுவத்தோட புழுந்த "

"வயசாலிப் பொம்புள தூக்கத்தில புழுந்தீக்கி"

தலைகிலை பட்டு அப்படிப் பாதிப்புக்கள் ஒன்றுமில்லை.உம்முஸல்மாவை தூக்கி இருத்தி

தண்ணீர் தெளித்து சூழ்ந்து நின்றனர்.

உம்மு ஸல்மாவுக்கு தூக்கமா? மயக்கமா? என்று ஒன்றும் தெரியவில்லை.சரியாக இன்னும் நினைவு மீளவுமில்லை. ஏதோ மெல்லிய ஞாபகம்போல... கூரிய கண்களும் சுருள்முடியும் அரும்பு மீசையுடனும் அந்த எட்டாம் வகுப்பு அம்ஜாத் அவள் முன்னால்... "ஆ.அ."அவள் ஏதோ சொல்ல முனைந்தும் வார்த்தைகள் வரவில்லைபோல...

"உம்மவ ஊட்டுக்கனுப்புங்கொ. அவக்குத் தூக்கம் "- யாரோ சொன்னார்கள்.

ஐ.தர்மசிங், நாகர்கோவில்

## "சொல்வதற்கு ஒன்றுமில்லை"

"அம்மா" என யாசிக்கும்
பஞ்சையின் குரல் முன்னால்
அசைவ உணவகம்
கிழிந்த உடையோடு நிற்கும்
முதியவரின் முன்னால்
ஆயத்த ஆடையகம்
ஊசி பாசி விற்கும்
சிறுமியின் முன்னால்
தனியார் பள்ளிக்கூடம்
நோய்க்கு பலியான
அனாதை பிணம் முன்னால்
நவீன மருத்துவமனை
ஓலை வேய்ந்த
கூரை வீட்டின் முன்னால்
அடுக்கு மாடி குடியிருப்பு
புதிய புதிய ஆட்சிகள்
வரலாற்று சுவடுகளாய்
பழைய காட்சிகள்
சட்டப் புத்தகத்தில்
ஜனநாயகம்
கவர்ச்சி வார்த்தைகளில்
மக்களாட்சி
இலவசக் கனவுகளில்
வாக்காளர்கள்

காகிதப் பணத்தை நம்பி
கட்சிகள்
சொல்வதற்கு
ஒன்றுமில்லை...

ஜெ.பி. ஆதிரன்

# நினைவுகளில் வாழ்பவன்

ரகசியம் சொல்வதாய்
அருகே அழைத்து
காதோரம் நீ கொடுத்த
வெட்கம் நிரம்பிய முத்தம்..

வளையல் அழகை
கை குலுக்கி காட்டி
ரெட்டை ஜடையுடன்
நீ உதிர்த்த புன்சிரிப்பு..

கொலுசு ஒலியில்
எனை கவர்ந்திழுக்க
குதித்து நீ ஓடும் போது
உன் பாதம் தைத்த
நெரிஞ்ச முள்..

கண்ணாமூச்சி ஆட்டத்தில்
கைகளால் காற்றில் தேடி
தெரிந்தும் தெரியாமலும்
எனக்களித்த ஸ்பரிசம்...
என காதலின்
அழியாத நினைவுகள்
அனைத்தும் வந்து போனது
உன் மணவிழாவில்...
பரிசளிக்கும் வரிசையில்
காத்து நிற்கையில்....






# "தாய்த்திருநாடு" – க. இ. கமலநாதன்

சிறீ சிறீஸ்கந்தராசா

நாடகங்கள் கதையழகோடு கவிதையழகும் கொண்டு மக்களின் வாழ்வை செழுமைப் படுத்துவனவாக அமைதல் வேண்டும்.

தமிழ் மொழியானது இயல், இசை, நாடகம் என மூன்று பெரும் பகுதிகளை உடையது. இது உலகின் வேறு எந்த ஒரு மொழிக்கும் இல்லாத தனிச் சிறப்பாகும். எனவேதான் தமிழை முத்தமிழ் என்றும் அழைக்கின்றோம்.

இதில் நாடகத் தமிழ் பழங்காலம் முதலே படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது.

பிறர் செய்வதைப் போலத் தாமும் செய்து பார்க்க வேண்டும் என்ற

மனித உணர்ச்சியே நாடகம் தோன்றக் காரணமாகும்.

இயலும், இசையும் கலந்து கதையை தழுவி நடித்து காட்டப்படுவது நாடகமாகும். இது மக்களின் அகத்தை பிரதிபலிக்கும் கலை என்றும் கொள்ளலாம்.

ஒரு கதையை அரங்கிலே நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்க அமைப்பு, ஒலி-ஒளி முதலான கலைகளில் ஒன்றிணைப்பால் படைத்துக் காட்டுவது நாடகம் என்று கூறலாம்.

அகத்தியம், குணநூல், கூத்துநூல், சயந்தம், மதிவாணர், நாடகத் தமிழர் போன்ற நாடக நூல்கள் பழந்தமிழ் வழக்கில் இருந்தன என்பதை சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார். இவற்றில் பல நூல்கள் இன்று நமக்குக் கிடைக்கவில்லை.

“மோனத்து இருந்த முன்னோன் கூத்தில்

உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே

ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே

இசையில் பிறந்தது ஆட்டத்து இயல்பே

ஆட்டம் பிறந்தது கூத்தினது அமைவே

கூத்தில் பிறந்தது நாட்டியக் கோப்பே

நாட்டியம் பிறந்தது நாடக வகையே”

—(கூத்தநூல் - தோற்றுவாய்)

இறைவன் ஆடிய ஆதிக்கூத்தில், உடுக்கையிலிருந்து பிறந்தது ஓசை; ஓசையின் சுழலிலிருந்து இசையின் உயிர்ப்பும், அதனின்று ஆட்டமும், ஆட்டத்திலிருந்து கூத்தின் அமைதியும், அவ்வமைதியிலிருந்து நாட்டியக் கோப்பும் அவ்வித ஒழுங்கிலிருந்து நாடக வகைகளும் தோன்றின எனக் கூத்தநூல் கூறுகின்றது.

இவ்வாறு பிறந்த நாடகம், தொல்காப்பியர் காலத்தில் வளர்ச்சியடைந்து புகழ்பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில்:

“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலனெறி வழக்கம்”

தொல்காப்பியருக்கு முன்னரும் தமிழில் நாடகமும், நாடகங்களில் பாடல்களும் இடம்பெற்றிருந்தனை அறியலாம். சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம் ஆகவே திகழ்கின்றது.

“நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று

அப்பா லெட்டாம் மெய்ப்பா டென்பர்-”

நாடக வழக்கென்பது சுவைபட வருவதையெல்லாம் ஓரிடத்தில் வந்தனவாகத் தொகுத்துக் கூறுதலென விளக்குகின்றது இவ்வரிகள்.

இம்மெய்ப்பாடானது கண்ணீர், மெய்மயிர் சிலிர்த்தல், வியர்வுதல், நடுக்கம் முதலியன ஒருவரது அகவுணர்வுகளை காண்போர்க்கு புலனாகும் தன்மையே மெய்ப்பாடு எனப்படும்.

பல்லவர் காலத்தில் ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் “மத்தவிலாசம்” என்னும் நாடக நூலை எழுதியுள்ளார். இது மிகவும் புகழ் பெற்றிருந்தது.

பதினோராம் நூற்றாண்டின் சோழர் காலத்தில் இராசராச சோழன் ஆட்சிக் காலத்தில் “இராசராசேச்சுவர” நாடகம் நடைபெற்றதாகக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் “நொண்டி நாடகங்கள்” தோன்றின.

பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய பெரும்பாலான நாடகங்கள் மகாபாரதம், இராமாயணம் முதலிய காவியங்களின் கதைக் கூறிலிருந்து படைக்கப்பட்டன.

19ம் நூற்றாண்டில் சமுதாய சீர்திருத்தம் தொடர்பான நாடகங்கள் சிறப்பிடம் பெற்றன. நாட்டு விடுதலை போராட்டக் காலகட்டத்தில் பல்வேறு தேசிய நாடகங்கள் அரங்கேறின.

இருபதாம் நூற்றாண்டில் நாடகத்துறையில் பெருந்தொண்டு ஆற்றியவர் சங்கரதாஸ் சுவாமிகள் இவர் நாடக உலகின் இமயமலை என்று சிறப்பிக்கப்பட்டார்.

நாடகக் கலையின் இத்தகையதோர் பின்புலத்தை எடுகோள்களாகக் கொண்டு முத்தமிழில் ஒன்றாகிய நாடகத்தமிழில் அதிகம் நாட்டம் செலுத்திவரும் இந்த வித்தகனாரின் அதி சிறந்த படைப்புக்களில் ஒன்றாகிய “தாய்த்திருநாடு” எனும் நூலை எமது ஆழமான கற்றலுக்கும் கிரகித்தலுக்கும் ஏற்ற வகையில் மிகவும் எளிமையான மதிப்பீடு ஒன்றினை நாம் எழுதிப் பார்ப்போம்.

கற்றறிந்த பல்துறைசார் அவையோர் முன்னிலையில் இந்தப் படைப்பு (30/03/2023) வெளியீடு செய்யப்பட்டது.

நூலின் தோரண வாயிலை எட்டித்தொடும் முன்னர்

இந்த ஆசிரியர் நடந்து வந்த பாதைகளையும் பற்றி நாம் அறிந்துகொள்வது இலக்கிய மரபாகும்,

இவர் ஒரு நடிகர், எழுத்தாளர், நெறியாளர், குறும்பட இயக்குனர், பாடலாசிரியர், கூத்துக் கலைஞர், ஆன்மிகம், பஜனை வழிபாட்டிலும் அதிகளவில் ஈடுபாடு கொண்ட பல்துறை ஆற்றல்களைக் கொண்ட ஒரு அறிஞராவார்.

"சக்கரம்" கலைமன்றத்தின் மூலம் கலைப்பணிகளையும் ஆற்றி சிறுவர்களை பயிற்சி செய்துவருகிறார்.

நாடகம், மிருதங்கம், நடனம், சங்கீதம், ஆகிய அழகியல் கலைகளோடு சிங்களம் ஆங்கிலம் மொழிப்பயிற்சி மூலம் கல்விசார் பணிகளையும் மிகச் சிறப்பாக ஆற்றிவருகிறார்.

'தாய்த்திருநாடு' எனும் இந்த நூல் இவரது ஐந்தாவது படைப்பாகும். இதில் மூன்று நாடகங்கள் பதிவாகியிருக்கின்றன,

1 – தாய்த்திருநாடு

2 – தலைகேட்டான் தம்பி

3 – தர்மம் வெல்லும்

இவரது முன்னைய படைப்புகள் என்ற வகையில்

1 – ஆச்சி அச்சாப்பாட்டி

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களக விருது - 2011

2 – முதுசொம்

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களக விருது - 2012

3 – குழந்தைகள் குதூகலிக்கும் - 15-11-2011

4 – பெத்தம்மா – 24-12-2019

இவரது குறும்படங்கள்

01 – வாழும்போதே - 2008 (கதை, வசனம், இயக்கம், நடிப்பு)

02 – வெற்றிக்கு வழி - 2009 (கதை, வசனம், இயக்கம்)

03 – ஒப்பிலாமணியே - 2009 (கதை, வசனம், இயக்கம், நடிப்பு)

04 – மின்மினி - 2010 (கதை, வசனம், இயக்கம்)

05 – உயிர்ப்பூ - 2010 ஊடக கற்கை திருகோணமலை பல்கலைக்கழகம்

06 – ஒப்பிலாமணியே - 2009 (இயக்கம், ஒளிப்பதிவு)

07 – கூலி - 2013 (கதை, வசனம், இயக்கம்)

08 – முகுழ்ப்பு - 2014 (கதை, வசனம், இயக்கம்)

09 – பேசும் கண்ணீர் - 2018 (நடிப்பு) வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள

10 – கருவாய் தருவாய் - 2020 (இயக்கம், நடிப்பு) யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி

11 – புதியவன் - 2016 (நடிப்பு)

"தாய்த்திருநாடு" எனும் இந்த நாடக நூலை தனது மானசீகக் குருவாக கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களுக்கு முதல் வணக்கம் செலுத்திக்கொண்டு தனது தாய்க்குத் தாயாக தான் நேசிக்கும் அமரர் செல்லையா அன்னம்மா அவர்களுக்கு பாதகாணிக்கையாக சமர்ப்பணம் செய்கின்றார்.

தாய்த்திருநாடு எனும் நூல் ஒரு கற்பனைச் சரித்திர நாடகமாகும்.

முதன்முதலில் அரியாலையில் 2005ம். ஆண்டு 86வது சுதேசிய திருநாள் விழாவின் போது அரியாலையின் முன்னணிக் கலைஞர்களால் மிகவும் பிரமாண்டமான முறையில் மேடையேற்றப்பட்டது.

தொடர்ந்து, 2008, 2010, 2012 ஆகிய ஆண்டுகளில் கல்லூரி மாணவர்களால் ஆற்றுகை செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டது.

கொழும்புத்துறை சித்திரைப் புத்தாண்டு விழாவின் போது 2018ல் கொழும்புத்துறை வாழ் கலைஞர்களால் மிகச் சிறப்பாக மேடையேற்றப்பட்டது.

இவ்வாறாக பத்துக்கும் மேற்பட்ட மேடைகளில் அரங்கேற்றம் கண்ட இந்த நாடகங்களைக் கொண்ட இந்தப் படைப்பை மிகச் சிறப்பான முறையில் யாழ்ப்பாணம் கலைக்கல்லூரியில் கற்றறிந்த பல்துறைசார் அவையோர் முன்னிலையில் (30/03/2023) வெளியீடு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள மிகவும் தரமான மெகா பதிப்பகத்தினரால் பதிப்புச் செய்யப்பட்டு, சுபோகி வெளியீட்டகத்தால் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நூலில் மூன்று நாடகங்கள் பதிவாகியிருக்கின்றன.

1. தாய்த்திருநாடு
2. தலைகேட்டான் தம்பி
3. தர்மம் வெல்லும்

தாய்த்திருநாடு இது ஒரு வரலாற்று கற்பனைக்

கதையை ஆதாரமாக வைத்து மிகவும் நேர்த்தியாகப் பின்னப்பட்டிருக்கிறது.

"மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ

மறை நான்கின் அடிமுடியும் நீ

மதியும் நீ ரவியும் நீ புனலும் நீ அனலும் நீ

மண்டல மிரண்டேழும் நீ"

நடராசப் பத்தின் முதல் பாடலோடு திரை விலகுகின்றது.

இயல்... இசை... நாடகம்... முத்தமிழின் சிறப்புகள் அத்தனையையும்

நாடகத்தமிழ் கொண்டிருப்பது ஆச்சரியமே!

நாடகம் என்பது பாட்டும், உரையும், நடிப்பும் எனத் தமிழ் மரபுவழி கூறும்.

"தாய்த்திருநாடு"

அரங்கத்தில் இருப்பவர்களை தன்னின மானமும், மொழிப்பற்றும்,

மண்ணை மதிக்கும் மாண்பும் எல்லோருக்கும் இருக்கவேண்டும் என்பதனை கூறாமல் கூறும் விதமாக தலைப்பிடப்பட்டிருக்கிறது,

செங்கையன், தளபதி செங்கண்ணான், ஒற்றன் செங்கரவன், சீதவளத் திருநாட்டு தளபதி மார்த்தாண்டநாதன், மந்திரவாதி ஆகிய பாத்திரங்களுடன் கதை நகர்கிறது.

மிகவும் வித்தியாசமான... யதார்த்தமான கதைமாந்தர்கள். வரலாற்று அரச நாடகம் என்பதனால் பெயர்களும் அதற்கு ஏற்றாற் போல் அமைந்திருக்கின்றன.

பாத்திரங்களின் பெயர்களைக்கொண்டு அவற்றின் குணவியல்புகளை அறிந்துகொள்ள முடிகிறது. இவர்கள் என்ன சொல்ல வந்தார்கள்? என்ன சொல்லிச் சென்றிருப்பார்கள், என்பதனை ஊகிக்க முடிகிறது.

ஆசிரியரின் கைவண்ணத்தை இங்கே பாருங்கள்...

"எங்கள் செல்வ மகனுக்கு மூன்று வயதை நெருங்கும் வேளை

நாங்கள் மூவருமே மூன்று வேறு திசைக்குப் பிரிந்து செல்லும் வாய்ப்பு இருக்கிறது என்று கிரகக்கலை வல்லுனர்கள் அன்று எனக்குச் சொன்னதை நான் உனக்குத் தெரிவிக்கவிரும்பவில்லை. இந்த பிரிவு சில சமயம் நிரந்தரமாகவும் ஏற்படலாம் என்ற கிரக சோதிடர்கள் கூத்தரை எப்படி வசந்த உனக்குக் கூறலாம்.. முத்தே பவளமே, முக்கனியே சக்கரையே, தேனே திரவியமே, திகட்டாத தீங்கரும்பே என்றெல்லாம் நீ பாடி மகிந்த வேளையில் உனக்கு இதனை எப்படிக் கூறமுடியும் வசந்தா... எப்படிக் கூறமுடியும்?"

ஆசிரியரின் மிக அற்புதமான சொல்லாட்சி மூலம் இவரின் ஆளுமையைக் காண முடிகிறது.

இரண்டாவதாகப் பதிவாகியிருக்கிறது ஒரு இலக்கிய நாடகம் "தலைகேட்டான் தம்பி"

முதிர நாட்டின் ஒரு தெருப்பகுதி, குமான வள்ளலிடம் பரிசுபொருட்கள் பெற்றுக்கொண்டு வருபவர்களுக்கும் பரிசுப் பொருட்களைப் பெறுவதற்காகச் செல்வோருக்கும் இடையிலான உரையாடல்கள் எனப்பதிவு செய்துள்ளார்.

குமணன் சங்ககால மன்ன, கொங்கு மண்டலத்தில் அமைந்த முத்திரம் இவர் நாடு. இதனைக் கொங்கு நாடு என்றும் அழைப்பர். இவர் ஒரு சிறந்த கொடையாளி, பெருஞ்சித்திரனார், பெருந்தலைச் சாத்தனார் ஆகிய புலவர்கள் இவரின் வள்ளல் தன்மைகள் குறித்துப் புகழ்ந்து பாடியுள்ளனர். இவர் கடையெழு வள்ளல்கள் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவரென வரலாறு கூறுகின்றது. இவரது தம்பிதான் இலக்குமணன் ஆவான்.

களம் பல கண்டதனால் விழுப்புண்கள் பல பெற்றிருப்பார். இவரின் அனுபவங்களை இந்த நாடகங்களின் நெறிப்படுத்தல்கள் மூலம் காண முடிகிறது.

இவ்வாறாக இந்த நாடகத்தின் அறிமுக உரையில் ஆசிரியர் பதிவு செய்து போகின்றார்.

இந்தக் கதையை நெறிப்படுத்தி நாடகமாக மேடை ஏற்றுவதற்காக சில பாத்திரங்களைப் படைத்துள்ளார்.

குமணன், இளங்குமணன், பெருந்தலைச்சாத்தனார், மந்திரி, புலவர், இலங்குமணனின் நண்பர்கள், திருடர்கள், குடிமக்கள் எனக் குறிப்பிட்ட சில பாத்திரங்கள் மூலம் கதையை நடத்திச் செல்லும் பாங்கு பாராட்டத்தக்கதாகும்.

குமணன் என்ற பாத்திரத்தின் மூலம் முதிர நாட்டின் வளம் பற்றிக் கூறும்போது இவரின் அற்புதமான சொல்லாட்சியையும், கவித்துவ உணர்வுகளையும் எம்மால் காண முடிகிறது. வாழ்த்துக்கள்!

"மூங்கில்கள் வெடித்து முத்துக்கள் சிந்தும் முதிர மழை நாடப்ப எங்கள் நாடு, நெல்லும், மணியும், முத்தும், வைரமும், நித்தம் பொலிந்திடும் நீடு தேசமப்பா எம்தேசம், கறவைகள் வந்து தாமே பால் சொரிந்து குடம் குடமாக நிரப்பவும், பறவைகள் வந்து தாமே பயன் தரும் பூமியப்பா எமது பூமி..."

அடுத்து மூன்றாவதாகப் பதிவாகியிருக்கிறது "தர்மம் வெல்லும்" என்ற தலைப்பில் பக்தபிரகலாதனின் கதை.

பிரகலாதனிடம், 'நாராயணன் எங்கிருக்கின்றான் காட்டு' என்று இரணியகசிபு கர்ஜிக்க அவர் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார்' என மகன் சொல்ல இரணியகசிபு தூணைக் காலால் உதைக்க சிங்க முகமும் மனித உருவமும் கொண்ட நரசிம்மர் இரணியகசிபுவை அளிக்கின்றார், உலகம் அமைதியடைகின்றது, என்று கதையின் சுருக்கத்தை அறிமுக உரையில் தருகின்றார்.

இந்த நாடகம் தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்களால் பலதடவைகள் மேடை ஏற்றப்பட்டது,

2004 ஆண்டில் நயினாதீவில் கலாசார விழாவுக்காக மேடை ஏற்றப்பட்டது.

மேலும் கோவில் திருவிழாக்களிலும், தமிழ்த்தினப் போட்டிகளின்போதும் இந்த நாடகம் சிறப்பாக மேடை ஏற்றப்பட்டதாகவும் பதிசெய்துள்ளார்.

ஆசிரியரின் முயற்சிகளை நாம் பெரிதும் போற்றுகின்றோம்.

அவரின் ஆளுமைகள் கண்டு நாம் வியந்து நிற்கின்றோம்!!

இவரின் படைப்புகள் எல்லாம் இன்னும் பல மேடைகள் ஏறவேண்டும் என்று வாழ்த்துக்கின்றோம்!!

இந்த நாடகப் பிரதி மட்டுமல்ல இவரின் ஏனைய படைப்புக்களும் மிகச் சிறப்பான படைப்புகளாவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இவரின் படைப்புகள் எல்லாம் பெற்றி பெற்று பல பாராட்டுதல்களையும் பரிசில்களையும் தட்டிச் சென்றிருப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

இவரிடமிருந்து எரிகின்ற பல பிரச்சனைகளைப் பேசுபொருளாகக் கொண்டு இன்னும் பல படைப்புகள் மேடையேறி வெற்றிபெற வேண்டுமென மீண்டும் வாழ்த்துகிறோம்!!

"பார் எங்கும் மணம் பரப்பி

பயனுறட்டும் கலை அரங்கம்!!

நீ தொடுத்த தமிழ்மாலை!

நிதம் மணக்கும் பூமாலை!!"

**ச.ஆனந்தகுமார்**

# நாற்காலித்தொழில்

வயிற்றிற்கு தேவையான பணமிருக்கிறது..
ஆடம்பரத்திற்கு
தொழில் வேண்டும்..
முடிந்தவரையது
தலைமுறைகளுக்கும் தொடர்தல்
சிறப்பு..
சொல்வதற்கு மட்டும் தலையாட்டுகிற
அறிவாளிகளை
அருகே வைத்து கொள்ளுதல்
உகந்தது..
வாயும் பணமும்
சரிவிகிதத்தில் கலக்கையில்
இலகுவாகிறது மக்கள் பணி
புழுதியெழும்பி கலக்கும்
காற்றுடன் கலக்கிற மண்துகளை பகுத்தாய்தல்
போல
வகுக்கிற திட்டங்களும்
யாருக்கென புரியாமலிருப்பது
நல்லது..
முடித்தால் அவ்வப்போது
நகரை அழகுபடுத்துகிறோமென
விளம்பரம் கொடுக்கலாம்
கொள்கையென கூவுகிறவனுக்கு
பேச மேடை கொடுக்கலாம்
சம்பாதிக்க துடிக்கிறவனுக்கு
பதவி கொடுத்து உதவலாம்
தலைவர் நாற்காலியை
மட்டும் வீட்டின்
ரகசிய அறையில் பூட்டி வைக்கலாம்
மக்கள் பற்றி கவலைப்பட தேவையில்லை..
அவர்களுக்கு யோசிக்க ஏற்கனவே
ஆயிரம் கவலைகளிருக்கின்றன..
எட்டு தலைமுறைகளுக்கு
சேர்த்து முடித்ததும்
இறந்தவுடன்
நகருக்குள் நிம்மதியாக தூங்க
இப்போதே இடம் பார்க்கத்
துவங்கி விடலாம்..

ஆதி பார்த்தீபன்

# பறவைகள் பற்றிய பத்துக் குறிப்புகள் – 2

*1.*

*தனித்த பறவையின் வாழ்வே கூடு*
*எழுந்தமர முறிந்த கிளை*
*தனித்த வாழ்வு உடைந்த கிளையொன்றில்*
*வளையும் ஆறு*
*ஆறாது*

*2.*
*தங்கிச் செல்ல பெருவிருட்சமில்லா பறவையின்*
*சொல் - கூர் மழுங்கிய கத்தி*
*இசை நரம்பை சிதறிடிக்கும்*
*குரல்*
*பறவையே உறவோ உறவற்றதென மகிழ்*

*3.*
*உனக்காய் நானிருக்கிறேன் என் பறவையே*
*மழை பொழிய*
*வெயில் எரிய*
*நின்ற இடத்தில் காத்திருப்பேன்*
*ஈரம் கனக்கும் சொற்களில் நமக்கிடையில் தனி*

*4.*
*உடலோ காமத்தின் பெருஞ்சொல்*
*நம் தனித்த உணர்வுகள் அத்தனையும் சொற்களால்*
*வேயப்பட்ட கூடு*
*நாமோ*
*முழுமைக்கும் இருப்பிடம் தேடி அலைவுறும்*
*பறவைகள்*

*5.*
*மிச்சம் வைக்காத வாழ்வுக்காய் நீ*
*விட்டுச்சென்றதென்ன*
*ஒற்றை இறகு*
*சட்டென்று நமைப் பிரியும் உறவுக்காய்*
*நீ பற்றிக் கொண்டதென்ன*
*சிறு பிரிவு*

*6.*
*வாழ்வைப் பற்றியேறும் கொடி நான்*
*எனக்கோ என்னைத்தவிர யாருமில்லை*
*எனும் கணத்தில்*
*உன் குரல் கேட்டு சிலிர்த்தேன்*
*பறவையே இப்போது*
*நான் கொடியல்ல மரம்*

*7.*
*நேசக் கடல்- தரிப்பிடம் நிலம்*
*உனது வாழ்க்கை முழுமைக்கும்*
*சிறகின் அலைவு எவ்விடத்திலோ பற*
*முழுமைக்கும்*
*வாழ்வின் சாறு எவ்விடத்திலோ பற*

*8.*
*காவியுடுத்திடுத்திய சந்நியாசியின்*
*தேகச் சீலையென*
*அலைவுறும் மனம்*
*ரத்தம் சிவந்த வானத்தில் அசைவுறும்*
*தனிப்பறவை*

*9.*
*என் தாய்ப்பறவையின் தனிக்குரலில்*
*தான்*
*இவ்வுலகத்தை*
*கண்டடைந்தேன் மனமே*
*தாய்மையின் பேராற்றை வாழ்வுக்கும்*
*கடத்தும்*
*பெண் பறவை*

*10.*
*பறத்தல் என்பது பற்றிக்கொள்ளல்*
*அல்ல*
*பற்றற்று பற*

*நன்றி:அநாமிகா ரிஷி*




# நூல் அறிமுகம்: பசி உறு நிலம்

**கஜனி சிவராஜா**

*ஈழத்தில் காலந்தோறும் எத்தனை எத்தனையோ படைப்புக்கள் வெளிவந்த வண்ணமேயிருக்கின்றன இருப்பினும் அதில் ஒரு சில படைப்புக்கள் மாத்திரமே பேசுபொருளாகி நிலைபெற்றுவிடுகின்றன. அத்கையதாய் ஒரு படைப்பானது அண்மையில் பேராதனைப்பல்கலைக்கழகத்து அரங்கு தனில் வெளியானது.*

*வில்வரசனின் "பசி உறு நிலம்"*

*பேராதனைப் பல்கலைக்கழகத்து, தமிழ்த்துறையைச் சார்ந்த மாணவனாம் வில்வரசனின் கவிதைகளுக்கு தமிழ்த்துறையின் மரபார்ந்த சங்கப்பலகையில் தனியிடமுண்டு. சங்கப்பலகையில்*

கவிதைகளை வாசித்த தன்மை மாற்றமுற்றுஇ கைகளில் தவழும் புத்தகமதில் வாசிக்கும் தருணமாய் இன்று அவை உருப்பெற்றமையானது அவரது எழுத்தின் மாபெரும் வளர்ச்சியேயாகும்.

ஆம், தன்னுடைய எழுத்து வாழ்வின் ஆரம்ப காலம் தொட்டுஇ தான் எழுதிய சிறப்பார்ந்த அத்துணை கவிதைகளையும் தொகுத்து, தனது முதலாவது கவிதை நூல் வெளியீட்டை இக்கவிஞன் சிறப்புற நிகழ்த்திவிட்டான் எனலாம்.

எப்படைப்பாயினும் படைப்பின் தலைப்பு தான் முதலில் ஒருவரைக் கவர்ந்திடும் என்பர். அவ்வகையில் ''பசி உறு நிலம்'' எனத் தலைப்பிட்டு இக்கவிதை நூலின் மீதான ஒரு எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியமையானது பாராட்டத்தக்கதே. குருசேத்திர நாட்கள், வெயில் குளிக்கும் தலைகள், மகளீர் மட்டும், முகமூடி மனிதன், விடுதிக்காரனின் டயரி, குழந்தைகளின் வானம், கனவில் உதிரும் வாழ்வு, நிறைசூல் உண்டியல், பனிக்குல்லாய், மாறுதல், என 37 தலைப்புக்களில் எழுதப்பட்ட கவிதைகள் எல்லாம் பேசாப்பொருள் என எதனையும் ஒதுக்கி வைத்திடாது தன்னளவில் அதிகமாய் பேச வேண்டியவற்றை பேசிவிட்டுச் செல்கின்றன.

''குருசேத்திரத்தில்

தலைகளைத் தவிர

அத்தனையும் இழக்கப்பட்டும்

முடிவின்றித் தொடர்கிறது

வாழ்வுக்கான போர்'' என குருசேத்திர நாட்கள் கவிதையில், மனித உணர்வின் வலி தனை ஆழமாக எடுத்தியம்பிய இவர் துயரம், புன்னகை, தனிமை, பரிதவிப்பு, எதிர்ப்பார்ப்புகள், காதல், அனுபவம், அன்பு, சமூகயதார்த்தம் என உணர்ச்சிகளோடு ஒன்றித்துஇ வார்த்தை ஜாலங்கள் கொண்டு தன் கவிதைகளைச் செதுக்கியுள்ளார்.

அத்தோடு சமூகப்பிரச்சினையை புறத்தே ஒதுக்கிவிடாது இவர் தன் கையிலெடுத்துக் கொண்டு,

''இரவுகள் பகல்களானாலும்

பகல்கள் இரவுகளானாலும்

நிரப்பு நிலையங்கள் மட்டும்

நிரம்பி வழிகின்றன

காத்துக் கிடப்பவர்களின்

கண்ணீரால்...'' என வெயில் குளிக்கும் தலைகள் கவிதையில் பொருளாதார வீழ்ச்சியால் பாதிப்புற்று அவதியுறும் மக்களின் அவலத்தை எடுத்துக்காட்டுகிறார்.

பெண்ணை பேசுபொருளாய் எடுத்தியம்பாது விட்டால் தான் ஆச்சரியம். ஆனால் அதிலும் புதுமையைக் கலந்து மற்றவர்களைப் போன்றதன்று என் பார்வை என்பதை

''பொறுத்துக்கொள்ளுங்கள்

பெண்களே!

இராமர்களை உருவாக்கும் அவசரத்தில்

இந்திரர்களை மட்டும்

பிரசவித்து விட்டோம்'' என்ற இவரது வரிகளுக்கு கைதட்டி பாராட்டாமல் இருந்தால் தான் தவறெனலாம்.

யாரும் பார்க்காமல்

மீண்டும் ஒரு கணம்

வீட்டைத் திரும்பி பார்க்கச் சொல்கின்றன..

கண்களிடம்

எனும் கவி வரிகள் விடுதி வாழ்வை வாழ்ந்திடும் ஒவ்வொருவரையும் நெருங்கி அணைத்திடும் ஆழம் கொண்டவையேயாகும்.

இவை மட்டுமல்லாது குழந்தைகளின் கனநேர சந்தோஷத்தை அற்புதமாகக் கூறிய ''குழந்தைகளின் வானம்'', அண்மைக்கால பொருளாதார நெருக்கடியை எழுத்தில் வடித்த ''நாங்கள்'', கல்லூரி உணவகத்தில் கையாள் உத்தியோகம் செய்திடும் சிறுவனின் நிலை கூறிய ''நானும் அவனும்'', இன்றளவும் காதில் ஒலித்துக்கொண்டிருக்கும் வலி நிறைந்த குரலாம் ''காணாமல் போனவர்கள்'' என ஒவ்வொரு கவிதையும் எடுத்துக்கொண்ட பொருளும், அதன் ஆழமும், அவை வெளிப்படுத்திடும் உணர்வுகளும், ஏதேனுமொரு வகையில் அவை ஏற்படுத்திடும் தாக்கமும் எனத் தாம் செய்ய வேண்டியவற்றை இவரின் கவிதைகள் சிறப்புற செய்துவிட்டன எனலாம்.

ஆம், இன்றைய இளம் கவிஞர்களுக்கு ஆகச்சிறந்த எடுத்துக்காட்டாம் வில்வரசன், இக் கவிதைத் தொகுப்பைப் போல வாழ்வியல் யதார்த்தங்களை எடுத்துக்காட்டிடும் பல படைப்புக்களை இனி வரும் காலமதில் படைத்திட வேண்டும் என்பது பெரும் அவா.

# கிராமப் பேருந்தில் புளியம் பூக்கள் (ஸ்ரீவி.முத்துவேல்)

இதயம் விஜய், ஆம்பலாப்பட்டு..




என்வேரின் ஈரத்தில் மலர்ந்த பூவின் பார்வையில்... பூமியில் பிறந்த ஒவ்வொர் உயிரும் வளர வளர ஏதோ? ஒன்றை வளர்த்துக்கொள்கிறது. அது நல்லதாகவும் இருக்கலாம் தீதாகவும் இருக்கலாம். சில இடங்களில் நாம் உறுதியாகப் பேச வேண்டும். சில இடங்களில் பேசுவதைத் தவிர்ப்பதே சிறந்தது. ஒன்றைச் சொல்ல வந்து சொல்லாமல்விட்டு உணர்த்தும் இந்தக் கவிதை

வளர வளர

தன்மை மாறிடும்

சிறுகருவேல முள்ளின்...!

அவள் அந்தக் குளத்தில் நீராடவோ? நீரெடுக்கவோ? இறங்குகிறாள். அங்குப் படிந்திருக்கும் பாசியைக் கைகளால் நீக்கியதும் புது மலர்ச்சியைக் காண்கிறாள். அவள் எதைக் கண்டிருப்பாள்?. தன்மீது படிந்த பாசி நீங்கியதென்று குளத்திலிருந்த தாமரை மொட்டு விரிந்திருக்க வேண்டும் அல்லது பாசியை விலக்க விலக்க தன் முகத்தின் எழிலைப் பார்த்திருக்க வேண்டும். திரைகளை எல்லாம் விலக்கி வெளிவரும் ஒரு புதுமைப் பெண்ணைக் காட்டுகிறது வரிகள். இதோ அந்தக் கவிதை

தாமரைக்குளம்

பாசியை நீக்கும் விதவை

மலரும் மொட்டு...!

அவனும் அவளும் திருமணம் முடிந்து வீட்டிற்குத் திரும்புகின்றனர். அந்த வீட்டில் அவர்களின் தாய்தந்தை இல்லாமல் இருக்கலாம். இல்லையென்றால் பெற்றோர்களின் ஒப்புதலின்றி திருமணம் செய்துவிட்டுப் புதிய வீட்டிற்கு வந்திருக்கலாம். அந்த வீட்டின் வாசலில் நின்று வாழ்த்தி வரவேற்க யாருமில்லையே என்று வருந்துகின்றனர். இதை அறிந்து தன் பூக்களை உதிர்த்து வாழ்த்துகிறது வாசலில் நிற்கும் மரம். இதோ அந்தக் காட்சிப் பதிவு.

வாசலில் மணமக்கள்

மெல்லக் காற்று வீசியதும்

பூத்தூவும் மரம்...!

பெரும் பெரும் துன்பங்களை எல்லாம் துடைத்தெறிந்து பயணம் செய்யும் மனதைப் பெற்றிருந்தும் சிலநேரம் சிறு துன்பத்தைக் கூட கடக்க முடியாமல் அதே இடத்தில் நின்றுவிடுகிறான்.

இதைவிட பெரும் பெரும் படைகளே ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டன. இதுவா? எனை வீழ்த்தப் போகிறது என்ற செருக்கால் சிறுபடையிடம் தோற்கிறான் பேரரசன். பல கோணங்களில் இந்தக் கவிதை

புயலுக்கே சாயாத மரம்

சாய்ந்து கிடக்கிறது

சிறு கோடாரிக்கு...!

இன்னும் பல கவிதைகள் இருக்கின்றன. அன்பின் வேர்களில் தான் பல கவிதைகள் பூத்து வாசத்தையும் பரப்புகின்றன.

எழுத்தில் உச்சம் தொட இதயம் நிறைந்த அன்பின் வாழ்த்துகள்.




# பெரிய கெழவன் வீடு

கவிஞர். அய்யனார் ஈடாடி

ஆனி மாதம் பிறந்து விட்டது.ஆதம்மாளின் பொங்கலுக்கு பேச்சுக் கிளம்பியது.

ஒருகூட்டத்தினர் எப்போதுமே எதிர் பேச்சாய் பேசிக்கொண்டிருப்பர்.புதன்கெழமை பளாறென்று விடிகிறது. மடைக்குடும்பன் ஊரைச்சாட்டுகிறான். சாமி பேச்சு பேசப்போறாம் வீட்டுக்கொரு ஆளு வாங்கோ என்று.

ஊரார்கள் கூட்டம் மந்தையில் திரண்டது.

பெரிய வீட்டுல இருந்த கனத்த கெழவன் நெற்றி நெறைய விபூதியை அப்பிக்கொண்டு வெத்தலை பாக்கு போட்டுக்கொண்டு கெழக்கே பார்த்தபடி கால்மேல காலு போட்டு ஒக்கார்ந்து இருந்தான்.

மீனாத்திக்கெழவி கூர வீட்டுக்குள்ளஇருந்து முந்தாங்கிச் சீலையை உருவி திங்கு திங்குனு சாமி எறங்கி ஆடி ,கூட்டத்துக்கு மத்தியில வந்தாள் . கெக்கெளித்துக் கொண்டிருந்த ஊரார்கள் மீனாத்திக்கெழவியை கண்டதும் அமைதியானார்கள்.

இன்னக்கெழமை பொழுது சாய்ஞ்சு இத்தனை மணிக்கு பொங்கல வச்சு தளுகைய போடுங்கனு சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டாள்.

ஆதமத்தா கெழவி மேல எறங்கி வாக்குச் சொல்லிட்டாள்ல பிறகு வேற கேள்வியெ கேளுங்கப்பா என்கிறான் ஊர்குடும்பன்.

கூட்டத்தில சிலர் சாமி நீங்களே ஆடுறேங்க

சாமி பானையும் ஒங்க வீட்ல எறக்கிக்கிறேங்க

என்றவுடன் பெரிய கெழவனுக்கு கோவம் கிளம்பியது.

வரமொறைய மாத்த நீ யாருடா,காலங்காலமா தொன்றுதொட்டு வரும்பழக்கம் அது என்றார்.

பெரிய வீட்டை ஊரே மெச்சிக்கொள்ளும் அளவிற்கு பட்டாணிக்குடும்பன் கட்டிவைத்துச் சென்றிருக்கிறான்

ஒவ்வொரு சுவரும் அஞ்சாளுக கைகட்டி அனையும் சுவரு , நெல் கொட்டி அடஞ்சு வைக்க பெரிய மருசல், கரிசக்காட்டுல ஓலை வெட்டி கொண்டு வந்து கூரமேஞ்சு வீட்டைக் கட்டியிருக்கிறார் பெரியகெழவன் பட்டாணிக்குடும்பன்.

பெரிய கெழவன் வீடு என்ற சொல் காலப்போக்கில் பெரிய வீடு என்றாயிற்று.

ஊரில் நடக்கும் நல்லது கெட்டது எது என்றாலும் பெரிய வீட்டுக்குத் தான் மொதச் செய்தி வரும்.

நஞ்சைவயலும் சம்பா நெல்லும்,கேப்பையும்

ஒழவு காளைகளும் ,ஆடு மாடுகளும்,எருமைகளும் கோழி குஞ்சுகளும் நெரம்பி கெடக்கும் பெரியவீட்டில்.

சாமி நீங்களே ஆடிக்கோங்க பொங்கப்பானைய மட்டும் மந்தையில எறக்கிருவோம் என்றவுடன்

பெரிய கெழவன் எட்டி ஒதச்சதுல எதிர்தரப்பினர் கீழே விழுந்தனர்.

எதிர் தரப்பினர் சிலர் வரி குடுக்க முடியாது,நீங்க எப்படி சாமி கும்பிடுவேங்கனு பார்த்திரலாம்னு என்ற சலசலப்போடு கூட்டம் கலைந்தது.

கருப்புச்சாமியாடிக்கு ரெண்டும் பொம்பள பிள்ள. இவருக்குப் பெறகு வாரிசு இல்லை.

கருப்புச்சாமியாடியோட பொண்டாட்டி ஒழுக்கங்கெட்டு போனதால ஊரக்கூட்டி அவதாரம் வாங்கிட்டார்கள் ஊரார்கள் தப்பு செய்தால் தண்டனை என்னவென்றால் கண்மாயை சுத்தம் செய்யறதும் வாய்க்கால் வரப்புகளையும் சுத்தம் செய்றது .

கருப்புச்சாமியாடி பொண்டாட்டிக்கு அவதாரமாக ஓடவாய்க்கால் மேல நடை பாதைக்கல் போடச்சொல்லி ஊரார்கள் உத்தரவு போட்டனர்.

ஊரார்கள் முன் தலைகவுந்து போனார் கருப்புச்சாமியாடி.

மேற்கே இருந்து கெழக்கே வரப்பை தாண்ட முடியல.

கண்மாய் பெருகிருச்சினா கொறவல முட்ட தண்ணி போகும்னு

நடை பாதைக்கல்லு போடச்சொல்லி பஞ்சாயத்தை முடித்தனர்.

ஊரெங்கும் வீடுவாசல் தீத்தி மொழுகி வெளக்கி வைத்த வெண்கலப் பானையைப் போன்றிருந்தது.

ஊர் நுழைவாசலில் தோரணக்கொடியில் வேப்பங்கொப்புகள் விரித்தாடுகின்றன

மீனாத்திக் கெழவி தண்டட்டி ரெண்டையும் காதில போட்டு, பதக்கஞ்சங்கிலியை கழுத்தில போட்டு ,கூரச்சீலைய வரிஞ்சு கட்டி மாடத்தீபம் முன் சாம்பிராணி புகை முட்டி மோத குலவை போட்டு சாமி எறங்கியாடுறா

நையாண்டி மேளமும் உறுமியும் ஊர் தெறித்தது.

பத்தூரு சனம் திரண்டு மீனாத்தி கெழவி பின்னாடி வருகிறது.

மேளகாரர்கள் முன்னே அடித்துச் செல்கின்றனர்.

வயலுக்குள்ள எறங்குனதும் மீனாத்திக்கெழவிக்கு உச்சி நரைமுடியெல்லாம் தூக்கி உச்சத்துக்கு செல்வாள்.

நெருப்புகள் பூத்த பள்ளத்தில் அக்னிக்குழம்புகள் கதகதவென இருக்கும்.

எச்சி படாம அவளுக்கு ஆதமத்தாவுக்கு தனிப்பானையில வச்ச பொங்கலை தளுகை போட்டு சூடம் பொருத்தி தேங்காய் ஒடைச்சு

மொகம் நெறைய சந்தனத்தை அப்பிய படி

முந்தாங்கி மடியிலே நெருப்பினை கங்கோடு அள்ளி முடிஞ்சு சாமிஎறங்கி குலவை போட்டு ஆடுவா மீனாத்திக்கெழவி

ஊருக்கு வாக்குச் சொல்லி ஆடுவா மீனாத்திக்கெழவி

கரையில இருக்க அண்ணன் ஈடாடியையும் மலையில இருக்க அக்கா கொவாலியும் உத்திரவு கொடுத்து தான் நான் உத்திரவு கொடுப்பேன் என்றாள்

இந்த வருசம் மழை பேய்ஞ்சு கண்மாய் பெருகும் வெள்ளாமை செழிக்கும்

பட்டி பெருகும் என்று சொல்லிக்கொண்டே வயலை மூன்று முறை சுத்தி வருகிறாள்

பத்தூரு சனமும் மீனாத்திக்கெழவி காலில விழுந்து விபூதி வாங்கிச் செல்லும்

பொங்கப்பானை

தேங்காய் பழம் கொட்டு மேளத்தோடு ஊரார்களோடு மீனாத்திக்கெழவி பெரிய வீட்டிற்குள் நுழைகிறாள்.

பொங்கப்பானை வீட்டிற்குள் வரும் போது பெரியவீட்டுக்கெழவி அழகத்தாவும் சாமியிறங்கி ஆடுவா.

பெரிய வீட்டுல பெறந்த பிள்ள முதல் எல்லோரும் மீனாத்திகெழவியிடம் விபூதி வாங்கினார்கள்.

ஊருக்கு மேற்கே கரையடி அண்ணனுக்கும் மலைமேல் அக்கா கொவாலிக்கும் இரட்டைக்கெடாக்கள் கொம்பு சீவி ஆடி அலைந்தது குலவை தெறிக்கும் கூட்டத்தில் மௌனம் சாதித்தது சக்திக்கெடாக்கள்.

மஞ்சள்நீரை மறுபடியும் ஊற்றியும் குலுங்க வில்லை

மீனாத்திக்கெழவி பொக்கைவாயில் ஏதோ சொல்லிக் கொண்டே விபூதியைப் போட்டதும் குலுங்கி அலம்பியது கெடாக்கள்.

ஊர்ப் பொங்கல் முடிந்து இயல்புக்கு திரும்பினார்கள் ஊரார்கள்.

மிச்சம் மீதி வரவு செலவு கணக்கு பார்த்து ஊர்க்கூட்டத்தின் முன் சமர்ப்பித்தார் பெரிய வீட்டுக் கெழவன்.

ஆடிப்பதினெட்டாம்பெருக்கு முடிந்து ஒழவு தொடங்கியது .

பெரிய வீட்டுல மொத ஒழவு ஓட்டிய பிறகு ஊரார்கள் அவரவர் நஞ்சையில புழுதியில் ஒழவு ஓட்டினார்கள்.

ஒவ்வொரு ஒழவு ஆரம்பிக்கும் பொழுதும், பெரிய வீட்டுல தான் ஊரார்களுக்கு சாப்பாட்டு விருந்து.

கருக்குடித்த மேகங்கள் சுழ்ந்து வந்து சுழற்றி பொழிகின்றன

நஞ்சை பூராம் வெள்ளக்காடா நிக்கிது மழைத்தண்ணி.

சித்திரையில் பெய்ஞ்ச மழைக்குப் பிறகு ஆடியில தான் பெய்ஞ்சிருக்கு.

பெரிய வீட்டு மருசல் நெறைய நெல்மணிகள் அலம்பிக் கிடக்கின்றன.

பெரிய வீட்டுக்கெழவன்

ஊரடி நாற்றங்காலில் நாற்றுப் பாவ,வெத நெல்லை அளக்கச் சொல்லி உத்தரவு போடுகிறார்.

ஊரார்களின் ஒரு தரப்பினர் திருப்பரங்குன்றம் முருகனுக்கு நம்ம கரட்டுல பூசை போடுனும்னு பெரிய வீட்டுக்கு வந்தனர்.

பெரிய வீட்டுக் கெழவன் ஒத்துக் கொள்ளவில்லை. நம்மள காக்குற ஆதி தான் நம்ம குலத்தை காக்கிறவ

அவகிட்ட ஒரு உத்தரவு கேட்டுருவோம்னு பெரிய வீட்டுக்கெழவன் சொல்ல யாரும் செவி கொடுத்து கேட்க மறுத்தனர்.

கருப்புச்சாமியாடிய வச்சு இருபத்தொரு சாமியழச்சு சாமி எறக்கி , திருப்பரங்குன்றம் முருகனுக்கு பூசை போட்டே தீருவோம் , முருகனுக்கு வச்ச பொங்க பானையையும் மந்தையில எறக்குவோம் என்று சொல்லிவிட்டு கிளம்பிவிட்டனர்

பெரிய வீட்டு பங்காளிகள் அங்காளிகள் யாரும் கலந்து கொள்ளவில்லை.

கருப்புச்சாமியாடி மற்றும் இருபத்தொரு சாமியாடிகளோடு கரட்டுல பூசை போட்டு சாமியாடிக் கொண்டிருந்தனர்.

மீனாத்திக் கெழவி மேல ஆதமத்தா எறங்கி, சீலையை வரிஞ்சு கட்டிக்கொண்டு ரெண்டு கைகளையும் வீசிக்கொண்டு திங்குனு திங்குனு கரட்டுக்கு போயிட்டா

அண்ணங்குதிரை என்ன சொல்லுச்சுனு கேட்டா

அண்ணங்குதிரை பானையை மந்தையில எறக்கச் சொல்லுச்சுனு சொன்னார்கள் கூட்டத்தில் மத்தியில் இருந்தவர்கள்

அண்ணங்குதிரை அப்படியா சொல்லுச்சு

எருவு அடுக்கிட்டேன் எட்டே நாள்ல அண்ணங்குதிரைக்கு எருவு அடுக்கிட்டேன் என்று சொல்லிவிட்டு விறுவிறுவென பெரிய வீட்டு சாமி வீட்டிற்குள் வந்து நுழைந்தாள் .

ஊரார்கள் கைகளைக் கட்டிக்கொண்டும் வாயைப் பொத்திக் கொண்டும் நின்றனர்.

பூசை முடிந்து கொட்டு மேளத்தோடு பொங்கப் பானையை மந்தையில கொண்டு வந்து எறக்கினர்.

பொய்யான வாக்குச் சொன்ன

கருப்புச்சாமியாடிக்கு அன்று இரவு முதல் ஒடம்பு பூராம் காந்தத் தொடங்கி விட்டன.

அய்யோ எரியுதே காந்துதேனு கூப்பாடு போட்டு ஊரைக்கூட்டினார்.

நந்தவனத்தில இருந்து தென்னை ஓலையும் வாழை

மட்டையும் வெட்டிக் கொண்டு வந்து வீசினர் .

இளங்காத்து பட்டால் எரிச்சல் குறையும் என்று.

ஆனாலும் எரிச்சலும் காந்துதலும் குறையவில்லை.

வைத்தியரை அழைத்து வந்து என்னென்னவோ செய்தார்கள் .

ஒரு முன்னேற்றமும் இல்லை நாவு உள்ளிழுத்து, தண்ணிமட்டும் ஆதாரமாக ஊத்திக் கொண்டிருந்தனர் .

பெரியவீட்டுக்கு சேதி வந்தது கருப்புச்சாமியாடி படுத்த படுக்கையானார் என்று.

ஆதமத்தா வாக்கு பலிக்காமயா போயிரும் என்று பெரிய வீட்டார்கள் சொன்னார்கள்.

மீனாத்திக்கெழவி சொன்னது போல எட்டாவது நாள் கருப்புச்சாமியாடி மண்ணைவிட்டு பிரிந்து இயற்கையோடு இணைந்தார்.

பெரிய வீட்டுல இருந்து கெழவன் போய் இறுதிக் காரியத்துக்கு ஏற்பாடு செய்தார்.

பெரிய வீடு ஆதி வளர்ந்த வீடு , யாரெல்லாம் பெரிய வீட்டுக்கு எதிராக நின்று பொங்கப் பானை எறக்குவதை எதிர்க்கிறார்களோ அவர்கள் யாரும் மறு ஆண்டு ஊர்ப்பொங்கலுக்கு ஊரிலும் இருப்பதில்லை உலகத்திலும் இருப்பதில்லை.

காலங்கள் கட்டவண்டிச் சக்கரமாய் நகர்கிறது.

மீனாத்திக்கெழவியும் சென்றுவிட்டாள்.

சாமியாடுவதற்கு வேற ஆளு யாருமில்லை.

கெழவி விபூதியும் வைக்காமா சென்று விட்டாள்.

பெரிய வீட்டு வாரிசாக பட்டாணிக்குடும்பனுக்குப் பிறகு அய்யணக்குடும்பன் இருந்தான் . அவனுக்கு பிறகு வெள்ளமூக்கு இருக்கிறான்.ஊரார்கள் முறையிட்டு கேட்டனர்.

கெழவியும் செத்துப் போனாள். சாமி எறக்கனும் ஊர் பொங்க வேற வருது என்றனர்.

புதுக்கோட்டை கோடாங்கியை கூட்டியாந்து சாமி எறக்கிடலாம் என்று பெரிய வீட்டுகாரர் சொல்லிவிட்டார்.

மடைக்குடும்பன் ராவுத்தக்குடும்பன் கெழக்க இருந்து மேற்கே கண்மாய்க்கரை வரை வர சனிக்கிழமை நம்ம ஆதமத்தா சாமி எறக்கப் போறாம் வீடு வாசல் கழுவி சுத்த வத்தமா இருங்கப்போய்னு ஊரைச்சாட்டினான்.

சனிக்கிழமை ஊரெல்லாம் சுத்த பத்தமா பயபக்தியோட இருந்துச்சு.

புதுக்கோட்டை கோடாங்கி இருபத்தொரு தெய்வம் அறுபத்தொரு சேனைகளை அழச்சு உடுக்கை அடுச்சான்.

குப்பையிலே வெளயாடிக்கிட்டு இருந்த சின்ன பையன் ஈடான் மேல சாமி எறங்கி உருண்டு கொண்டே சாமி எறக்கும் எடத்துக்கு வந்து தெருப்பை எடுத்து ,கோடாங்கி கேட்ட கேள்விக்கெல்லாம் பதில் சொன்னான்.

ஊரார்களில் சிலர் அது எப்படி பொம்பளச்சாமி ஆம்பளைக்கு வரும் என்று எள்ளி நகையாடினர்.

சிலர் ஒரே வாரிசு சாமி எறங்கி ஆடுறாங்க

பொங்கப் பானையும் எறக்கிக்கிறாங்கனு பெரிய வீட்டுக்காரரை நோக்கி கேள்விகளை அள்ளி வீசினர்.

ஊரெங்கும் தோரணமாலையும் மலர்வாசமும் கொட்டு மேளமும் பத்தூரு சனமும் ஈடான் சாமியாட்டம் பார்க்க வருவார்கள்.

பரம்பரையாக பெரிய வீட்டுக்கு எதிராக கூக்குரல் போடுபவர்கள் ஒன்று கூடி இந்த வருசம் பொங்கப்பானையை மந்தையிலே எறக்குவோம்.

ஊர்க்கணக்கு வழக்குகள நாங்க பார்த்துக்கிறோம் என்று பெரிய வீட்டு முன் திரண்டனர்.

ஈடாடிச்சி மாடத்தீவத்தை பொருத்தி பூ போட்டுக் கொண்டு இருந்தாள்.

ஒலையில அரிசியை கழஞ்சு போட்ட கையோடு மூக்கம்மா விக்குவிக்குனு மச்சுனு வீட்டுக்குள்ள வந்ததும் சாமி எறங்கி இன்னும் ஒரு வாரத்தில அவன் என்ன கெதி ஆகப்போறானு சொல்லிவிட்டு அடுப்படிக்கு சென்றுவிட்டாள்.

மூக்கம்மா சொன்னதைப்போல பக்கத்தூரு காய்ஞ்சூரான் கூட்டங்கள் வந்து அடித்து நொறுக்கி மண்டையை உடைத்து விட்டனர்.

ஊரை விட்டு ஓடி விட்டார்கள்.

தலைமுறை தலைமுறையாக பெரியவீட்டுக்கு வரும் ஆதமத்தா பொங்கப்பானையை எவனொருவன் எதுக்குறானே மறுவருடம் அவன் உயிருடன் இருப்பதில்லை.

ஈடான் நெறமாலை போட்டு சந்தனம் பூசி தல உருமா கட்டி பெரிய வீட்டு முன் ஆடும் ஆதமத்தா சாமியாட்டமும்,பொங்கப்பானை எறங்கி வச்சதும் வாக்குச் சொல்றதும்

பெரிய வீட்டுப் பெண்கள் பானை வரும் போது பொற்குலவை போட்டு ஆடும் சாமியாட்டமும் இன்னும் பூத்துக் கொண்டிருக்கின்றன உலர்ந்த கண்களில்...

# பாரியன்பன் நாகராஜன் கவிதைகள்

*1.*

*கவிதை மனமின்றி*
*கவிதைக்குள்*
*எளிதாய் நுழையமுடியாது.*
*விரமிருந்து*
*பக்தியுடன் கடவுளை*
*தரிசிப்பது போலத்தான்*
*கவிதையைப் பற்றுடன்*
*ரசிப்பதும் அதில் லயிப்பதும்.*
*கவிதைகள்*
*காற்றில் பறக்கும்*
*இறகென இருத்தல்*
*மிகவும் அவசியம்.*
*கவிதையும்*
*கவிதை வாசிப்பவரின் மனமும்*
*வாசம் தாங்கிவரும்*
*தென்றலைப் போலிருத்தல்*
*சிறப்பு.*
*சில கவிதைகள்*
*மேற்கூறியவைகளிலிருந்து*
*புயலென மாறுபட்டு*
*படைக்கப் படுவதுமுண்டு.*
*இம் மாதிரியான*
*கவிதைகள்*
*நிச்சயம் புரட்சியை*
*உண்டுபண்ணுமென தீர்க்கமாகச்*
*சொல்லமுடியாது.*
*எது எப்படியோ*
*கவிதை கவிதையாய்*
*இருக்கும் பட்சத்தில் தான்*
*காலங்கள் கடந்தும் பேசப் படுகின்றன*
*பல கவிதைகள்.*

*2.*

*கிழக்கில் உதயன் மேற்கு*
*நோக்கிய எனது பயணத்தில்*
*என்னை முந்திச் செல்கிறது*
*என்நிழல்.*
*மேற்கில் உதயன்*
*இப்போது கிழக்கு*
*நோக்கிய எனது பயணத்தில்*
*என்னை முந்திச் செல்கிறது*
*என்நிழல்.*
*இத்திசை என்திசையென*
*நிர்ணயிக்கப்பட்ட நாளில்...*
*மயானம் செல்கிறது என்பிணம்.*
*அங்கும் முந்திச்சென்று*
*சவக்குழிக்குள் இருந்தபடி*
*இன்புற்று வரவேற்கிறது*
*என்னை என்நிழல்...!*

*3.*

*பறவைகள் வரத்தின்றி*
*கட்டாந்தரையாய்க் கிடக்கிறது ஏரி.*
*பிள்ளைகள் கிட்டிப்புள்ளாடவும்*
*மட்டைப்பந்தாடவும் வசதியா*
*இருக்கு.*
*ஊருக்கு மேற்கே*
*தடுப்பணைக்கட்டின*
*புண்ணிவானுக்கு நன்றி சொல்ல*
*மனசு வரல.*
*மழை வந்ததும் வெள்ளத்தினூடே*
*ஓடிக் கரைய வேண்டிய*
*ஆனந்தக் கண்ணீர் அப்படியே*
*இருக்கு கண்களில்.*
*கேட்டாப் போதும்*
*அணை வெள்ளமாப் பாயும்*
*ஒருவரும் கேட்பாரில்லை.*
*பறவைகள் வரத்தின்றி*
*கட்டாந்தரையாய்க் கிடக்கிறது ஏரி*
*மின்னலாய் வெடித்துக் கிடக்கிறது*
*வயல்வெளி.*
*தொப்பூழ் சுருக்கம் விழ*
*பசியால் ஒட்டிய வயிற்றை*
*நாங்க யாருக்குன்னு காட்ட...!*

பாரியன்பன் நாகராஜன்



# இலக்கியங்களில் திருமணங்கள்

பிரேமா இரவிச்சந்திரன் (சென்னை)

தொல்காப்பிய நூலினைத் தொடங்கி பல்வேறு நூற்றாண்டுகளில் வாழ்ந்த தமிழ் அறிஞர்கள் வெவ்வேறு சூழ்நிலைகளைப் பதிய வைக்கும்படி சங்க இலக்கிய நூல்களை இயற்றியிருந்தாலும், அவற்றை முறைப்படுத்தி ஒழுங்குப்படுத்தி வரிசைப்படுத்தி மக்களிடம் வகைப்படுத்திக் கொடுத்த பெருமை நமது தமிழ் தாத்தா உ வே சாமிநாத ஐயர் அவர்களையே சாரும். ஒரு கருப்பொருளை மையமாகக்

கொண்டு பன்னெடுங்காலமாக அதன் மீது நிகழ்ந்து வருகின்ற மாற்றங்களை உற்று நோக்க வேண்டுமெனில் வெவ்வேறு நூற்றாண்டுகளில் எழுதப்பட்டிருக்கும் சங்க இலக்கிய நூல்களை ஆராய்ந்தால் அதன் பரிணாம வளர்ச்சியை நம்மால் கண்டு கொள்ள இயலும். இவ்வாறாக இயற்கையையும் அதனை சார்ந்த உயிர்களையும், மக்களின் வாழ்க்கை முறைகளையும், பெண்களின் நிலையையும், மன்னர்களின் ஆட்சியையும், உணவு முறைகளையும், வாழ்ந்த பறவைகளையும், இருந்த மரங்களையும், இன்னும் பலவற்றையும் கண்கொண்டு நோக்கினால் நம்மால் கண்டடைய இயலும். இதன் போக்கில் பண்டைய திருமண முறைகளை ஆராயும் எண்ணம் கொண்டு தேடியதில் கிடைத்த நூல்களிலிருந்து பெற்றத் தகவல்களை இவ்விடம் பகிர்ந்தளிக்கிறேன்.

நாம் இழந்துவிட்ட பல்வேறு இலக்கிய நூல்களைத் தொடர்ந்து உருவான தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் இடம் பெற்றிருக்கும் இரண்டு திருமண முறைகளாவது ஒன்று களவு எனவும் மற்றொன்று கற்பு எனவும் அழைக்கப்படுகிறது. அன்பு அறிவு அழகு குடிபிறப்பு ஆகியவற்றில் ஒத்து விளங்கும் ஆணும் பெண்ணும் எதிர்பட்டு ஒருவரையொருவர் சந்திக்க நேர்கையில் விருப்பம் கொண்டு பிறர் அறியாதபடி உள்ளம் கவர்ந்து அறநிலை வழுவாமல் பழகி மணம் புரிய விரும்புவதை களவு மணம் எனவும், பெரியோர் கலந்து பேசி இன்னாருக்கு இன்னாரென முடிவு செய்து திருமணத்தை நிகழ்த்துவதற்கு கற்பு மணம் என்றும் பெயராகிறது.

அக்காலங்களில் திருமணம் நடக்கின்ற இடமாக தமிழ்ப் புத்தாண்டின் பிறப்பான சித்திரை மாதத்தில் பூத்துக் குலுங்கி மணம் வீசும் வேங்கை மரத்தின் நிழல் அமைந்த திறந்தவெளியே இருந்திருக்கிறது. அதன் அடையாளமாகவே இக்காலத்தில் கட்டிடங்களுக்குள் நடக்கும் திருமணங்களில் பூங் கொத்துகளுடன் கூடிய வேங்கைமர கிளைகளைக் கொண்டு அரசாணிக்கால் நட்டு வைத்து திருமண விழாவைத் தொடங்கி வைக்கிறார்கள். அவை கிடைக்காத பட்சத்தில் மாமரக்கிளைகளை பயன்படுத்துகிறார்கள். மலரானது மொட்டு அரும்பு போன்ற பருவங்களில் இல்லாமல் மலர்ந்த பிறகே மணக்கிறது. மணமக்களின் மனதில் அன்பு மலரும் பருவத்தில் நடக்கும் இந்நிகழ்ச்சியை திருமணம் என குறிப்பிடுவதும் மலரின் மணத்தையே குறிக்கிறது. ஒரு ஆணும் பெண்ணும் மணம் புரிவதில் மிகப்பெரிய அறப் பொறுப்பு இருக்கிறது என்பதை மனதில் கொண்டு பலர் கூடி நடத்துகின்ற நிகழ்ச்சி என்பதால் திரு என்னும் சொல்லை இணைத்து திருமணம் எனும் உயரிய பெயரைப் பெற்றிருக்கிறது. கல்யாணம் என்பது வடமொழிச் சொல்லாக இருக்க திருமணம் என்பதே தூய்மையான தமிழ்ச் சொல்லாகும்.

## 2 திருமணப் பொருத்தம்

மணமக்களுக்கிடையே திருமணப் பொருத்தம் காண்கின்ற முறையை தொல்காப்பியம் விளக்குகிறது.

1. தன் தகுதிக்கு குறையாத குடிபிறப்பு.
2. பிறந்த குடியினது ஒழுக்கங்களிலிருந்து வழுவாமை.
3. ஊக்கத்தோடு செய்கின்ற முயற்சி.
4. பெண்ணை விட மூத்தவராக ஆணின் வயது இருப்பது.
5. பொருத்தமான உடல் அழகு, நலன் மற்றும் உருவ அமைப்பு.
6. சமமான அன்பு.
7. தனது குடும்பச் செய்திகளை போற்றிக் காக்கின்ற நிறைப் பொருத்தம்.
8. இருவரும் எல்லா உயிர்களிடமும் அன்பு கொண்டவர்களாக இருத்தல்.
9. உலகத்தோடு ஒட்ட ஒழுகும் ஒத்த உணர்வு உள்ளவர்களாக இருத்தல்.
10. இருவருமே செல்வ நிலையில் சமதகுதி உள்ள குடும்பத்தவராக இருக்கின்ற திருப்பொருத்தம்.

என இவை யாவற்றிலும் இருவருக்குமான பொருத்தங்களை ஒப்பிட்டுப் பார்த்து இணையும் மணமக்களது இல்லறமே இனிய நல்லறமாக விளங்குமென தொல்காப்பியர் இலக்கணம் வகுத்திருந்தாலும் இவற்றிலிருந்து மாறுபாடுடைய திருமணப் பொருத்தங்களையும் பின்னாளில் காண முடிகிறது.

வைதீக நெறிப்படி மணமக்களுக்கிடையே பார்க்கின்ற பொருத்தங்களாக, மணமக்கள் பிறந்த நேரத்தையும், நாளையும், இடத்தையும் வைத்து, தினம் கணம் ராசி நாடிப் பொருத்தம் போன்றவற்றை ஆருடம் பார்த்து திருமணம் புரியும் வழக்கம் அன்று தமிழ் மக்களிடம்

இருந்திருக்கவில்லை என்பதையும் இதிலிருந்து அறிய முடிகிறது.

பண்டைய காலத்தில் தனது வாழ்க்கைத் துணையை தானே தேர்ந்தெடுத்து வாழ்க்கையை நடத்தி வரும் பொழுது, நெறி தவறி தனது துணைவியை கைவிடவும் துணிகின்ற காரணத்தால் பலர் அறிய மணவிழாவை நடத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட திருமணச் சடங்குகளை தொல்காப்பியர் கரணம் என்று சொல்லில் குறிப்பிடுகின்றார். பலர் அறிய மேற்கொள்ளும் இல்லற நெறியை தன் வாழ்நாள் முழுவதும் இருவரும் போற்றிக் காக்க வேண்டும். அவ்வாறு காக்கத் தவறினால் மரணம் ஏற்படும் என்பதைக் குறிக்கும் படி, "கரணம் தப்பினால் மரணம்" என்கிற சொலவடையும் இதனாலேயே ஏற்பட்டிருக்கிறது.

திருமணம் நடக்கும் காலமாக வேங்கை மலர் மலரும் இளவேனிற் கால விடியற் பொழுதில், திங்கள் ரோகிணியுடன் சேர்ந்திருக்கும் நன்னாளில் திருமண நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார்கள். கன்னிப் பெண் பருவத்தில் பூச்சூடுவதை தவிர்க்க வேண்டுமென்பது கட்டாயமாக இல்லாவிட்டாலும், மலர் சூடிக்கொள்ளும் உரிமையை மணமான பிறகே ஒரு பெண் பெறுகிறாள் எனும் போது, மல்லிகை மலர்கள் மலரும் மாதங்களான வைகாசி ஆனி ஆவணி போன்ற மாதங்களில் மணமகளின் இல்லத்திலேயே பெரும்பாலான திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றன. உடன் போக்கிற்குப் பிறகு நிகழும் திருமணங்கள் மணமகனின் இல்லத்தில் நடைபெறுவதாக இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன. சங்க இலக்கியப் பாடல்கள் மணமக்களின் வயதைக் குறிப்பிடாவிட்டாலும் குழந்தைத் திருமணம் அன்று நடந்திருக்கவில்லை என்பதை, அவள் சிறுமியாக இருக்கும் பொழுது அணிந்திருந்த கால் சிலம்பினை கழட்டும் சடங்கு ஒன்றை நடத்திய பிறகே பெண்ணிற்கு திருமணம் நடப்பதிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

### 3. திருமண நிகழ்ச்சி நிரல்கள்

அகநானூறு போன்ற சங்க கால நூல்களின் வாயிலாக அறியப்படும் பழந் தமிழரிடையே நடைபெற்ற திருமண நிகழ்ச்சிகளாவது,

1. மணமக்கள் இல்லத்தில் செம்மண் பூசி புதுமணல் பரப்பி மலர் மாலைகளால் தோரணங்கள் கட்டி அலங்கரித்தல்
2. திருமணம் நடக்கும் வீட்டில் சங்கொலி பறையொலி முழங்குதல்.
3. திருமணத்திற்கு முன்பு தலைவிக்கு அவள் சிறு வயதில் அணிந்திருந்த சிலம்பினைக் கழட்டுவதற்காக சிலம்புகழி நோன்பு நடைபெறுதல்.

சிறு குழந்தை பருவத்தில் அணிந்த சிலம்பை அவள் கன்னியாகும் வரை அணிந்திருக்கிறாள். களவொழுக்கத்தில் எவரும் அறியாமல் தலைவனை காணச் செல்லும்பொழுது, சிலம்பின் ஒலி எழும்பாமல் நடந்து செல்வதை சங்க இலக்கியப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. தலைவனோடு உடன்போக்கு செல்லும் பொழுது, ஊரார் அவளைக் கண்டு, யார் இவள் என்ற கேள்வியில், கன்னியின் கால்களில் சிலம்பணிந்தும், துணைவனது கைகளில் வில்லேந்தியும் செல்வதைக் கொண்டு, இவ்விருவரும் மணமாகாதவர்கள் என்பதை அறிந்து கொள்கிறார்கள்.

பின்வரும் பாடல் வரிகளான,

"நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினும்

எம்மனை வதுவை நன்மணம் கழிக"

என்பதில், தலைவனோடு உடன் போக்கு சென்ற தலைவிக்கு சிலம்பு கழி நோன்பானது அவனது இல்லத்தில் நடைபெறுகிறது. தலைவியின் தாயானவள் திருமணமாவது தன் இல்லத்தில் நடக்க வேண்டுமென விரும்புவதை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

4.முதல் நிகழ்ச்சியாக சிறந்த விருந்தினை அளித்தல்.--

அகநானூற்றுப் பாடலில் இடம்பெற்ற வரிகளிலிருந்து அறிந்த தகவலாக, "மணநாளில் இடையர்கள் செம்மறி ஆட்டின் பழுப்பு நிறம் வாய்ந்த முதிர்ந்த தயிராகிய உலையில் வரகு அரிசியோடு புற்றிலிருந்து வெளிப்பட்டு அழிந்த ஈயலையும் இட்டுச் சமைத்த இனிய புளிப்பு வாய்ந்த விருப்பம் தருகின்ற சுவையுடைய சூடான சோற்றின் மீது பசுவின் வெண்ணையை வார்த்து உருகச் செய்து விருந்தாகக் கொடுப்பர் என்ற தகவல் இடம்பெற்றிருக்கிறது.

5. மணப்பந்தலில் புதுமணல் பரப்பி விளக்கு வைத்தல்.
6. இறை வழிபாடு செய்தல்.
7. புள்நிமித்தம் பார்த்தல்.

தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளின் அடிப்படையில் எதிரே வரும் நிகழ்ச்சி எவ்வாறு அமையும் என்பதை யூகம் கொள்ளும் செயலுக்கு நிமித்தம் பார்த்தல் என்று இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் மங்கலமான நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான காலத்தைக் குறிக்க நல்ல நேரங்காலம் பார்த்தல் என்கிறோம்.

8 இளங்காலை நேரத்தில் திங்களானது ரோகிணி எனும் நட்சத்திரத்துடன் சேரும் நல்ல நேரத்தில் திருமண விழா நடைபெறுதல்.

9. திருமணம் முழவும் பெரிய முரசும் முழங்குதல்.

10. மங்களப் பெண்டிர் குடங்களில் நீர் ஏந்தி வருதல்.

11. அந்த நீர் குடங்களில் நெல்லும் மலரும் தூவி நன்மக்களை ஈன்ற மங்கல மகளிர் நால்வர் மணமகளை வாழ்த்தி நீராட்டுதல்–

.மணமக்களின் மனதிலிருக்கும் அன்பின் அடையாளமாக மலரைத் தூவுவதும், நிலத்தில் விதைக்கப்படும் நெல் செழித்து வளர்வதைப் போல மணமக்களது சந்ததிகள் செழிக்க வேண்டுமென்பதே நெல் தூவுவதின் அடையாளமாகவும் இருக்கிறது.

12. காப்பு நூலைக் கட்டுதல்.

மணமக்களின் சுற்றத்தார் விருப்பமுடன் கூடியிருக்கும் வேளையில், வாகை மரத்தினது இலையைக் கொண்டு, அருகம் புல்லினது நீலமணி போன்ற நிறமுடைய கிழங்கின் நறுமணமிக்க அரும்புகளோடு தொடுத்த வெள்ளியக் காப்பு நூலை திருமணம் தடையின்றி நடக்க காவலாக மணமக்களின் கைகளில் கட்டுவதையே காப்பு நூல் கட்டுதல் என்கிறோம்.

13. புத்தாடை அணிவித்தல்.

14. இழை அணிவித்தல்.-இன்று தாலி கட்டுதல் என்ற நிகழ்வையே அன்று இழை அணிவித்தல் என்று குறிப்பிட்டிருக்கலாம். இழை அணிவதற்கு முன்பு மணமகனின் வலப்புறமாக அமர்ந்திருக்கும் மணப்பெண்ணானவள், அதன் பிறகு அவனது இதயம் அமைந்திருக்கும் இடப்புறமாக மணவறையில் அமர வைக்கப்படுகிறாள்.

15. பெற்றோர் மணமகளை தலைவனுக்கு வாழ்த்தி அளித்தல்.

என்ற படிகளில் பலபேர் கூடி திருமண நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார்கள்.

## 4. திருமணம் நடைபெறும் வகைகள்

திருமணம் நடைபெறும் முறைகள் இவ்வாறு இருக்க களவு கற்பு என இரண்டு வகைகளுக்குள் அடங்கும் வெவ்வேறு வகையான திருமணங்களை இயற்கையோடு இணைந்து வாழ்ந்த தமிழர்களது சூழ்நிலைக்கு ஏற்ப தொல்காப்பியர் மேலும் வகுத்திருப்பதாவது,

**1 களவு மணம்–முன்பே அறிமுகமென்பது இல்லாமல் ஒருவரையொருவர் எதிர்பட்டு சந்தித்து விரும்பி மணந்து கொள்வது.**

ஐந்து வகைத் திணைகளுள் இயற்கை வளம் மிகுந்து சந்தனம் மணக்கின்ற மலைவளத்தைக் கொண்ட குறிஞ்சி நிலத்தில் கொங்கும் வேங்கையும் அழகூட்ட, ஒத்த நலனையுடைய தலைவனும் தலைவியும் சந்தித்து அன்பு கொள்கின்றனர். ஒருவரையொருவர் முன்பின் அறியாத நிலையில் இருவரும் காணுதல் தொடங்கி மணம் புரிந்து இல்லற மேற்கொள்ளும் வரை நிகழும் செயல்களையெல்லாம் களவு ஒழுக்கத்தில் வருவதாக கூறப்படுகிறது. இருவரும் அடுத்தடுத்து சந்தித்துக் கொள்ளும் பொழுது, பிரிய நேர்ந்துவிடுமோவென்று அஞ்சுகின்ற தலைவிக்கு ஆறுதலாக அவளது தலைவன் அவளை தேற்றுகின்றான். அதற்காக அமைந்த குறுந்தொகைப் பாடலாக,

யாயும் ஞாயும் யாரா கியரே

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

யானும் நீயும் எவ்வழி அறிதும்

செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.

(குறுந்தொகை 7)

என்னும் வரிகள் அமைந்திருக்கிறது.

**2.தொன்றியல் மரபின் மன்றல்–**

உற்றாருக்கும் ஊராருக்கும் களவை அறவே மறைத்து, பெற்றோர் அறியாத நிலையில் மரபு மன்றல் (கற்புமணம்)

விரைவில் செய்துவிட வேண்டுமெனும் தோழியின் முயற்சியை,

“படாமை வரைதல்” என்றும் தொல்காப்பியம் கூறுகிறது.

**3.பரிசங் கொடுத்து மணத்தல்–**

மணமகளது பெற்றோரிடம் பரிசாக பணமோ நிலமோ அணிகலனோ வழங்கி திருமணம் நடக்க ஒப்புதல் அளிக்க கேட்டுக் கொள்வதை பரிசம் கொடுத்து மணத்தல் என்கிறோம்.

**4.சேவை மணம்–**

சில சமயங்களில் தலைவனானவன் தலைவியின் தந்தையின் உள்ளத்தில் இடம்பெறுவதற்காக அவரிடம் பணி செய்து தான் விரும்பியவளை மணந்து கொள்ள விருப்பத்தை தெரிவித்து அவளது பெற்றோரது

இசைவைப் பெற்று மணம் புரிவதை சேவை மணம் என்கிறோம்.

### 5.திணைக் கலப்பு மணம்–

ஐவகை நில மக்களுக்குள்ளும் கலப்பு மணம் இருந்த நிலையினை அகநாநூற்றுப் பாடல்கள் அறிவிக்கின்றன. நெய்தல் நிலமான உவர் நிலத்தில் விளைந்த உப்பினை விற்று மருத நிலத்தில் விளைந்த நெல்லினைப் பெறுவதற்காக அந்த நிலங்களுக்குச் சென்று உப்பு விற்கும் வணிகர்கள் தம்முடன் தம் குடும்பத்தையும் அழைத்துச் செல்வர். பக்கத்து ஊரில் இருக்கும் அந்நிலத்திற்குச் சென்று உப்பு விற்கும் வணிகரின் இளம் பெண்ணை மருதத் தலைவன் ஒருவன் கண்டு காதல் கொள்ளும் பொழுது அங்கே கலப்பு மணத்திற்கு வாய்ப்பு அமைகிறது.

### 6.ஏறுதழுவி மணமுடித்தல்–

காடும் காடு சூழ்ந்த இடமுமான முல்லை நிலத்தில் ஆநிரைகள் அதிகமாக இருந்தன. இந்நிலத்தில் வாழும் மக்கள் இடையர் அல்லது ஆயர் எனப்பட்டனர். இவர்களுக்கு உரிய விளையாட்டாக ஏறுதழுவுதல், குறவைக் கூத்தாடுதல், கொன்றை குழல் ஊதுதல் முதலியவை இருந்தன. தனது இல்லத்தில் ஒரு பெண் பிறந்த அப்பொழுதே ஏறு வளர்த்து வரும் குடும்பத்தினர், ஆயர் மகளிரை மணப்பதற்கு துணிந்த இளைஞனைக் கண்டடைய ஏறுதழுவும் வீர விளையாட்டினை நடத்தினார்கள். இதனை ஜல்லிக்கட்டு, காளை விரட்டு, மஞ்சுவிரட்டு என்றும் சொல்வார்கள். கன்னியான தன் மகளை மணமுடித்து வைக்க விரும்பும் தந்தை, பறையறைந்து செய்தியை அறிவித்து தனது காளையை அடக்கி வெற்றி கொள்ளும் வீரனைக் கண்டடைய ஏறுதழுவும் விளையாட்டை நடத்துவார். முல்லை நிலத்து ஆயர்கள், ஆடு மாடு போன்ற விலங்கினங்களைப் பாதுகாக்கும் தொழிலை உடையவர்களாதலால் அவற்றினை புலி போன்ற காட்டு விலங்குகளோ கள்வர்களோ கவர்ந்து கொள்ளாமல் காக்கும் பொருட்டு அவர்கள் வீர மறவர்களாகவும் இருத்தல் முக்கியமாக இருந்ததால், இவ்விதமாக தன் மகளுக்கு ஏற்ற தலைவனைத் தேர்ந்தெடுக்கும் முறையை அவர்கள் கொண்டிருந்தார்கள்.

### 7.மடலேறி மணமுடித்தல்–

தான் விரும்பியவளை அடைதல் அரிது என்கிற நிலை வரும் பொழுது எப்படியாவது அவளை அடைந்தே தீர வேண்டுமென்கிற எண்ணம் கொண்டு, ஊரறியும் படி மடலூர்ந்து தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளுதலை மடலேறி மணம் முடித்தல் என்கிறோம். மடலூர்தல் என்பதாவது தலைவன் பனை ஓலையினால் ஒரு குதிரையினைச் செய்து, தலைவி இருக்கும் ஊரிலுள்ள முச்சந்தியில் நிறுத்தி அதன் மேல் ஏறிக்கொண்டு கையில் அவளது உருவத்தை வரைந்த படம் ஒன்றை பிடித்துக் கொள்வான். பல நாட்கள் ஆனாலும் உண்ணாமலும் உறங்காமலும் அங்கேயே இருப்பான். அப்போது, "குதிரை மேல் ஏறி நின்று போர் செய்பவன் நான்! தற்பொழுது ஊரின் கண் நிற்கின்றேன். உலகத்தையெல்லாம் காக்க வேண்டுமென்கிற உள்ளம் உடையவன் நான்! இப்பொழுது இரந்து நிற்கின்றேன். இதற்கு காரணம் அவளே." என்றும் தன்னிலை மொழிவான். இதைக் காணும் ஊரார்கள் இரக்கப்பட்டு அவன் விரும்பிய பெண்ணை அவனுக்கே மணமுடித்து வைப்பார்கள்.

### 8.போர் நிகழ்த்தி மணமுடித்தல்–

தான் அடைய விரும்பும் பெண்ணை பெறுவது அரியது என்கிற நிலையில் போரிட்டு வெற்றி பெற்று தான் விரும்பியவளை மணந்து கொள்ளும் முறையும் இருந்தது.

### 9.துணங்கையாடி மணமுடித்தல்–

துணங்கைக் கூத்து என்பது மகளிருக்கான விளையாட்டில் ஒன்று. போரும் விளையாட்டும் ஒரு சேர நடக்கும் பொழுது, ஒளிபொருந்திய வளையை அணிந்த மகளிர் மனத்தை கொள்ளும் பொருட்டு மல்லர்களுடைய சேரிப் போரானது விரும்பிக் கொள்ளப்படும். அக்காலத்தில் ஒருவர் கண் மற்றொருவர் கண்ணெடு படும்படி துணங்கையை போரோடு ஒருங்கே நிகழ்த்தினார்கள்.

### 10.பலதார மணம்–

அறமே பொருளாகக் கொண்டு மகப்பேறு கருதி செய்யும் இரண்டாவது திருமணத்தை தலைவி அவன் செய்யும் செயலை தானும் விரும்பி ஏற்றுக்கொண்டு மணப்பெண்ணை வரவேற்று விளக்கு முதலிய மங்கலங்களோடு எதிர் சென்று தன் தங்கையெனக் கண்டு பெரிதும் மகிழ்ந்து தலைவனை நோக்கிக் கூறியது போன்ற பாடல்களும் இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கின்றன. ஒருவனுக்கு ஒருத்தி என்கிற முறைப்படி வாழாமல் ஒன்றுக்கு மேற்பட்ட துணையைப் பெறுவது தவறு என்று சொல்லாத சமூகமாக அன்று இருந்திருக்கிறது.

இவ்வாறான திருமண வகைகளெல்லாம் பின்னாளில் காலத்திற்கு ஏற்ப மாறியும் மறைந்தும் போயிருக்கின்றன.

### 5.வேத முறை ஒட்டிய வைதீகத் திருமணங்கள்

தொல்காப்பியத்தில் காட்டப்படுகின்ற திருமண முறையை ஆராய்ந்தால் சங்க காலத் திருமணமானது பிறர் கலப்பற்ற தூய தமிழர் திருமணமாக நடந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. கி.பி இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் செந்தமிழ் இலக்கியங்களில் தொன்மையும் சிறப்பும் அமைந்த

பேரிலக்கியமான சிலப்பதிகாரம் எனும் இனிய காவியத்தில் காவியத் தலைவன் கோவலன், தலைவி கண்ணகி இவ்விருவரது திருமண நிகழ்ச்சியானது விளக்கப்பட்டுள்ளது. சங்ககாலத்தில் நிகழ்ந்த களவு, கற்பு மணம் என்றில்லாமல், வணிகம் நன்கு சிறப்புற்றிருந்த சிலப்பதிகார காலத்தில், பெருங்குடி வணிகர்களான பெருநிதி படைத்த சம வலிமையுடைய பெற்றோர்கள் கோவலன் கண்ணகிக்கு திருமணம் செய்து வைக்க முடிவெடுக்கின்றனர். இரு பக்கத்துப் பெற்றோர்களும் நல்லதொரு நாளில் தங்களது பிள்ளைகளுக்கு மணமுடிக்க விரும்பி, அச்செய்தியினை யானையின் மேல் அணிகலன் அணிந்த பெண்களை அமர்த்தி அவர்கள் மூலம் நகர மக்களுக்கு மகிழ்ச்சியான இச்செய்தியை அறிவித்தனர். அவ்வாறு அறிவித்த பிறகு, குறித்த நாளிலே முரசுகள் முழங்குவதும் சங்குகளின் ஒலி எழும்புவதும் முறைப்படி நடந்தன. மலர் மாலைகள் தொங்கவிடப்பட்டு வைர மணிகள் பதிக்கப்பட்ட தூண்களையுடைய ஒரு அழகிய மண்டபத்தில், நீலப் பட்டினாலும் முத்து மாலைகளாலும் அமைக்கப்பட்ட அழகிய திருமணப் பந்தலின் கீழே, வானத்திலுள்ள திங்களானது ரோகிணி எனும் விண்மீனைக் கூடுகின்ற நல்ல நாளிலும், ஒப்பற்ற புகழையுடைய அருந்ததி எனும் விண்மீனையொத்த கற்புடைய கண்ணகி கோவலனோடு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு, மறைநூலில் சொல்லியிருக்கும் வேதநெறியை வயது முதிர்ந்த புரோகிதர் ஓத, திருமணம் நடத்தி வைக்கப்பட்டு, அவர்கள் வேள்வித்தீயை வலம் செய்தனர் என்று திருமண நிகழ்ச்சியானது காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தீவலம் வந்த பிறகு மங்கலப் பொருளேந்தி வந்த மகளிர் சூழ மலர்களைத் தூவி பெரியோர் வாழ்த்தினர். அப்போது கோவலனுக்கு வயது 16 கண்ணகிக்கு வயது 12 என்றும் சங்க இலக்கியங்களில் இதுகாறும் இடம் பெறாத மணமக்களின் அகவையும் இடம் பெற்றுள்ளது. இதிலிருந்து சிலப்பதிகார காலத்தில் வேதங்கள் ஓதி புரோகிதர்களால் நடத்தப்பட்ட வைதீக முறைத் திருமணங்களே நடைபெற்றிருக்க வேண்டுமென்பதை யூகிக்க முடிகிறது. மணிமேகலை காலத்தில், மாமன் மகளை மணம் செய்யும் பழக்கமானது தம்முடைய செல்வமானது தம் குடியிலேயே எக்காலத்தும் இருக்க வேண்டுமென்கிற எண்ணம் கொண்ட செல்வந்தர்களான வணிகர் குடியில் தோன்றியிருக்கலாம். உறவு முறையில் கொடுப்பதும் கொள்வதும் தொடர்வது இக்காலத்திலும் தமிழர்களிடையே வழக்கில் உள்ளதை நாம் அறிவோம்.

கிபி ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் உருவான பெருங்கதை எனும் நூலில் குறிப்பிட்டபடி, “திருமண நிகழ்ச்சிகளை நிகழ்த்த உகந்த நாளை ஜோதிடர் கணித்துத் தருவது, வள்ளுவன் யானை மீது அமர்ந்து முரசறைந்து நகர மக்களுக்கு திருமணச் செய்தியை அறிவிப்பது, நகரமே அலங்கரிக்கப்பட்டு வாயில் தோறும் தோரணக் கம்பங்கள் வாணளாவ நடப்பட்டு, பொன் மாலைகளும் முத்துமாலைகளும் கொண்டு அலங்கரித்து, யானைகளின் மீது கொண்டுவரப்பட்ட மங்கல நீரினால் இசைக்கருவிகள் முழங்க மணமகன் உதயணனும் மணமகள் வாசவதத்தையும் நீராட்டப்பட்டனர். என்பதிலிருந்து அக்கால திருமண நிகழ்ச்சிகளை அறிய முடிகிறது. மேடையில் அரசாணி நடப்பட்டு, தீவலம் வந்து, மூலையில் அம்மி இடப்பட்டு அருந்ததி பார்த்து திருமணம் நடப்பதும் இந்நூலில் இடம்பெற்றிருக்கிறது.

சங்க காலத் திருமண நிகழ்ச்சிகள் இயற்கையோடு பொருந்தி நடந்திருக்க, சிலப்பதிகாரத்தில் தீயை வலம் வரும் புதிய செய்தி கூறப்படுகிறது. அடுத்து எழுதப்பட்ட பெருங்கதையில் இவற்றோடு அம்மி மிதித்தலும் அருந்ததி காட்டல் போன்ற சடங்குகளும் இடம்பெற்றிருக்கின்றன என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

வேத நூல்களின்படி உண்மையில் இரட்டை விண்மீன்களாகக் கருதப்படும் அருந்ததியும் வசிட்டரும், விஞ்ஞான முறைப்படி தோற்ற மயக்கத்தைத் தரும் ஜோடி நட்சத்திரங்கள் என்றே சொல்லப்படுகின்றன. ஒரே நிறை மையத்தைச் சுற்றி வருகின்ற இரட்டை விண்மீன்களை விண்ணுலகம் கொண்டிருந்தாலும், அருந்ததியும் வசிட்டரும் வெவ்வேறு ஒளியாண்டுத் தொலைவில் ஒரே திசையில் அமைந்து தோற்றத்தில் ஜோடி போலத் தோன்றும் நட்சத்திரங்கள் என்பதே அறிவியல் உண்மை. அதனை பகலில் கண்டு கண்களுக்குப் புலப்படாவிட்டாலும் கண்டதாகவே சொல்லி தனது கற்பை நிரூபிக்கின்ற கட்டாயம் மணமகளுக்கு திருமணச் சடங்குகளால் நேர்ந்து விடுகிறது.

### இடைக்காலத் திருமண முறைகள்

கிபி ஆறு முதல் 16ஆம் நூற்றாண்டு முடிய உள்ள இடைக்காலப் பகுதியில் தோன்றிய பக்தி இலக்கியங்களான நாயன்மார்கள், ஆழ்வார்களது பாடல்கள், சூளாமணி, சிந்தாமணி, பெரிய புராணம், கந்தபுராணம், கம்பராமாயணம் போன்ற காவியங்களில் காணப்படுகின்ற பலவகையான திருமணங்களாக,பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணம், மகட்கொடை மணம்(சீதனம்), வீரமணம், உறவுமுறை மணம், கந்தர்வ மணம்,சுயம்வரமணம் போன்றவையாக இருக்கின்றன. இதில் கந்தர்வ மணம் சுயம்வரம் என்பது வட இந்தியாவிலிருந்து வந்த திருமண முறைகளாகும். இராமாயணத்தில் இடம் பெற்றிருக்கும் ராமன் சீதை திருமணம் வில்லொடித்த திருமணமாகவும், அரிச்சந்திர புராணத்தில் அரிச்சந்திரன் சந்திரமதி திருமணம் சுயம்வரத் திருமணமாகவும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. கந்தபுராணத்தில் இடம் பெற்ற முருகன் வள்ளி திருமணத்தில் களவுமணம்,

மடலேறுதல், உடன்போக்கு போன்ற யாவையும் இடம் பெற்றிருக்கின்றன. தாலி அணியும் சடங்கு இடம்பெறும் காட்சி பதினொன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட கந்த புராணத்திலேயே முதன்முதலாக வந்திருந்தாலும் இதற்கும் முன்புள்ள நூல்களில் இழை(நூல்) என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பனிரெண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கம்பராமாயணத்தில், மங்கல நாண் என்னும் சொல்லை கம்பர் பயன்படுத்தியிருக்கிறார். அதே காலத்தில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர் கம்பர் இறந்த நாளைக் குறிப்பிடும் பொழுது, "கம்பரது துணைவி நூல் இழந்த நாள்" என்று எழுதியிருக்கிறார்.

இவ்வாறு தொடர்கின்ற திருமணங்களானது, காலப்போக்கில் சடங்குகள் நிறைந்து, மதம் சாதி சூழல் செல்வம் போன்றவற்றின் அடிப்படையில் வேறுபட்டு, திருமணத்தில் நடக்கின்ற துன்பங்களாக குழந்தைத் திருமணம், பெண் பிள்ளைகளுக்கான அளவுக்கு மீறிய சீதனம், விரும்பியவரை மணப்பதற்கு மறுப்பு, என்றெல்லாம் தொடரவே இவற்றிற்கெல்லாம் தீர்வாக பல தலைவர்கள் தோன்றி சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற ஆரம்பித்தன.

அவர்களுள் தலைமையானவர்களாக இருக்கும் நால்வர் இச்சமூகத்தால் வணங்கத் தக்கவர்கள்.

1. 19ஆம் நூற்றாண்டில் சித்தூர் மாவட்டத்தில் பிறந்த ஆச்சாரியார். இவர் பிராமணீயத்தை நீக்கியவர்.
2. தனித்தமிழ் இயக்கத்தின் தலைவரான மறைமலை அடிகளார். ஆரியமொழியை அடியோடு நீக்கிவிட்டு தூய தமிழில் திருமணத்தை அமைத்தவர். தீவலம் வருதல் இவரால் விலக்கப்படவில்லை.
3. திரு வி கல்யாண சுந்தரனார் மறைமலை அடிகளாரின் கருத்தையொட்டி அதனை நிலைநாட்ட முயன்றவர்.
4. திராவிடத் தந்தை ஈ வே. ரா. பெரியார் அவர்கள் மணச் சடங்குகளையும், கடவுள் வழிபாட்டையும், முழுவதுமாக நீக்கிவிட்டு தமிழில் வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழாவை தமிழ் மக்களுக்கு வகுத்துக் கொடுத்தார்.

இதன் பயனாக நாட்டில் பல சீர்திருத்தத் திருமணங்கள் தோன்ற ஆரம்பித்தன. இவற்றில் ஒரு வகை தமிழ்த் திருமணம் மற்றொன்று சுயமரியாதை அல்லது பகுத்தறிவுத் திருமணம் என்பதாகும்.

தமிழர்களுக்கு பொருந்தாத சடங்குகளை நீக்கிவிட்டு நடக்கும் தமிழ்த் திருமணத்தில், திருமணம் நடக்குமிடம் அலங்கரிக்கப்பட்டு மணமுரசு முழங்கிக் கொண்டிருக்க, விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டு, நீராடிய மணமக்கள் மணக்கோலம் கொண்டிருக்க, திருமணத்தை நடத்தி வைக்கும் ஆசிரியர் மணமக்களது பெற்றோரிடமும் மணமக்களிடமும் திருமண இசைவினைக் கேட்டு அவர்களது சம்மதத்தைப் பெற்ற பிறகு, மணமக்கள் உறுதிமொழி கூறி மங்கல நாண் அல்லது மோதிரத்தை அணிவிக்க, பெரியோர்கள் வாழ்த்தோடு திருமணம் இனிதே நடைபெறுகிறது.

ஈ. வே. ரா. பெரியார் அவர்கள் ஏற்படுத்திய சுயமரியாதை, பகுத்தறிவு, அல்லது சீர்திருத்த திருமணம் என்று அழைக்கப்படும் மணநிகழ்ச்சியில், ஆடம்பரத்திற்காக செய்யப்படும் வீண் செலவுகள் தவிர்க்கப்பட்டு, தேவையற்ற சடங்குகளும் பழக்க வழக்கங்களும் நீக்கப்பட்டு, திருமணம் செய்து கொள்ளும் ஆணையும் பெண்ணையும் மாத்திரம் பொருத்ததாக அவர்களது விருப்பின் பெயரில் நடத்தப்பட்டது. இந்த சுயமரியாதைத் திருமணத்தில் பெண்ணுக்கு ஆணைப் போலவே சரிசமமான உரிமை இருக்கிறதென்று சொல்வதோடு அவர்களுக்கு ஆண் பிள்ளைகளுக்குச் சமமான சொத்துரிமையும் வழங்க வேண்டுமென்பது அறிவுறுத்தப்பட்டது. ஆண் பெண் இணைந்த இந்த கூட்டு வாழ்க்கையில் உயர்வு தாழ்வோ எந்தவித வேறுபாடுகளோ இல்லாமல், அனைத்துத் துறைகளிலும் சமமான சுதந்திரமும் சாதி குலம் கோத்திரம் போன்றவற்றை தவிர்த்துவிட்டு சமமான வயதுப் பொருத்தமும் மனப்பொருத்தமும் பார்த்து, அனைவருக்கும் தகுந்தவாறு இருக்கின்ற நேரத்தில் நடத்தப்பட்டது. இவ்வகையான திருமணத்தை அங்கீகரிக்க திருமணச் சட்டத்தில் 1955 இல் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து பதிவுத் திருமணங்களும் வரவேற்கப்பட்டன.

இதற்கும் பின்னாளில் நடத்தப்பட்ட பாரதிதாசனின் புரட்சித் திருமணத்தில் மணமக்கள் வாழ்க்கைத் துணைவராக ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்வதாக உறுதிமொழி கூறி இருவரும் மாலையும் மோதிரமும் மாற்றிக் கொண்டு மணமுடிக்கும் பொழுது அவையோர் வாழ்கவென முழங்கியவாறு திருமணம் இனிதே நடைபெறுகிறது. இப்படித்தான் நடத்த வேண்டுமென்கிற கட்டுப்பாடு ஏதுமில்லாமல் இன்னும் சுருக்கமான முறையிலும் நடத்திக் கொள்ளலாம் என்பதாலேயே பாரதிதாசன் குறிப்பிடுகின்ற திருமணம் புரட்சித் திருமணம் எனும் பெயரைப் பெறுகிறது.

இது மட்டுமல்லாமல் இன்றளவிலும் கோவிலில் நடக்கின்ற திருமணங்கள் நவீன சுயம்வரத் திருமணங்கள் இலவசத் திருமணங்கள் போன்ற முறைகளில் பொருளாதார நெருக்கடியில் இருக்கின்ற குடும்பங்களுக்கு பொதுநல அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் நடத்தி வைக்கின்றனர்.

திருமணத்தில் நடக்கின்ற சடங்குகளாவது மக்கள் வாழ்கின்ற கால சூழல், நிலம் சார்ந்த பண்பாடு,

அவர்களது செல்வநிலை மற்றும் மனநிலை போன்றவற்றிற்கு ஏற்ப காலந்தோறும் இனந்தோறும் மாறியபடியே கூடுதலாகவோ குறைவனவாகவோ இருந்து வருகின்றன. எவ்வகையான சடங்குகளாக இருந்தாலும் அவை நம்மை அடிமைப்படுத்தி விடாமலும் பார்த்துக் கொள்வது தேவையாக இருக்கிறது. மாறி வருகின்ற காலச் சூழ்நிலைக்கு ஏற்ப பழமைகளை நீக்கி புதுமைகளைப் புகுத்தி தெளிவு பெற்று வாழ்க்கையை நடத்துவதே வளர்ச்சிப் பாதைக்கு வித்திடுமென்றாலும் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு நமது மண்மணம் மாறாத மாறக்கூடாத பண்புகளை சங்க இலக்கியங்கள் கொண்டிருக்கின்றன.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிப் பாதைக்கு மிக முக்கிய காரணியாக இருப்பதென்பது அச்சமூகத்தின் அடிப்படை அலகான பண்புள்ள குடும்பங்களே ஆகும். ஒருவரையொருவர் உள்ளம் புரிந்து ஒத்த அன்போடு திகழ்ந்து இல்லறம் நடத்தும் இனிய பெற்றோர்கள் நன்மக்களை ஈன்று இந்நாட்டிற்கு அளித்து பயன்படும்படி வாழ்கிறார்கள். திருமணம் செய்யும் முறைகளில் மாற்றம் நிகழ்ந்தாலும் அறம் பொருள் இன்பம் எனும் அடிப்படைப் பண்புகளில் மாறாமல் இல்லறம் நடத்துவதை உணர்த்துவதாக சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் பல பாடல்கள் பேசுகின்றன.

“கல்வி கேள்விகளில் சிறந்த வீரம் கொண்ட மக்களைப் பெறுவதும், தனது தேவைக்கு மீறிய பொருள்களை ஈட்டி தானும் பயனடைந்து தனது சுற்றத்தாரையும் பயனடையச் செய்வதும், விருந்தோம்பலில் சிறந்து சுற்றங்களை போற்றுவதையும், தனக்கு மேல் கீழ் என்றில்லாமல் சமமான பொறுப்புகளைச் சுமந்து ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் அக்கறையில் தன் பணியில் முந்துபவர்களாவும், பிறன்மனை விழையாமலும், பணிவும் அன்பும் கொண்டு பெரியோரை மதித்தலும் போன்ற உயரிய பண்புகளோடு இருவரும் திகழ வேண்டும்.” என்பது போன்றவையே என்றும் மாறக்கூடாத அடிப்படைப் பண்புகளாக இலக்கியங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

“எட்டுத்திக்கும் சென்றிடுவோம் கலைச் செல்வங்கள் யாவையும் கொணர்ந்திங்கு சேர்ப்போம்” எனும் பாரதியின் வரிகள் மெய்யாகி, இன்று உலகம் தோறும் தமிழர்கள் பரவி வாழ்ந்திருந்தாலும் இவ்வாறான அடிப்படைப் பண்புகளில் மாற்றம் கொள்ளாமல் மண் மணம் வீசுமாறு இல்லறத்தில் செழித்து வாழ்ந்து இனிதே சிறக்க இலக்கியங்கள் கொடுத்திருக்கும் இரத்தினங்களைக் காத்து வருவது நமது கடமையாகிறது.

## ரகுநாத் வ, மதுரை

*1*
மிக்ஸிக்குள்
விழுந்து
வெளிவரும்
எறும்பிற்கு
தெரியாது
என் கருணையின்
எல்லை!

❍

விற்பனையாகாத
நர்சரி
காடாக
அவதாரமெடுக்கிறது!

❍

அதனால்தான்
அழ வைக்கிறது
எவ்வித பிசகுமற்ற
பிணத்தின் முகம்!

❍

நூலாம்படையில்
தொங்கும் புழு
பிரபஞ்சத்தினை
சிறிதாய் இழுக்கிறது!.

❍

எத்தனை
நட்சத்திரமிருந்தாலும்
திலகமிட்டுக்
கொள்ளவில்லை
நிலாப் பெண்!



# தங்கேஸ் கவிதைகள்

**ஞாபகமாக**

பசும் புல்லைப் போல
வளர்ந்து செழித்திருக்கிறது நம் நேசம்
இதே நிலவை மீண்டும் பார்க்க
ஆயிரம் வருடங்கள் கூட ஆகலாம்
நாம் அப்போது பறவைகளாக மாறியிருப்போம்
அல்லது பேசும் நட்சத்திரங்களாக
இப்போது நம் நேசத்தை கருவுற்றிருக்கும்
அப்போது இருக்குமோ என்னவோ?
ஒரு மனது இல்லை என்றால்
நேசம் எப்படி உயிர்க்கும் ?
அலகுகளால் தீண்டலில்
சிறகுகளின் உரசலில்
ஆயிரம் ஆண்டுகள் ஞாபகத்திற்கு வரலாம்
சிறு உரையாடலில்
பூமி ஒரு சொல்லாக கூட
உயிர்த்தெழலாம்
கோடி மழைத் தாரைகளில்
ஒரே ஓர் துளி தேடி வந்து
நம் தலை மீது விழும் போது தானே
நாம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்
மழை மேகமாய் இருந்தது
நமக்கு ஞாபகத்திற்கு வருகிறது

❍

**வானத்திலிருந்து வானத்திற்கு**

உன் உக்கிர பிம்பத்தை
முழுமையாய் பிரதிபலிக்க இயலாததொரு
பலவீனமான ஆடி நான்
ஆயிரம் மழைத்தாரைகள்
ஒரே நொடியில்
ஒரு சின்னஞ்சிறு இலையை
கருணையற்று தீண்டும் போது
செம்பருத்தி மரத்தில்
ஒரு அறியாச் சிறுமி
வானத்திடம் கையேந்தி நிற்கிறாள்
நான் என் கைகளை
மார்பின் குறுக்காக கட்டிக் கொண்டு
உன்னை எதிர்பார்க்கும் நேரம்
உள்ளதிரும் அணுக்களின் மீது
நீ நடந்து வருவது தெரிகிறது
வானத்திலிருந்து வானத்திற்கு பறக்கும் பறவை
வெற்றிடம் தேடி
வானத்திலேயே மறைகிறது
சொற்களால் அசுத்தமான
இந்தக் கவிதையையும்
மௌன செதிலசைத்து நீந்தி வரும் மீனொன்று
பரிசுத்தமாக்குதலின் பொருட்டு
ஆழ்கடலுக்குள் இழுத்துச்
சென்று கொண்டிருக்கிறது

❍



### மௌனம் – (தங்கேஸ்)

உன்னை நினைக்கும்
போதெல்லாம்
உன் முகம் ஞாபகத்திற்கு வருவதில்லை
சொற்கள் தான்
ஒலிகளால் நிரம்பியது தான்
வாழ்க்கை என்றிருந்தாய்
மௌனம் கடைசி வரையிலும்
உன்னிடம் பேசிவிட
ஒரு பூனைக்குட்டியைப் போல்
உரசி உரசி வந்தது
நீ யாரை சந்தித்தாலும்
சோழி உருண்டைகளைப் போல
வார்த்தைகளைத்தான்
தந்து சென்று கொண்டிருந்தாய்
நான் உன்னை சந்தித்த போது
ஓசையில்லாமல் மலர்ந்த
ஒற்றை மலரை
உன் கையில் தந்தேன்
இரண்டு சொற்களுக்கு
இடையில் கிடந்த
பெரும் மௌனத்தில்
நீ அதை விட்டெறிந்தாய்
அது ஒரு புழுப் போல்
ஊர்ந்து செல்வதை பார்த்து விட்டு
நான் விடைபெற்றேன்

❍

### காலம் – (தங்கேஸ்)

நல்ல உ றகத்தில் சங்கிலி
என் கனவினில் வந்து
இரண்டு ரொட்டித் துண்டுகளும் கொஞ்சம்
தண்ணீரும் கொடு என்றது
மறுபேச்சின்றி
குளிர் சாதனப்பெட்டியிலிருந்து
இரண்டு ரொட்டித் துண்டுகளும்
கொஞ்சம் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரும் எடுத்துக்
கொண்டு வாசலுக்கு விரைந்தேன்
அங்கே எனக்காகவே காத்திருந்தது போல் வந்து
தாவி
என் கைகளிலிருந்து பறித்து தின்ன ஆரம்பித்து
விட்டது
இரண்டு ரொட்டத் துண்டுகளும்
கொஞ்சம் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரும் தான்
வாழ்க்கையா என்றேன்
என்ன செய்வது நாய்கள்
காலத்தை ரொட்டித் துண்டுகளாய் தின்ன
முடிவதில்லையே என்றது

# வளவ. துரையன் கவிதைகள்

## *பாட்டியின் கதை

பாட்டி எப்பொழுதும்
படுத்துத் தூங்கவைக்கும்போது
கதை சொல்வார்.

எல்லாக்கதைகளிலிலும்
எங்கள் பாட்டி தன்
வலைகளை அறுத்துக் கொண்டு
வெளியே வருவார்.

உளுத்துப் போன உத்தரந்தான்
எனினும் இவ்வீட்டை
உறுதியாகத் தாங்குவார்.

கதைகளில் சிலநேரம்
அவர் உள்ளே சென்று
காணாமல் போய்விடுவார்.
பேய்க்கதைகள் சொல்லும்போது
பேயாக மாறிவிடுவார்,

சாமி கதை சொன்னாலோ
சாமியாட்டம்தான்.
கதை முடிந்துவிட்டது
என எண்ணுகையில்
சற்றுநேரம் பேசாமல் இருப்பார்.
திடீரென கதையை
முன்பைவிட வேகமாகத்
தொடங்குவார்.

ஒரு கதையிலிருது
இன்னொரு கதைக்கு
முடிச்சுப் போட்டுத் தாவுவார்.

இப்பொழுது
ஊரின் கிழக்கே
தனியாய்ப் படுத்துக் கொண்டு
யாருக்குக் கதை சொல்கிறாரோ?

❍

## பாழ் வீடு

அதனால் பயனில்லை
என்கிறார்கள் பார்ப்பவர்கள்.

தெரியாமல் பலன் கொடுக்கும்
கற்பகதரு அது.

சுவர்கள் எல்லையாகவும்
ஓடுகள் வானமாகவும்
வாசற்கதவின்றி
வாவென்றழைக்கும்.

ஆடுமாடுகள் ஏன்
கழுதைகளுக்கும்
அது காப்பகம்.

காசுவைத்துச் சூதாடக்
கச்சிதமான இடம்.

முதன்முதல் சிறுவர்கள்
சிகரெட் பற்றவைக்க
அரிச்சுவடி கற்றுத்தரும்
ஆரம்பப் பள்ளி.

கல்லூரி மாணவர்
பிறர் தொல்லையின்றித்
தேர்வுக்குப் படிக்கும்
தேவலோகம் கூட.

கருப்பு நிறக் கமலா
அங்கேதான் அருமையாக
இளைஞர்களுக்கு
இரவு வகுப்பெடுக்கிறாள்.



வட்டக்கச்சி வினோத்

# அலை தீண்டும் கரையில்

புதைந்து கிடக்கும் முத்துமாலை
அலங்காரம் செய்தது யார் கழுத்தை
இன்று அதுவும் யாருமற்ற அநாதை
துள்ளித் திரிந்த குழந்தை கழுத்தில் ஆடியயதோ
துடிக்கும் இளமை பருவ குமரி அழகை கூட்டியதோ
காதல் வலைவீச ஆடவன் ஆசையாய் வாங்கியதோ
மங்களம் சூடிய மணநாள் பரிசாக
கணவன் தேடியதோ
ஏன் அநாதையாக போனது
முத்துமணி மாலையின் முத்துக்கள் சில காயம்
கண்டிருந்தன
சுற்றி இருந்த முத்துக்கள் சில
காணாமல்போய்யிருந்தன
வட்ட மாலையின் நூலில்
இரத்த துளிகள் படிந்திருந்தன
புதைந்து கிடந்த கடற்கரையில்
முத்துக்கள் சில புதைந்து கிடந்தன
அவை யாருக்காக காத்திருக்கிறது
யாரால் கைவிடப்பட்டது
யார் அதை சிதைத்தது
அடிக்கடி வந்த அலைகள் கழுவியும்
அகன்றுபோகாத இரத்தக்கறை
எத்தனை மனிதர் மிதித்துப் போனாலும் குணத்தை
மறக்காத முத்துமாலை
இன்று தனித்துப்போனது
அன்று யார் அழிக்க நினைத்தது

க.புனிதன்

# தபசு

எனது குற்ற உணர்ச்சியை
தபசு போல்
ஒரு பொம்மை செய்கிறேன்
அதன் கழுத்து புறத்தில்
பிறை நிலவை போல்
செய்கிறேன்
அதன் கண்களை இன்னும்
மென்மையாக செய்கிறேன்
அதன் பாதங்களை
முயல் பாதங்கள் போல்
செய்கிறேன்
அதன் காதுகளை
மஞ்சள் அரளி பூ போல்
விழிக்க செய்கிறேன்
அதன் அதரங்களை இன்னும்
கருணையாக செய்கிறேன்
அதன் நாசியையும் நெற்றியும்
புத்தனை போல்
செய்கிறேன்.





# வாழ்த்தின் பொருளென்ன? அது சொல்லும் கதை என்ன?

சங்கர சுப்பிரமணியன்

கொஞ்சகாலமாகவே எனக்கு விடை தெரியா ஒன்றாக தன்னைவிட மூத்தவர்களை வாழ்த்தலாமா என்பது சவால் விட்டுக் கொண்டிருந்தது. வாழ்த்தலாம் என்பதற்கு ஒரு சான்று. ஒரு வீட்டின் புதுமனை புகுவிழாவுக்கு சென்றிருந்தேன். அங்கு அந்த விழாவை நடத்திக் கொண்டிருந்த வீட்டின் சொந்தக்காரரும் அவரது மனைவியும் புரோகிதர் முன் அமர்ந்திருந்தனர். புரோகிதர் மந்திரங்களைச் சொல்லி பூசை செய்து கொண்டிருந்தார்.

பூசை முடிந்தது. பூசை செய்துவித்த புரோகிதருக்கு வயது முப்பது இருக்கும். வீட்டின் சொந்தக்காரருக்கு வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும். அவரது மனைவிக்கும் நாற்பத்து ஐந்து வயதுக்கு மேல் இருக்கலாம். அவ்விருவரும் புரோகிதர் காலில் விழ அவரும் இருவரையும் வாழ்த்தினார். அந்த தம்பதியர் இருவரும் அவர்கள் பெற்றோர் காலில்கூட அப்படி

விழுந்து வணங்கி இருக்கமாட்டார்கள்.

நீதி என்றால் அனைவருக்கும் ஒன்றாய்த்தான் இருக்கவேண்டும். அதில் மற்ற உயிரினங்களுக்கு கூட வித்தியாசம் காட்டிவிடக் கூடாது என்பதற்காகத்தானே தேர்க்காலில் தான்பெற்ற மகனை கிடத்தினான் சோழப்பேரரசன். வாழ்த்தக்கூடாது என்பதற்கும் ஒருசான்று.

ஒரு என்பது வயதுப் பெரியவருக்கு பிறந்தநாள் விழாவினை குடும்பத்தினர் கொண்டாடினர்.

எனக்கு பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தில் எல்லாம் அவ்வளவாக ஈடுபாடில்லை. காரணம் பிறப்பும் இறப்பும் இயற்கையான ஒன்றுதானே. அதற்கேன் இவ்வளவு ஆர்ப்பாட்டம் என்பது என் சொந்தக்கருத்து. அதற்காக அதில் நாட்டமுள்ளவர்களை நான் குறைகூறவில்லை. பாரதியாருக்கு பிறந்தநாள் விழா கொண்டாடுகிறார்கள். ஆனால் பாரதியார் தனது பிறந்தநாள் விழாவை கொண்டாடினாரா? என்பதை எண்ணிப்பார்த்தால் அங்கே பல விடை கிடைக்கும்.

அந்த என்பது வயது முதியவரை ஒரு அறுபது வயதானவர் வாழ்த்த வந்தார். இவருக்கும் அவருக்கும் இருபது ஆண்டுகள் வயது இடைவெளி. ஆனால் வாழ்த்தவந்தவரோ அவரை வாழ்த்துவதற்கு பதிலாக

வாழ்த்த எனக்கு வயதில்லை வணங்குகிறேன் என்று சொல்லி அவரைப்போற்றினார். பலே இதுவும் நன்றாகத்தான் இருக்கிறது என்று எண்ணி வியந்தேன்.

ஆனால் மனம் வயதில் மூத்தவர்களை வாழ்த்துவதில் என்ன தவறு என்று கேட்டது. எனது நண்பர் ஒருவரிடம் கேட்டேன். அவர் என் அறிவுக்கண்களைத் திறந்தார். தெரியாததை தெரியவில்லை என்று சொல்லி தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதில் தவறில்லை என்ற கோட்பாடுடையவன் நான். அதை என்னைவிட சிறியவர்கள் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கும் எனக்குண்டு.

ஆனால் இந்த மனம் நண்பர் சொல்லியும் அடங்காமல் என்னை குழப்பியது. நண்பர் சொன்ன பதிலால் சமாதானம் அடையாமல் சண்டித்தனம் பண்ணியது. சண்டித்தனம் செய்ய காரணம் அவர் சொன்ன பதில்தான். அவர் சொன்னதாவது சபை நாகரிகம் கருதி அப்படி சொல்லலாம் என்பதே. அப்படியானால் சபையில் வயதில் மூத்தவர்களை வாழ்த்தக்கூடாதா? அதற்கு பதிலாக வணங்கி போற்றத்தான் வேண்டுமா?

வாழ்த்துவதற்கு வயதில்லை என்ற சொற்றொடர் என்னை யோசிக்க வைத்தது.

தோளில் ஏறி அமர்ந்து அப்பனுக்கே பாடம் சொன்ன குமரனைக் கொண்டாடும் வழிவந்த நாம் மேடே ஏறி ஒரு பெரியவரின் மேன்மையை சொல்லி அவரை வாழ்த்தக் கூடாதா?

வாழ்த்த வயதில்லை என்பதை மாற்றி வாழ்த்த வயது தடையில்லை என்று சொல்லி வாழ்த்தலாமே. வாழ்த்துவதை போற்றிப் பாராட்டுவதாக ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது? ஏன் ஆசி வழங்குவதாக வலியச்சென்று பொருள் கொள்ள வேண்டும்?

எதற்காக வாழ்த்துகிறோம் என்பதுதான் அவசியமேதவிர வயது அவசியமல்ல. அவரது அளப்பரிய பணியைப் போற்றி

வாழ்த்தலாம். அவர் பெற்ற விருதினை எண்ணி மனமுவந்து பாராட்டி வாழ்த்தலாம். என்பது வயது எட்டியவரை நூறுவயதைத் தொடவேண்டி விரும்பிப் பாராட்டி வாழ்த்தலாம்.

சமீபகாலமாக நான் இந்தியா சென்ற போதெல்லாம் வாழ்த்துவதற்கு எனக்கு வயதில்லை என்ற கூற்றை பெருவாரியாக கேட்டிருக்கிறேன். யாரோ ஒருவர் என்றோ ஒருநாள் எங்கோ ஒரு அரசியல் மேடையில் சொன்னதை நாம் பின்பற்ற வேண்டும் என்ற கட்டாயமில்லை என நினைக்கிறேன். இப்படி சொல்லும் அரசியல்வாதிகளே வயது வித்தியாசம் பாராமல் காலில் விழுவதையும் பார்த்திருக்கிறேன்.

இப்படியான கூற்றெல்லாம் அரசியலில் சகஜமப்பா என்று வடிவேல் கூறுவதுபோல் அமையலாம். ஆனால் அறிவுசார்ந்த தளங்களில் வாழ்த்துவதற்கு வயதில்லை என்று கூறுவது ஏற்புடையதா? என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இப்போது எனக்கு கடவுள் தேவைப்படுகிறார். கடவுள் நம்பிக்கை எனக்கு இருக்கிறதா இல்லையா என்பது வேறு கருத்து. ஆனால் இங்கு அவர் தேவைப்படுகிறார். கடவுள் நம்மைவிடப் பெரியவர். படைத்தார். படியும் அளக்கிறார்.

அவரை நாம் வாழ்த்தவில்லையா? கடவுளைவிட நாம் வயதில் முதிர்ந்தவர்களா? கடவுள் பல யுகங்களைக் கடந்த பெரியவராயிற்றே?

இரு நூறு ஆண்டுகளைக் கூட தொடமுடியாத நாம் அவரை வாழ்த்தவில்லையா? கடவுள் வாழ்த்து என்றதானே சொல்கிறோம். ஈசனடி போற்றி! எந்தையடி போற்றி என்று போற்றிப்பாடினாலும் அது கடவுள் வாழ்த்தேயாகும்.

பெற்றதாயைவிட தாய்மொழியை போற்றுகிறோம். தாய்மொழியைப் போற்றி வாழ்த்துகிறோமே அதை தமிழ்த்தாய்

வாழ்த்தென்றுதானே சொல்கிறோம். இவ்வாறாக நாம் உயர்வாக எண்ணும்

தலைவனையும் தாயையும் தாய்மொழியையும் தாய்நாட்டையும் வாழ்த்தும்போது நம்மைவிட வயதில் மூத்த பெரியவர்களை வாழ்த்துவதில் என்ன தவறு?

ஒரு நாட்டின் குடியரசுத் தலைவரை வாழ்த்துகிறோம் பிரதமரை வாழ்த்துகிறோம். அவர் நம்மைவிட வயதில் பெரியவர் என்று வயதில் சிறியவர்கள் வாழ்த்தாது விடுகிறோமா? சிலர் அவருக்கு அல்ல வாழ்த்து அவரது பதவிக்கு வாழ்த்து என வாதிடலாம். அப்படியானால் பெரியவருக்கு அல்ல அவரது பண்பை எண்ணி வாழ்த்தலாமே?

பொங்கல் வாழ்த்து சொல்கிறோம். தீபாவளி வாழ்த்தென்று சொல்கிறோம். வாழ்த்தென்பதே போற்றிப் பாராட்டத்தான்.

இதெல்லாம் வயதிற்கு அப்பாற்பட்டது. முதலில் ஒருவரை வாழ்த்துவோம். அப்புறம் பெரியவராயிருப்பின் வணங்குவோம். வாழ்த்த மனமில்லாதவர்கள் வணங்கட்டும். வாழ்த்த மனமுள்ளவர்கள் வாழ்த்தி வணங்கட்டும். வாழ்த்தாத வணக்கமும் போற்றாத புகழும் பொருளற்றதாகிவிடும். அதனாலேயே எவரையும் வயது வேறுபாடின்றி வாழ்க வளமுடன் என்று வாழ்த்தி மகிழ்கிறார்கள்.

புசல்லாவை கணபதி

# காமம் நுகர்

பிடரி பிடித்து நெற்றி முகந்து
மெய் மறந்து போகின்ற காமச்சமரொன்றும்
எளிதல்ல

❍

பிரபஞ்சம் நிரப்பிய களிப்புகளையெல்லாம்
உண்டு மகிழ்கின்ற தருணம்

❍

இக்கணத்தில் மட்டுமே
வெட்கம் பொருளற்றச் சொல்லாகி அகராதியில்
அழிக்கப்படுகிறது

❍

சரீரங்கள் போர்த்திக்கொள்கின்ற
அனல் வேர்வை
பெருமூச்சின் வழியே உயிரிழக்கும்

❍

காமத்தியானத்தில்
முத்தவோசைகளே
மோட்சத்தின் வாசல்

❍

காமம் நுகரும் உயிர்கொண்ட அனைத்தும்
வாழ்வின் சூட்சுமத்தை அறிந்துகொள்கிறது

❍

பிறப்பின் பரிசாய்
காமம்கூட
சுவைக்கத்தெரிந்தவனுக்கு
மழை நேரத்தில் கிடைக்கும்
தேநீர் கோப்பைதான்

❍

மீதமின்றி பருகு
காமம் மானிடப்பிறவின்
கொடை





மட்டுநகர் கமல்தாஸ்

# இதையும் எழுதி வையுங்கள்

புத்த பெருமானின் போதனைகளை
பின் பற்றாத ஒருவரை
எப்படி அழைப்போம் மத குருவென

உத்தம புத்தன் வாழ்ந்து காட்டிய
உபதேசத்தை ஏற்காத வேடதாரியைக்
எவ்வாறு வணங்குவது

மண், பெண் ,பொன் ஆசைகளை தரித்து
உரைத்த உண்மையை
மாற்றியே அலைபவரை மதித்திட முடியுமா?

அடாவடியை ,அட்டூழியங்களை
அள்ளித் தெளிப்பவரை கடவுளின் தொண்டனென
அழைப்பதா?

அன்பும்,அறனும் பயில்விக்கும்
அறிவுடையோரே குரு
அழிவைத்தர நினைப்பவரல்ல!

நல் போதனையாளனாக,நல் வழிகாட்டியாய்,
நல் குணமுடையோரை மதிக்கக் கற்று
தரவேண்டியவர்கள்
காட்டுமிராண்டிகளாக
காமக்கொடூரராகா இருந்தால்
வணக்கம் செலுத்த முடியுமா?

புத்தரின் சிலைகளை காணும்போதெல்லாம்
நித்தமும் வணங்கிட நினைக்கும்
புத்தனின் பெயரில் சாத்தான்கள்
புனிதத்தை அழிப்பவரை தடுக்க வராதது ஏனோ?

இன ,மத ,பேதம் இல்லாமல் வாழ்ந்து
காட்டியவர் கௌதம புத்தர்
இன வெறி ,மத வெறி கொண்டு வாழ்ந்தவர்
அல்ல

நாங்கள் பிற மதங்களை மதிக்கின்றோம்,
நாங்கள் பிற மதக்கடவுள்களை துதிக்கிறோம்,
நாங்கள் அனைத்து மத குருவையும்
போற்றுகிறோம்
எங்களை எங்கள் பாட்டில் இருக்க விடுங்கள்
எங்களுக்குள் அடக்கு முறையை அவிழ்த்து
விடாதீர்கள்
நாங்கள் எல்லாம் கடந்து வந்தவர்கள்
என நீங்கள் மறந்து விடாதீர்கள்

வரலாறுகளை அழித்து விட்டு புரளி
புனையாதீர்கள்
தமிழர் வரலாறு அழியாதது
நீங்கள் அழித்தாலும் காலம் காப்பாற்றும்
மறவாதீர்கள்
தமிழன் வீழ்ந்தாலும் வரலாறு
எழுந்தாலும் வரலாறு
இதையும் எழுதி வையுங்கள்.



# சொல்வாயோ கண்மணியே?

நெளஷாத் கான் லி

எப்படி சொல்வது என்று அவளுக்கு தெரியவில்லை சொல்லாவிட்டாலும் அது தவறு தான் .ஏனெனில் கண்மணியின் வாழ்க்கையின் அத்தியாயத்தில் அந்த மகராசிக்கும் ஒரு முக்கிய பங்கு உண்டு .

மனம் ஒரு மாதிரி தடுமாறியது இந்த விஷயத்தை சொல்லி அவங்க தப்பா எடுத்திக்கிட்டாங்கண்ணா ?

இங்க பாரு கண்மணி வாழ்க்கைல அடுத்த கட்டத்துக்கு போகணும்ன்னா எல்லாத்தையும் சந்திக்கிற மனப்பக்குவத்தை நாம்ம வளர்த்துக்கிடணும் .

அடுத்தவங்க நம்மளை தப்பா நினைப்பாங்களோ என்ற நினைப்பு வந்து விட்டாலே வாழ்க்கைல ஒரு இடத்துல நின்னு போயிடுவோம் .

யார் என்ன நினைச்சா என்ன நம்ம மனசுல எந்த குத்தமும் இல்லைன்னு மனசுல பட்டதை பட்டுன்னு சொல்லிடணும் .அவங்க தப்பா நினைப்பாங்க ,இவங்க தப்பா நினைப்பாங்கன்னு நினைச்சோம்ன்னா ஆறு மாதிரி தெளிவா இருக்கிற மனசு கூட தேங்கி அழுக்கான குட்டை மாதிரி ஆகிடும் .

இங்க பாரு கண்மணி நீ ஒண்ணும் தப்பு ஏதும் செய்யலை .மனித பிறவி எடுத்திட்டாலே எல்லா உணர்வுகளும் ,உணர்ச்சிகளும் உள்ள சதை பிண்டம் தான் நாம்ம எல்லாருமே ..

எல்லா ஆசாபாசங்களும் நம்ம எல்லாருக்குமே இருக்கு .நீ பயப்படாமே போய் உங்க மாமியார்கிட்ட போய் சொல்லு என்று வழியனுப்பி வைத்தாள் தோழியான கீதா .

டொக் ..டொக் ..

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு மெதுவாக எழுந்து வந்து கதவை திறந்தாள் .

கதவை திறந்ததும் அவள் முகம் மலர்ந்தது .

வாம்மா கண்மணி

எப்படி இருக்க ,பேரப்புள்ளயாண்டான் எப்படி இருக்கான் ? அவனையும் கூட கூட்டியாந்து இருக்கலாம்லே

நல்லா இருக்கேன் அத்தை ,அவனுக்கு உடம்புக்கு சுகமில்லை அதுவுமில்லாம பெங்களூர்ல வரும் போது மழை வேற பேஞ்சுக்கிட்டு இருந்துச்சு அதான் அவனை கூட்டியாரால அத்தை

சரிம்மா அடுத்த தடவை வரும் போதாவது ஸ்கூல் லீவுல கூட்டிட்டு வாம்மா என்றாள் .

அத்தை உங்ககிட்ட ஒண்ணு சொல்லணும் (கொஞ்சம் தயக்கத்தோடு பேச தொடங்கினாள் )

நான் ஒண்ணு சொன்னா நீங்க தப்பா எடுத்திக்க மாட்டீங்களே ?

உன்ன ஏம்மா நான் தப்பா எடுத்திக்க போறேன் .

அத்தை என் கூட கம்பெனியில வேலை பார்க்குற ராகுல் என்பவரை கடந்த மூணு வருஷமா விரும்புறேன் ,என் வாழ்க்கையை முழுமையா புரிஞ்சவரு ,என் பையன் ரஞ்சனையும் ஏத்துக்கிடுறேன்னு சொல்றாரு .அவங்க வீட்ல முதல்ல ஒத்துக்கிடலைன்னாலும் அவரு முடிவுல தெளிவா கடைசி வரைக்கும் நின்னதால இப்ப அவங்களும் ஒத்துக்கிட்டாங்க .

அடுத்த மாசம் முதல் வாரத்துல நல்ல நாளா பார்த்து கல்யாணம் பண்ண முடிவு செஞ்சு இருக்காங்க அத்தை அதான் உங்க கிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு உங்களையும் அழைச்சிட்டு போலாம்னு வந்து இருக்கேன் .

இதுக்கு ஏம்மா ஏதோ தப்பு செஞ்ச மாதிரி தயங்கி ,தயங்கி இந்த கிழவியோட பதிலுக்காக காத்துக்கிட்டு கிடக்க ?

என் மவன் செத்து ஆறு வருஷம் ஆகிப்போச்சு அவன் செத்தவுடனே உனக்கொரு நல்லது பண்ணனும்ன்னு ஆசைப்பட்டேன் ஆனா உன் மனசுல என்ன இருந்துச்சுன்னு எனக்கு தெரியலைம்மா .

உன் புருஷனை பெத்தவுடனேயே உன் மாமனார் மாரடைப்புல செத்து போய்ட்டாரு அப்ப என் வயசு இருபது தான் இருக்கும் .தனிமையோட வேதனை எப்படி இருக்கும்ன்னு எனக்கும் தெரியும்மா.ஒரு கல்யாணமான பொண்ணு காலைல குளிக்குறதுக்கும் ,துணை இல்லாத பொண்ணு இரவுல குளிக்குறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்குமா .

வலியும் ,வேதனையும் அதை அனுபவிப்பவனுக்கு தான் தெரியும் .தூரத்துல இருந்து பார்ப்பவனுக்கு நிலாவின் அழகு மட்டும் தான் தெரியும் .அதுக்குள்ள இருக்குற பள்ளமும் ,மேடும் வாழ்ந்து பார்ப்பவனுக்கு தான் தெரியும் .

என் காலத்துல புருஷன் செத்துட்டா இவ கம்னாட்டி ,இதுக்கப்புறம் இவ எதுக்கும் லாயக்கில்லைன்னு சொல்லிட்டு மொட்டை அடிச்சு மூலைல உக்கார வச்சிடுவானுங்க .ஒரு நல்லது ,கெட்டதுல சேர விட மாட்டானுங்க .ஒரு கலரு புடவை ,பூ ,பொட்டுன்னு எதுவும் வைக்க முடியாது .

நான் வாழ்ந்த காலம் அப்படிம்மா என்னாலயும் எதிர்த்து கேட்க முடியலை எனக்கு ஆதரவா பேசவும் அப்ப ஆளில்லை .உன் புருஷனுக்காக அதான் என் மகனுக்காக ஒரு தவ வாழ்க்கை வாழ்ந்தேன் .அவங்க அப்பா போலவே இவனும் சின்ன வயசுலேயே விபத்துல இறந்திட்டான் அது அவன் விதி .அதுக்காக உனக்குன்னு ஒரு வாழ்க்கை இருக்குன்னு புரிஞ்சுக்காத அறிவிலி இல்லைமா உன் மாமியார் .

உன் மனசு போல உனக்கு பிடிச்சவனை தாராளமா கல்யாணம் பண்ணும்மா .ஆனா உன் வீட்ல நடக்குற நல்லது ,கெட்டதுல இந்த தனிமையில தவிக்குற கிழவியையும் உன் அம்மாவா நினைச்சுக்கிட்டு கூட்டிட்டு போம்மா என்று கண்மணியை ஆரத் தழுவி கொண்டாள் .

இருவர் கண்களிலும் பேரன்பின் வெளிப்பாடாய் கண்ணீர் நிறைந்திருந்தது.




# காற்றிலும் களத்திலும் விரியும் சிறகு

மைத்திரிஅன்பு, காஞ்சிபுரம்

.

“கவிதை என்ற சொல் உடனடியாக உணர்த்துவது போலத் தோன்றும் பொதுத்தன்மை. புகை மூட்டமான ஒரு உணர்வுதான். உண்மையில் அவ்வாறான நிரந்தரப் பொதுத்தன்மை எதுவும் கவிதை என்ற வடிவத்துக்குக் கிடையாது. அந்தந்தக் காலகட்டங்களில் அந்தந்த மொழியில் அவ்வபோது செயல்படும் போக்குகள் கவிதை என்பதன் இலக்கணத்தையும் வரையறையையும் நிர்ணயித்துச் செல்கின்றன”

- யுவன்சந்திரசேகர்.

கவிஞர் சுதாகண்ணன், எனக்கு கல்லூரி காலம் முதலே கவிதையால் அறிமுகமானவர். தமிழார்வம் மிக்கவர். தழைக்காதுழைத்து தமிழாசிரியரானவர். விருப்பு வெறுப்பு இன்றிப் பழகும் பண்பாளர். உண்மைக்காக குரல் கொடுக்கும் பற்றாளர். இயல்பான இவர் குணங்கள் யாவுமே 'நிலங்கொத்தி பறவை' எனும் பெயரில் கவிதைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

கற்பனைத் திறன் வாய்த்த மொழியில் கவிதை உருப்பெற்றிருப்பினும், அதனூடான உண்மை மறுக்கமுடியாத ஒன்று. தத்துவ உண்மை, அறிவியல் உண்மை என்று உண்மைகள் வகைப்படுத்தப்பட்ட போதும், மறைக்கவும், கரைக்கவும் முடியாத ஒன்றாகவே படைப்புலகத் தளத்தில் உண்மையின் பங்களிப்பு சூரியனாய் சுட்டெரிப்பதை 'மகத்துவச் சிந்தனை' எனவும் 'புலப்படாத நிகழ்வு' எனவும் குறிப்பிடலாம். அவ்வகையில் இச்சிறுத் தொகுப்பு, ஒவ்வொரு தனிமனிதருக்கும் உரிய வாழ்க்கை அனுபவங்களின் நினைவாக வெளிப்படுகிறது. அவ்வாறு "தன் செல்ல மகளின் மழலைமொழியில் தோற்றுப்போன தமிழை" (ப.22) ஒரு கவிதைக்குள் கவிஞர் படம் பிடித்துள்ளார். நாள்தோறும் எழுதிவரும் நாட்குறிப்புகள் துளியும் இலக்கிய அங்கிகாரத்துக்கு ஏற்றதன்றி, வெறுமனே சரிதையாகும் சூழலுக்கிடையில், கவிஞரிடம் மீதமிருந்த எழுதப்படாத நாட்குறிப்புகள் சில, நல்ல இலக்கியங்களாக விரிந்திருப்பதை "வெளி வர மறுக்கும் பள்ளிப்பாட நினைவிலும்" (ப.29) "ஆத்தாவூட்டுக் கனவின் கதையாடலிலும்" (ப.88) காணமுடிகிறது. அதிலும் "பிறக்காத பெண்பிள்ளைக்கு ஏங்கி, பிறந்த ரெண்டும் பொம்பளபுள்ளையா போச்சேன்னு அழுது புலம்பும்" (ப.71) அனுபவப்பதிவு, கவிஞரின் வாழ்க்கை அனுபவத்திலிருந்து பெறப்பட்ட உணர்வுகளுக்கு, 'கடத்தல்' திறனையூட்டி, கவித்துவ தர்க்கத்துடன் வெளிப்பட்ட படைப்பாக - வாசக மனங்களுக்குள் சென்று சேர்ந்து - தனிமனித சிந்தனைத் தூண்டலுக்கும், சமூக மாற்றத்திற்கும் வழிவகைச் செய்கிறது. இவ்வகை படைப்பே 'உண்மை' படைப்பும் கூட. இவ்வாறு இன்னும் இப்படைப்பு மகிழ்ச்சி, அன்பு, பாசம், கருணை, இறக்கம், காதல் என்னும் ஒரே மையத்தை நோக்கி சங்கமிக்கிறது.

படைப்பு சார்ந்த போதானா முறையில், நேரடித்தன்மையும், உண்மையை நோக்கிய நேரடிச் சுட்டலும், குறியீடுகளைச் சார்ந்திராத வெளிபாடும் சிறு கவிதைகளுக்கான முக்கிய மார்க்கம், என்பதை கவிஞர் நன்குணர்ந்து, "ஆட்களை ஏற்றிக்கொண்டு விரைகின்றன / தொழில் நிறுவன வாகனங்கள் / சக்கரத்தில் சிக்கிக்கொண்டு / மரணிக்கிறது விவசாயம்" (ப.64) என்றவாறு - குறியீட்டுத் தன்மை அற்ற சொற்களாலும் செயல்களாலும் மிகச் சாதாரணமான - தினசரி விவகாரங்களை கவிதை மொழியில் பேசியுள்ளார். இதில், "அவளுக்காகப் பேசத்தான் அவளாலும் முடியவில்லை" (ப.54) எனும் வரிகள் குறிப்பிடத்தக்கதாகிறது. நீள் கவிதைகளிலும் 'சொல்லல்' எனும் உச்சத்தை எட்டும் ஒற்றைத் தருணம் நோக்கியே, அனைத்து வரிகளும் விரிகின்றன. கவித்துவம் வரிசையில் எதிரெதிராய் வரும் எறும்புகளின் சந்திப்பைப்போல, எழுதுபவனும் வாசகனும் கணநேரம் சந்தித்து விலகும் புள்ளியன்றி வேறில்லையது என்பதை, "பாட்டியின் காதுகிழிய... கத்தும் சினையூசிபோட்டு பிறந்த கன்றுக்குட்டியின் குரலதிர்வு" (ப.79) நிரூபிக்கிறது. யுகயுகமாய் இதுவே வாசகனுக்குள் பேதத்தையும் அனுபவப் பிளவையும் இல்லாமலாக்க வல்லது. இதனால் கவிதை எப்பொழுதும் இறந்த காலத்தை ஏற்காத படைப்பாக சுழற்சியில் மிளிர்கிறது.

புறவுலகில் முப்பட்டை அமைப்பாகப் பிரிந்து கிடக்கும் கால அமைப்பு கவிதைக்குள் அதேவிதமாகச் செயல்படுவதில்லை. ஆனாலும் "வளமானாலும் வறட்சியானாலும். / வயதுக்கேற்றபடி வருவார்கள்.." (ப.48); "பெதும்பையில் தொடங்கி / பேரிளம் பெண்ணாகியும் / மண்ணோடவே வாழும் / அவள் ஒரு / நிலங்கொத்திப் பறவை" (ப.78) என்கின்ற குறிப்பிட்ட சில கவிதைகளின் நிகழ்த்து கணம் சுட்டுப்பொருளாக காலப்பரப்பிற்கு பொருப்பேற்றுள்ளது. இன்னும் இதுபோன்ற சுட்டுப்பொருளில், "அங்கிங்கெனாதபடி / எங்குமாய் அத்து மீறல்கள் / கண்டும் காணாமல் / மௌனமாய் / மீசை வைத்த பொம்மைகள்" (ப.44); "உணர்வுடனே அழைக்கின்றன / ஆடு மாடுகள் கூட / அம்மா" (ப.66); "புழுதி படிந்த சாலை / முண்டியடிக்கும் வாகனங்கள் / மூச்சுத் திணறும் மரங்கள்" (ப.67) பக்கத்திற்கு பக்கம் சிறுசிறு கவிதைகள், பல கணத்த நிகழ்காலச் சமூக நிகழ்வுகளை உணர்வாழம் மிக்க சொற்களால் காட்சிப்படுத்துகின்றன. இன்னும் இன்னும் என்னுரையில் கவிஞர் குறிப்பிட்டவாறு, குறுகிய வட்டத்தைவிட்டு வெளிப்பட்டு, சமூகப் பசிப்போக்கப் போர்த் தொடுக்கும் பெரு(ம்)அலையென தன் அடுத்தடுத்த படைப்புகளோடு, அவர் தடம் பதிக்கவேண்டுமென விரும்பி, வாழ்த்துகளுடன் வரவேற்போம்.

பாவலர் நகுலா சிவநாதன்

# பொழிக அன்பே!

*மா மா மா மா*
*மா மா காய்*

*அகத்தில் வளர்க்கும் அன்பே என்றும்*
*அமைதி தருமே மிகநன்றாய்!*
*இகத்தில் இனிமை கமழச் செய்யும்*
*இறைவன் அருளும் நல்லன்பே!*
*முகத்தில் மகிழ்வும் பொலியச் செய்யும்*
*முனைப்புக் காட்டும் தூயவன்பே!*
*சுகத்தில் தெரியும் சுடராய் விரியும்*
*துயரை மறைக்கும் அன்பொன்றே!*

*அன்பே என்றும் பொழியும் வாழ்வில்*
*அனைத்தும் வெற்றி யளித்திடுமே!*
*இன்பம் மொன்றே இறைவன் கருணை*
*என்றும் அன்பைக் கூட்டிடுமே!*
*துன்பம் களையும் துணிவு பிறக்கும்*
*தூய அன்பைக் கொண்டிடுவாய்*
*கன்றும் பசுவும் போலே நீயும்*
*கனிவாய் அன்பை வளர்த்திடுவாய்*

*நெஞ்சம் நிறைக்கும் நெகிழ்வு தருமே*
*நன்றே பொழியும் நல்லன்பு!*
*வஞ்சம் இல்லா வாழ்வே தூய்மை*
*வழங்கும் இதயம் சிறப்பாகும்!*
*தஞ்சம் உறவு! தழைக்கும் வாழ்வு!*
*தரணி யாளும் நிறையன்பு!*
*பஞ்சம் போகும் பரமன் அருளும்*
*பாரைக் காக்கும் அன்பமுதே!*

கவிஞர் மல்லை.மு.இராமநாதன்,
குமாரபாளையம்

# காதல் ஒத்திகை படிப்பா?

*பூமி மேடையில் - உன்*
*நளின நடை யென்ன நடிப்பா?*
*காதல் ஒத்திகை படிப்பா?*

*மேனி மினுமினுட்பு*
*பூசிய மஞ்சளின் வண்ணமா?.*
*பிறவி இயற்கை தோற்றமா?*

*நாணல் போலுன் நாணம்*
*இயல்பாயுள்ள குணமா? - நான்*
*காண்பதால் வந்த கூச்சமா ?*

*அழகெல்லாம் மிச்சமின்றி - உன்*
*அங்கங்களிலே தஞ்சமா ?*
*பிச்சையிடு எனக்கு கொஞ்சமா*

*இமை விரல்களின் தாளம்*
*காதலிசை பாடலுக்கா?*
*கட்டில் சுக கூடலுக்கா?*

*இரு விழி மை எனண*
*ஈர்க்குதே காதல் காந்தமாய். - செவ்விதழில்*
*மௌனமா ஏ காந்தமா ?*

*ஒரு விநாடியேனும் - என் விழிகள்*
*வேறு திசை நோக்க விடை தா கண்ணே*
*விநாடி வினாவுக்கு விடை சொல் பெண்ணே.*



# கொஞ்சம் மாறுவோமா

கமலினி கதிர் (சுவீஸ்)

முதிர் இலைகளைக் கொட்டி சில மாதங்கள் மொட்டையாகக் காட்சியளித்த மரங்களெல்லாம் இளந்தளிரையும்,மலர்களையும் பிரசவிக்கும் இளவேனிற்காலம் அது.இயற்கை தன்னைப் புதுப்பித்த அந்த இளவேனிற்காலம் உமையாள் வாழ்வைப் புரட்டிப் போட்டது. உமையாள் பெருமூச்செறிந்தாள்.அவளால் அந்த இழப்பை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.கல்யாணம் செய்து இருபத்தைந்து ஆண்டுகளில் கடைசிவரை

தன்னோடு வருவானென்று நினைத்திருந்த தன் கணவன் மறைந்துவிடுவானென்று அவள் கனவிலும் நினைக்க வில்லை.அழுதழுது கண்ணீரும் வற்றி விட்டது.கல்யாணம் செய்த நாளிலிருந்து தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையை ஒவ்வொரு நிமிடமாக நினைத்துக் கொண்டிருந்தாள். உமையாளின் அண்ணா சுவிசிலில் இருந்ததினால் அவர் மூலம் பேசிச் செய்த கல்யாணமாக இருந்தாலும் கணவன் தன்மேல் வைத்திருந்த அன்பும்,காதலும். அதை நீண்டகாலம் அனுபவிக்க கொடுத்து வைக்கவில்லையே என்று மனம் ஏங்கித் தவித்தது. கல்யாணம் முற்றாகியதும் தாங்கள் தொலைபேசியில் பேசி மகிழ்ந்த கதைகளும் பின் ஏஜன்ட் மூலம் அவர் சுவிசுக்கு கூப்பிட்ட எல்லாமே பசுமையாக மன வானில் அழுத்தமாகப் பதிந்திருந்தன.¨இனி அவற்றை ஒவ்வொன்றாக மீட்டெடுத்து அனுபவிப்பதுதான் என் மீதி வாழ்க்கையை கொண்டு செலுத்த எனக்கு கிடைத்த துடுப்பு'என்று உமையாள் மனதைத் தேற்ற ஆரம்பித்தாள்

இன்னும் இரண்டு பிள்ளைகளைப் படிப்பித்து தங்கள் காலில் நிற்கச் செய்ய வேணும்.கடமைகளைத் திணித்துவிட்டு அவர் மறைந்து விட்டார்.ஐம்பத்தைந்து வயது ஒரு வயதா இறப்பதற்கு.கடந்த ஒரு வருடமாக நோய் அவரை ஆக்கிரமிக்க வைத்தியசாலையும் வீடுமாக மாறிமாறி அலைந்து திரிந்ததில் உமையாள் கொஞ்சம் வருவதை எதிர்கொள்ளத் தயாராகவேயிருந்தாள். என்றாலும் இறப்பு தன் கோர முகத்தை முகத்துக்கு நேரே நீட்டியபோது அரண்டுதான் போனாள். ¨இனி அவரில்லாமல் நான் எப்பிடி இயங்கப் போகிறேன்.எல்லா முடிவுகளும் நானே தனித்து எடுக்க வேணுமே¨நினைக்க மலைப்பாகவே இருந்தது.இந்த நான்கு நாட்களும் உமையாள் என்று அவர்கூப்பிடுவது போன்ற பிரமையிலிருந்து அவளால் விடுபடமுடியவில்லை. இறப்பதற்கு ஆறு நாட்களுக்கு முன்பு பக்கத்தில் அழைத்து உட்கார வைத்து கைகளைத் தன் கைக்குள் வைத்தபடி படுத்திருந்ததும்,தான் இறந்த பின் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதைவிட எப்படியெல்லாம் இருக்கக் கூடாதென்று நிறையப் பேசியதும் நினைவில் முட்டி மோதியது.

¨உம்முடைய ஐம்பது வயது ஆசைகளைத் துறக்கிற வயசில்லை. நான் செத்த பிறகு எல்லோரையும் போல இரும்.பொட்டில்லாமல், மற்றவர்களின் வீட்டு விசேடங்களுக்குப்போகாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கிப் போயிடாதேயும்.பொட்டில்லாத உம்முடைய முகத்தை எனக்கு நினைக்கவே முடியேலை.மற்றவையளைப் போல சந்தோசமாய் பிடிச்சதைச் சாப்பிட்டு பிடிச்ச இடங்களுக்குப் போய் நீரும் சந்தோசமாயிருந்து பிள்ளையளையும் சந்தோசமாய் வைத்திரும். அவர்களுக்கு அப்பா இல்லாத குறை தெரியாமல் வளர்த்துக்கொண்டு வாரும்.நீர்தான் இனி அவர்களுக்கு அப்பா அம்மா எல்லாம்.அப்பா இல்லாத பிள்ளைகளென்று எல்லாரும் அவர்கள் விடயத்தில் தலைப்போட விடாதேம். என்ன உதவி தேவைப்பட்டாலும் சுந்தரேசிடம் நீர் கேட்கலாம். என்னுடைய சகோதரங்களைவிட அவனிடம் எனக்கு உரிமை கூட இருக்குது.ஏதும் முடிவுகள் எடுக்கும்போது அவனுடன் கதைச்சு முடிவெடும். உமக்கு அவனொரு அண்ணன்தான்.முழு சப்போட்டும் தருவான்.¨ சொல்லிக் கொண்டு வரும்போதே பீறிட்டு அழத் தொடங்கியவளை அணைத்து ¨அழாதேம். என்னுடைய உயிர் பிரியும் போது உம்முடைய சிரிச்ச முகமே என்னுடைய கண்ணிலை நிற்க வேணும். நான் அமைதியாய் சிரிச்சபடி விடை பெற வேணும்.அந்த முகமே உங்கள் எல்லாருடைய நினைவிலும் இருக்க வேணும்.நான் உங்களை விட்டுப் போக மாட்டன். சுந்தரேசன் சொல்லுவான் உயிர் பிரிகிற நேரத்தில் என்ன நினைக்கிறேமோ அதுதான் அடுத்த பிறவியாக அமையுமென்று.அவன் சொன்னால் சரியாகத்தானிருக்கும். நான் அர்ச்சனாவுக்கோ,ஆராதனாவுக்கோ பிள்ளையாய் பிறந்து உங்களோடேயே இருக்க வேணுமென்று நினைச்சுக்கொண்டு இருந்தன் என்றால் அது நடக்கும். நான் கட்டாயம் எங்கடை பேரப் பிள்ளையாய் பிறப்பன். எனக்கு அருமையான மனைவியையும்,குழந்தைகளையும் தந்த கடவுள் இப்பிடிப் பாதியிலேயே கூப்பிடுகிறானே. போன பிறவியிலை செய்த பாவமோ என்னவோ? தகப்பனையும் பிள்ளைகளையும் பிரித்துப் பாவம் செய்தேனோ தெரியேலை.இந்தப் பிறவியிலை நான் யாருக்கும் ஏதும் கேடு செய்ததாக எனக்கு ஞாபகமில்லை.¨கூறியவன் தொடர்ந்து பேச முற்பட¨போதும். கனக்க கதைக்காதேங்கோ.மூச்சு வாங்குது.¨என்று உமையாள் கூறவும்¨மறிக்காதேம்.பிறகு கதைக்க முடியாமலே போயிடுமோ?எனக்கு கிடைத்த இந்த சொற்ப நேரத்தை முழுசாய் அனுபவிச்சிட வேணும். உயிர் போற காலம் நெருங்க நெருங்க சொல்லாமல் எதையும் போயிடக்கூடாதென்று மனசு துடிக்குது. ஆராதனாவோ,ஆர்த்திகாவோ யாரையும் விரும்பினால் முதலில் நீர் விசாரித்துப் பாரும்.அவையின் குடும்பம்,குணம் என்று எல்லாம் அறிந்த பிறகே கல்யாணம் செய்து வையும்.சின்ன வயதில் அவைக்கு ஒன்றும் விளங்காது. கல்யாணம் செய்திட்டு பிறகு கரைச்சல் பட ஏலாது.நீர் தனிய சமாளிக்க மாட்டீர்.¨உயிர் போகும் தருணத்தில் கூட தன்மேல் காட்டும் அவனது கரிசனம் அவளை சுக்குநூறாக உடையச் செய்தது. ¨இவ்வளவு கரிசனம் காட்டீற்று விட்டிட்டுப் போகப் போறீங்களே. நான் தனிய என்ன செய்யப் போறன்¨கணவன் மேல் சாய்ந்து அழத் தொடங்கினாள்.¨கல்யாணம் செய்த அன்றைக்கு நீங்க சொன்னது ஞாபகமிருக்கா. இரண்டுபேரும் ஒன்றாகச் சாவம்.ஒருத்தரை விட்டு ஒருத்தர் தனித்துச் சாகிறேல்லையென்று¨.அவள் சொல்லி முடிக்குமுன் ¨இப்ப யோசிச்சுப் பாரும் இரண்டுபேரும் ஒரேயடியாய் போயிட்டால் பிள்ளையள் தவிச்சுப் போயிடாதுகளா?அநாதைகள் போல பிள்ளையள் அல்லாட வேணுமா? எனக்கு முதல் நீர் போனால்

என்னாலை பிள்ளைகளை ஆளாக்க முடியாது. கடவுள் சரியாகத்தான் கணக்கு போட்டிருக்கிறார். என்ரை உமையாள் எவ்வளவு கெட்டிக்காரி.நீர் சமாளிச்சிடுவீர்.எங்கை சிரியும்¨ கூறிக்கொண்டே வந்தவன் பேச்சு சட்டென தடைப்பட திடுக்குற்றாள். திடீரென அவ்விடத்தில் ஒரு அலாதியான அமைதி ஏற்பட்டது போல் தெரிய அவனது கைகளை வருடியபடி ஸ்வெஸ்ரர்!என்று கத்தினாள்.வாயில் அரும்பிய புன்னகை அப்படியேயிருக்க¨எப்பிடி என் கண்ணுக்கு தெரியாமல் அந்த உயிர் போனது.காற்றைப் போல கண்ணுக்குத் தெரியாமலே போயிட்டுதா?¨ இதுதான் நடக்குமென்பது தெரிந்தாலும் அவள் சந்தித்த அந்த நொடி தாங்க முடியாமல்தானிருந்தது.மயங்கிச் சாய்ந்த உமையாள் விழித்த போது மூன்று பிள்ளைகளும் தன் பக்கத்தில் அழுத கண்களோடு நின்றதைத்தான் பார்த்தாள். பிள்ளைகளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறினாள். யாருக்கு யார் ஆறுதல் கூறுவது.

நான்கு நாட்களாக பத்மநாதனை உயிரிழந்தவர்களைப் பாதுகாக்கும் இடத்தில் வைத்திருக்கிறார்கள்.நாளைக்கு எல்லாக் காரியங்களும் செய்து கடைசி யாத்திரைக்கு அனுப்பி வைத்துவிடுவார்கள்.தன் கணவனுக்கு தானே ஈமக்கிரியைகள் செய்ய வேண்டுமென்று உமையாள் விரும்பியும் அவரது அண்ணாவும்,தம்பியும் அதை மறுத்து தங்களில் ஒருவரே செய்யவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருப்பது அவளுக்கு வேதனையை அளித்தது. பிள்ளைகள் மூவரும் பெண் பிள்ளைகளாக இருந்த காரணத்தைச் சொல்லி தாங்களே செய்ய முன் வந்தார்கள். மூத்த மகளுக்கு திருமணம் நிச்சயமாகியிருந்த நிலையில் அவள் செய்வது நல்லாயிருக்காதென்று உமையாள் நினைத்தாள்.மற்ற பிள்ளைகள் இருவருமே¨எங்களுக்கு பயமாயிருக்கம்மா¨என்று தயக்கம் காட்டியபோது தானேசெய்வதற்கு உமையாள் தயாரானாள்.¨இதெல்லாம் இரத்த சம்மந்தமுள்ளவர்கள்தான் செய்யவேணும். பொம்பிளையள் செய்யக் கூடாது.பூநூல் போடாமல் எப்பிடி ஒரு பொம்பிளை செய்ய முடியும்.மகள்களில் ஒருவர் செய்தால் பரவாயில்லை.அதுவும் சரியில்லைத்தான். என்றாலும் ஒப்புக் கொள்ளலாம்.உடுப்புக்கு மேல் பூநூல் போட்டுச் செய்யலாம்.ஆனால் இரத்த சம்பந்தம் இல்லாத நீங்கள் எப்படிச் செய்யலாம்¨பத்மநாதனின் அண்ணா கூற தம்பியும் சேர்ந்து கொண்டார்.உமையாள் தனக்குள் வெடித்துக் கொண்டு வந்த அழுகையை அடக்கப் பிரயத்தனப்பட்டாள்.அவரோடு இத்தனை வருடங்கள் வாழ்ந்து மூன்று குழந்தைகளைப் பெற்று அவர்தான் எல்லாமே என்று வாழ்ந்தவளுக்கு இரத்த உறவு இல்லையென்று ஒதுக்கப்படுவது எவ்வளவு கொடுமை.உமையாளின் அண்ணா தங்கைக்காக எவ்வளவோ பேசியும் அவர்கள் தங்கள் உரிமையை விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை.இதில்தான் தங்கள் சகோதர பாசம் தங்கியுள்ளதாக நினைத்தார்கள் போலும்.இறந்த உடலை வைத்துக் கொண்டு தங்களில் ஒருவரே செய்ய வேண்டுமென்று இப்படி உரிமைக்குச் சண்டையிடுவது கேவலமாக இருந்தது உமையாளுக்கு. உயிர் போனவுடனேயே இப்படி அவர்கள் பேசுவது தன் கணவனை அவமதிப்பது போலிருந்தது.சொத்துக்குச் சண்டையிடுவதைப்போல இதுவும் ஒரு கேவலமான செயலாகவே இருந்தது.

ஈமச்சடங்கு விடயத்தில் என்ன செய்வதென்று தெரியாது முழித்த வேளையில் பத்மநாதனின் நெருங்கிய தோழன் சுந்தரேசன் கனடாவிலிருந்து வந்திருந்தான். அவன் குடும்பமாக இங்கு வருவதும் இவர்கள் கனடா போவதும் இடையிடையே நடக்கும் நிகழ்வுகள்தான். பிரச்சனை அவனுக்குத் தெரியவரவே¨உங்களுக்கு செய்ய விருப்பம் என்றால் யார் தடை சொல்ல முடியும்?பழக்கங்கள்,சம்பிரதாயங்கள்;, சடங்குகள் என்பவை எல்லாம் மனித சமுதாய வசதிக்கு அந்தக் காலத்தில் அவர்களுக்கிருந்த அறிவை வைத்து அமைத்திருக்கினம். இப்ப காலம் மாறுது.முந்தி தமிழிலை செய்த திருமணச் சடங்குகள் எல்லாம் பிறகு வடமொழிக்கு மாறி அதிலை சொல்லேலையே.ஏன் இப்ப திரும்ப கனபேர் திருக்குறள் சொல்லி தமிழிலை கல்யாணங்கள் செய்யேலையே.இப்படித்தான் என்று ஒன்றும்சட்டமில்லை.’சொன்னதுடன் நிற்காமல் பத்மநாதனின் அண்ணன் தம்பியுடன் பேசினான்.

¨ஒருவர் இறந்தவுடன் அந்த ஆத்மா உடலை விட்டு வெளியேறிவிடும். பிறகு செய்கிற ஈமக்கிரியைகள் எல்லாம் வெறும் உடலுக்குத்தான். சவத்தை சிவமாக நினைத்துத்தான் இந்த இந்தக் கிரியைகள் செய்வது. இதெல்லாம் இருக்கிறவர்களின் மன ஆறுதலுக்குத்தானே தவிர இதனால் இறந்த ஆத்மாவுக்கு எதுவுமே கிடைக்கப் போறது இல்லை.இதுகளைக் கொஞ்சம் யோசியுங்கோ. நீங்க ஈமக்கிரியை செய்கிறதாலை பத்மநாதன் நேரே கடவுளிடமோ,அல்லது சொர்க்கத்திற்கோ போகப் போறதுமில்லை.பூநூல் போட்டுச் செய்ய வேணுமென்ற எந்தக் கட்டாயமுமில்லை.இந்த ஆரியர் தமிழ் நாட்டில் கால் வைத்து வடமொழியைப் புகுத்தி ஆக்கிரமித்ததால் தமிழ் புறக்கணிக்கப்பட்டு அதாவது தமிழரின் பழக்கவழக்கங்கள் பல புறந்தள்ளப் பட்டு இடையில் வந்த பழக்கங்கள் இவை.பூநூல் போட்டுச்செய்தவுடன் அந்த ஆத்மா தான் செய்த பாவங்களையெல்லாம் துறந்து கடவுளிடம் போகுமென்று நம்புறீங்களா?இதுகளெல்லாம் நெருங்கிய சொந்தங்கள் செய்யும்போது மனம் கொஞ்சம் ஆறுதலடையும்.அவ்வளவுதான். இதுகளெல்லாம் செய்வது ஒரு தெரபி.முந்தி நெஞ்சிலை அடிச்சு அழுகிறதாலை இறப்பு என்ற பிரிவுகளாலை இருதய நோய் வருவது இல்லையென்று இப்ப சொல்லுகினம்.பிரிவை நினைத்து மனதுக்குள்ளே புழுங்கிக்கொண்டு இருக்காமல் அவர்களை வெளியே கொண்டு வர அந்தக்காலத்திலை கண்டுபிடித்த ஒரு ரெக்னிக்.அவ்வளவுதான்.மன உளைச் சல் வராமல் இருக்கத்தானே செலவு அந்தியட்டி

என்றெல்லாம் செய்கிறது.ஆத்மா உடலைவிட்டுப் பிரிந்து போனபிறகு அவைக்குப் பிடித்த சாப்பாடுகளைச் செய்து வைச்சிட்டு சொந்தக்காரர்தானே சாப்பிடுறது. உடலுக்குள் இருக்கு மட்டுந்தான் அந்த ஆத்மாவுக்கு உந்த சாப்பாட்டு ஆசையெல்லாம். இதுகளைப் புரிந்து கொண்டு மாறுங்கோ.உமையாள் ஈமக்கிரியைகள் செய்கிறதாலை அவவுக்கு மனதில் ஒரு திருப்தி கிடைக்குதென்றால் அதையேன் மறிக்கிறீங்க. இதோ அடுத்தகிழமையே நீங்க உங்கடை சகோதரத்தை மறந்து மற்ற வேலைகள் செய்யப் போயிடுவீங்க. ஆனால் முழு வேதனையும் உமையாளுக்குத் தானே. சும்மா கதைச்சுக் கொண்டிருக்காமல் அவ விரும்பினபடி அவவைச் செய்ய விடுவதில் உங்களுக்கென்ன தடை. பத்மன் இருக்கேக்கையே அவவை மீறி எதுவும் செய்ய மாட்டான். அவவுடைய விருப்பத்துக்குத்தானே முன்னுரிமை குடுக்கிறவன்.அவனை நீங்க உண்மையாக நேசித்து இருந்தால் உமையாளின் விருப்பத்துக்கு மதிப்பு குடுங்கோ"சிறுவயது தொடங்கி நண்பனாக இருந்த காரணத்தினால் அடிச்சுச் சொன்ன சுந்தரேசை அவர்களால் மறுத்துப் பேச முடியவில்லை.அவர்கள் எல்லாருடைய பிரின்சிபல் சுந்தரேசின் தந்தை. பொறியியலாளராய் பெரிய பதவியில் இருக்கும் அவனது பேச்சை அவர்களால் தட்ட முடியவில்லை. அவனது அம்மாவும் அவர்கள் எல்லோருக்கும் ஆசிரியையாக இருந்தவர். சுந்தரேசன் கூறிய நியாயமும் புரியவே உமையாள் இறுதிக்கிரியைகள் செய்ய ஆயத்தமானாள்."அண்ணா! நீங்க மட்டும் வராமலிருந்திருந்தால் எனக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்திருக்காது.எனக்கென்னவோ அவருக்குச் செய்ய வேண்டிய கடமை இது என்று நினைக்கிறன்.எனக்கு அதற்கு மனத்தைரியமும் இருக்கு.மிக்க நன்றியண்ணா". பத்மநாதனின் மகள்கள் இருவர் வந்து"மாமா!நீங்க வந்திருக்காட்டி அம்மாடை ஆசையை எங்களால் நிறைவேற்றியிருக்க முடியாது.எங்களுக்கு இதுகள் எதுவுமே தெரியாது.யார் யாரோ சொல்றதையெல்லாம் கேட்டு அப்படியே செய்திருப்பம்.இப்பதான் கொஞ்சம் கொஞ்சம் விளங்குது. நன்றி மாமா"என்று கூறினார்கள்.உமையாளின் நண்பி சொன்னாள்"சும்மா மாடு சொல்றதெல்லாம் எடுபடாது:மணி கட்டின மாடு சொன்னாத்தான் எடுபடும்".

தலைமாட்டில் விளக்கேற்றி வைத்திருக்க பிறரிடம் பகிர முடியாத தன் வேதனையை அருவியாக ஊற்றெடுக்கும் கண்ணீர் மூலம் வெளியேற்றிக் கொண்டிருந்தாள் உமையாள்.அந்த நேரத்திலும் பத்மநாதன் தன் உயிர் சினேகிதன் சுந்தரேசன் பற்றிக் கூறியது உமையாளுக்கு ஞாபகத்திற்கு வந்தது. "சுந்தரேசன் குடும்பம் எல்லோருமே படித்தவர்கள்.அவன் எது சொன்னாலும் சரியாகத்தான் இருக்கும். எங்கடை அப்பா அவ்வளவு படிக்காததால் ஒரு அச்சகத்தில் வேலை பார்த்து வந்தார்.ஆனாலும் அவர்கள் யாரும் பெருமை பேசினதும் இல்லை. சுந்தரேசனின் அம்மா எங்களையும் தங்கடை பிள்ளைகள் போலத்தான் பார்ப்பா.எங்களை படிக்கச் சொல்லி ஊக்குவித்தபடி இருப்பா.நாங்க எல்லாருமே சுந்தரேசுடன் இருந்து தான் படிக்கிறனாங்க. அவனின் அப்பா அம்மா இரண்டு பேருமே எங்களுக்குத் தெரியாததுகள் சொல்லித் தருவினம்.நாங்க எல்லாரும் ஓரளவுக்கு படிச்சதுக்கு அந்தக் குடும்பந்தான் காரணம்.அவை அறிவாளிக் குடும்பம்". சுந்தரேசன் பிரச்சனையைக் கையாண்ட விதமும் அவனது அறிவார்ந்த பேச்சும் பார்த்து உமையாள் பிரமித்து நின்றாள்.

எல்லாரும் செய்கினமென்று நாங்களும் பிழையான விடயங்களைச் செய்யாமல் ஏன் எதற்கு என்று அறிந்து சரியானதை மட்டும் செய்ய வேண்டும் என்ற அறிவு அங்குள்ள இளையவர்களுக்குப் புரிந்தது. கொஞ்சம் மாறுவோமே.இளையர்களுக்குச் சரியானவற்றைச் சொல்லிக் கொடுக்காது போனால் அவர்கள் தமிழ்க் கலாச்சாரத்திலிருந்து முற்று முழுதுமாக விலகி விடுவார்கள் என்பதை நினைவில் கொள்வது நல்லது என்று அங்கு பலரும் பேசிக் கொண்டார்கள்.சுவிசில் நாங்கள் பலர் முன்னேறாமல் தேவையற்ற சடங்குகளில் மூழ்கிப் போயிருக்கிறம் போல இருக்கிறதே. இப்படி கனடாவில் இருந்து வந்த தம்பி போல சரியாக யோசித்து எங்கடை கலாச்சாரத்தை இனிமேல் என்றாலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்று உறுதி கொண்டார்கள்.

அங்கிருந்த ஒரு பெரியவர் சொன்னார்."விடயம் தெரிந்த எங்களைப் போன்ற பெரியவர்களும் அவர்கள் குடும்ப விடயமென்று விலகி இருந்தால் எப்படித்தான் சில நல்ல விடயங்களை அடுத்த தலை முறைக்கு கொண்டு போய்ச் சேர்க்கப் போகிறோம்.இந்தப் புலம்பெயர் தேசங்களில் விழுந்த நம்மவர் விதைகள் செடிகளாகும்போது அந்தந்த நாட்டு மரங்களின் குணத்துடன் வளர்வது தவிர்க்க முடியாது.ஆனாலும் எங்கள் பாரம்பரியங்களை காரணகாரியத்துடன் விளக்கி எடுத்துச் செல்லத் தூண்டுவது எங்கடை கடமை.முந்தின காலத்திலை நாங்க ஏனென்று கேட்காமல் பார்த்ததைச் செய்யப் பழகிவிட்டோம். ஆனால் இந்த நாடுகளிலை அப்படியில்லை.எங்கடை கலாச்சாரத்தை தக்க வைக்க வேணுமென்றால் ஏன் எதற்கு என்பதைச் சொல்லி வந்தால் ஏற்புடையவற்றை இவர்கள் நடைமுறைப்படுத்தி வருவார்கள்.எங்கள் முன்னோர் எம்மிடம் ஒப்படைத்துப் போனவற்றை அவர்கள் இவர்கள் தூசு தட்டி எடுத்துச் செல்லட்டும். மாற்றங்கள் வரவேற்கத்தக்கவை' அவருடைய பேச்சை எல்லோருமே ஆமோதிக்க "முத்து நல் தாமம் பூமாலை தூக்கி' என்ற பாடல் ஒலிக்க பொற்சுண்ணம் இடிக்க ஆரம்பித்தாள் உமையாள்.



செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# காகம்

வடாகம் கொத்த வந்தால்
விரட்டும் நீங்கள்
மாதத்தில் ஒருநாள்
அழைத்து விருந்திடுவதேனோ

பழம் தின்று
எச்சமாக விதைத்து
மரத்தை வளர்க்க
அதை வெட்டுவதேனோ

ஆக்கிரமித்த வீட்டை
இடித்தால் கொதிக்கிறீர்கள்
என்னுடைய கூட்டை
கலைத்து சிதைப்பதேனோ

பங்கிட்டு பசியாற
தெரியாத நீங்கள்
பங்கிட்டு பசியாறும்
எங்களை கேவலப்படுத்துவதேனோ

எங்களைப் போல
மற்றப் பறவைகளும்
இருக்கும் வரையே
உங்களுக்கான வாழ்வு

பறவை இனமழிந்தால்
பூகோளம் பற்றி எரியும்
புரிதல் உனக்கிருந்தால்
மரம் வெட்டுவதை நிறுத்து

காகத்தின் ஆதங்கம்
உணர்ந்திடு மானிடா
மரத்தை விதை
மழைநீர் சேமி

சத்தியபானு ச

இரவின்
மடியில்
இதமாய்
ஒரு
பயணம்
எண்ண
முடியாத
விண்மீன்
ஏரளம்
கொட்டிக்
கிடக்குதே
கருநீலச்
சாயம்
தொட்டு
பூசவே
ஆசைதோறும்......!
யானை
உருவமோ?
போர்
வடிவமோ?
தேநீர்
காட்சியோ?
கம்பன்
வடித்த
ராமாயணமோ?
எதுவென்று
கூறுவோம்
முகிலில்
பொதிந்துக்
கிடக்கும்
அழகை
அள்ளி
பருகும்
அமுதசுரபியோ
வெள்ளை
மேகமாய்
மாறி
நிற்குதே.....!
வட்ட
பொட்டாய்
நிலாவு
வட்டமிட
சுட்ட
தோசையோ?
என
மேகம்
அதை
உண்ண
எஞ்சியதோ
வெண்ணிலவு...!



# மதி புறாவும், மாடப் புறாவும்

இரா. மதிராஜ்,

“இசக்கிமுத்து ஊருக்கு போயிட்டு எப்பல வந்த”

“ரெண்டு நாளைக்கு முன்னால வந்தோம்ல மக்கா”

“சரில என்னல வாங்கிட்டு வந்த”

“எங்க பெரியப்பா வீட்டில் இருந்து ரெண்டு புறா குஞ்சு பிடிச்சிட்டு வந்திருக்காம்ல”

ஒன்பதாவது படிச்சிட்டு இருக்கிறோம்

ஒன்பதாபுள்ள நான்கு பிரிவுகள் இருக்குது,

பத்தாம் வகுப்பில் வெறும் மூன்று பிரிவுகள் தான் உண்டு,

உங்களுக்கு புரியம்ன்னு நினைக்கிறேன்

ஒரு பிரிவில் உள்ளவர்கள் எல்லாத்தையும் கம்ப்ளீட்டா பெயில் பண்ற அளவுக்கு நாலு பிரிவில் இருந்து நிறைய பேர் இருக்காங்க,

ஒன்பதாம் வகுப்புப் பாஸான பத்தாம் வகுப்பு பாஸ் ஆயிடலாம்

ஆனா அந்த ஒன்பதாம் வகுப்பு பெயில் ஆனா கொஞ்சம் கஷ்டம் தான்,

கூட்டாம்புளி முத்துக்குமார்

போடம்மாள்புரம் கட்ஸ் முத்துகுமார்

கீழக்கூட்டுடன்காடு இசக்கிமுத்து,

நானு,

சூசைப் பாண்டியாபுரம் ஒரு மைக்கேல்

எல்லாரும் ஒரே செட்,

எல்லாருமே கடைசி பெஞ்சுக்கு முந்தன பெஞ்ச் தான்

படிக்கிறதோட கதை நல்லா ஓடும்

இசக்கிமுத்து தெனமும் புறாக் கதை நல்லா சொல்லிட்டு இருப்பான்

“புறா முட்டைப் டோடப் போகுது தெரியுமா லே “

“நீ எப்படி லேப் பார்த்த”

“கோழிக்குப் பாக்குற மாதிரி பார்த்து இருப்பான்னு நினைக்கிற மக் கா’

என்றான் கூட்டாம்புளி கடுக்கான் முத்துக்குமார் “

“நீ லூசு பய மாதிரி பேசாதீங்க லே “

“புறா தும்பு எடுத்து வச்சா முட்டை இடதாண் லே “

“என்னோட புறா தும்பு எடுத்து வைக்க ஆரம்பித்துவிட்டேன் தெரியுமா”

“புறாக்களைப் பற்றிய ஆசை நம்மையும் விட்ட பாடு இல்லை”

“எப்படியாவது புறாவை வளர்த்து ஆகணும்”

சரி சனிக்கிழமை காலைல சைக்கிள் எடுத்துட்டு கூட்டாம்புளி போக வேண்டி தான்,

ஊமராசான்னு ஒரு ஐயா இருக்கிறார்,

அவர்ட்ட ஒன்லி ரோமன் புறா மட்டும் தான் இருக்கும்

ஆனா எல்லாரும் என்ன சொல்லுவாங்கன்னா

ஊமராசா ட்டப் புறா வாங்கிட்டு வந்தா புறா எல்லாம் அம்மைப் போட்டு செத்துரும்ன்னு சொன்னாங்க,

நம்ம வேணா ஒரு ஜோடி வேணா வாங்கிப் பார்க்கலாம்

புறா கூடு உள்ளதெல்லாம் போய் பாக்க முடியாது

ஏன்னா அது வீடோட பெருசா இருந்தது

அப்போ ஒரு அண்ணன் ஒருத்தன் சொன்னாரு

“ஊமராசா லேசுப்பட்ட ஆள் கிடையாதுடா “

“புறாக் கூட்டுக்குள்ள புறாவைப் பிடிக்க பூனை போச்சுன்னா போன பூனை உயிரோட திரும்ப வராது தெரியுமா”

அவர் ஒரு படிக்காத மெக்கானிக்கல்,சிவில் இன்ஜினியர் என்று நினைக்கிறேன்

ஊமராசா

வாய் பேச முடியாவிட்டாலும் திறமை அதிகமா உள்ள ஒருத்தர்

பிறகு நம்ம ஊர்ல நமக்கு தெரிஞ்ச ஒரு அண்ணன் புறம் வளர்க்கிறார்

அவர் யாருன்னு அஞ்சுமணிக் கோனார் மகன் பெருமாள் அண்ணன் அவரு லாரி டிரைவரா வேலை பார்க்கிறார்

அந்த அண்ணனுக்கும் நமக்கும் நல்ல பழக்கம் தான்

அடுத்தவங்க பனையில் கள்ள நொங்கு வெட்டினாலும்

நம்ம தெருவுல உள்ள எல்லா சின்ன பசங்களுக்கு நுங்கு வெட்டி கொடுப்பாரு வீட்டுக்கு ஒரு நாள் எடுத்துட்டு போக மாட்டாரு

நானும் ஓசில நிறைய நோங்க அவருகிட்ட வாங்கி சாப்பிட்டு இருக்கேன் ஞாபகம் இருக்கு,

“ஏலே மதி என்ன இந்த பக்கம் வந்திருக்க ?’

அவங்க வீடு ஒரு பிரம்மாண்டமா இருக்கும்

வேதக் கோயிலுக்கு முன்னால அவங்க வீட்டோட முன் வசல்லு பச்சை கலர்ல பெயிண்ட் அடிச்சு தெற்கு பார்த்த கதவா இருந்துச்சு,

கதவுல இருந்து உள்ளக போனா

வலது பக்கமும் இடது பக்கமும்

திருமண மண்டபத்துல தின்னை இருக்குற மாதிரி பெரிய திண்ணை இருக்கும்

நடுல வாய்க்கால் மாதிரி பாதை போகும்

ஒட்டு வீடு தான் ஆனா அவ்வளவு குளி ர்ச்சியாயிருக்கும் அவுங்க வீடு,

வீட்டோட கொல்லபுறத்துல அடுத்த தெரு ஆரம்பித்து விடும்

அவங்க வீடு வந்து ரெண்டு பேருக்கும் நடுவுல இருந்த மாதிரி ஒரு அமைப்பு உள்ள வீடு

வீட்டோட கடைசி பக்கத்துல ஒரு பெரிய வேப்பமரம்

இந்த வேப்ப மரத்துப் பக்கத்துல அவர் வந்து புறா கூடு வச்சிருந்தாரு,

அவரு புறா மணி மணியா இருந்துச்சு

நமக்கு புடிச்ச அதே கருப்பு, வெள்ளை க் கலந்தக் கலரிலும் புறா இருந்துச்சு

நான்

“பெருமாள் அண்ணே நான் புறா வளர்க்க போறேனே”

“ஏலே இங்க வா நான் சொல்றத கொஞ்சம் நல்லா கேட்டுக்கோ,

நீ இப்ப எத்தனாப்புல படிக்க? “

“எண்ணேன் நா ஒன்பதாவது படிக்கிறேனணே “

“ஒழுக்கமா படிச்சு நல்லா மார்க் வாங்க பாரு லே தம்பி “

“இந்தப் புறா பின்னால போனா நீ விளங்காம போயிடுவே”

அதுக்கு பிறகு உன் இஷ்டம் லே “

“இடம் அதெல்லாம் ஒன்னும் கிடையாதுன்னே “

.....

“எப்படியாவது படிச்சிடுவேன்ண்ணே “

இருந்தாலும் கொஞ்சம் வயித்தக் கலக்குது உண்மை தான்

என்ன மனசுல ஒன்பதாவது பாசாவோம அப்படிங்கறது பெரிய சந்தேகமா இருந்துச்சு

“இல்ல பெரும்மான்னா எனக்கு ஒரு ஜோடி புறா மட்டும் குடுங்க,

எனக்கும் வளக்கனும்னு ஆசைய இருக்கணும்”

இவர் வீட்டிலேயே புறா நிறைய வளர்த்தாலும் ஊருக்குள்ள கோயில் பள்ளிக்கூடம் கிணறு பம்பு செட்டு என

எல்லாத்தையும் இருக்கிற புறா, குஞ்சு எல்லாம் கரெக்டா எடுத்து வந்துருவாரு

இவருக்கு தெரியாம ஒரு கிணத்துல புறா கூட கூடுக் கட்ட வாய்ப்பில்லை

அது என்னமோ அந்த பெருமாள் அண்ணனோடத் திறமை தான்,

புதுக்கோட்டை ஸ்கூல்லயும் பத்தாம் வகுப்பு கிளாஸ் ரூம் எல்லாம் ரொம்ப பழசு தான்

கார பில்டிங் ஓடு போட்டது

நல்ல சரியான உயரமா இருக்கும்

1960 ல கட்டின பில்டிங்ன்னு நினைக்கிறேன்

எல்லா வகுப்பறைகளையும் கண்டிப்பா ஒரு ரெண்டு ஜோடி புறா கூடுக் கட்டி இருக்கும்

அது குஞ்சு பொரிச்சா எப்படி பெருமாள் அண்ணன் எடுக்கிறார் என்று அவருக்கு மட்டும் தான் தெரியும்,

நான் எப்படியோ புறா வாங்கி வளர்க்க ஆரம்பிக்கிறேன்,

எங்க அண்ணன் பத்தாவது படிக்கிறான்

ஜெயராஜ் சார் டியூஷன் முடிச்சிட்டு நைட் லேட்டா தான் வருவாரன்

நானும் டியூஷன் படிச்சிட்டு நைட்டு ஒன்பது மணிக்கு தான் வீட்டுக்கு தான் வருவேன்

நானும் எங்க அண்ணனும் வந்து புறா வைப் போய் பார்த்தா

ஒத்த புறா கூட கூட்ல அடையாம எல்லாம் ஓட்டு போல ஏறி நின்று இருக்கும்

இதுல என்ன பிரச்சனைன்னு பாத்துக்கிட்டீங்கன்னா

கூட்ல அடையலனா புறா கண்டிப்பா பூனை திங்கப் போவது என்பது உறுதி

பூனை வந்து தின்னுட்டு போயிரும்

கடைசி வீட்ல ஒரு மச்சி வீடு இருந்துச்சு

அங்க புறா ரோமம் கிடந்துன்னா

அந்த ரோம்ம உடையப் புறா கண்டிப்பா செத்து போயிட்டுன்னு சொல்லி

அடுத்த வேலையை பார்க்க ஆரம்பிக்கலாம்

ஆனா அந்த புறா ரோமத்தைத் தவிர வேற எதுவும் கண்டுபிடிக்க முடியாது

அந்த அளவுக்கு பூனை வந்து புறாவை தின்று இருக்கும்,

தினமும் நைட் டான்னா ஒரு காட்டுப் பூனை வந்து தினமும் ஒவ்வொரு புறா வாய் புடிச்சிட்டுப் போயிருது, ஆசையா வளக்கும் புறா எல்லாம்

பூனைக்கு யரையாவது பார்த்துட்டு நம்மால் சும்மா இருக்க முடியல,

அப்போ நம்ம கூட்டாளி ஒருத்தன் கிட்ட இந்த விஷயத்தை சொன்னேன்

"ஏலே இதெல்லாம் ஒரு பெரிய மேட்டரே கிடையாது மக்கா "

"நம்ம இலைக் கடை வைச்சியிருக்குற பேரூரனி நீலகண்ட நாடார் மகன் ராசா அண்ணனை போய் பாப்போம், பூனைப் பிடிக்கிறதுக்கு

அவரு நல்லா பெரிய கூண்டு ஒன்னு வச்சிருக்காருல "

"எனக்கு இன்னைக்கு நைட்க் குள்ள

அந்த பூனையைக் காலி பன்ரன்ல "

"....."

"ஏன்னா இன்னைக்கு ஞாயிற்றுக்கிழமை பாத்துக்கோ

கோழிக்கடை கண்டிப்பா திறந்து இருப்பாங்க"

"நம்ம போடம்மாள் புரத்து அண்ணாச்சி ஒருத்தர் முத்துன்னு சொல்லி பிளாக் ஆபிஸ் போற வழியில கோழிக்கடை வைத்திருக்கிறார்".

"ஆமா மக்கா அங்க போய் என்ன மக்கா?"

"நல்ல கோழி குடல வந்து தூர தான் போடுவாங்க பாத்துக்க"

"அதுல ஒரு குடல் ஒன்னு நம்மக் கேட்டு வாங்கிக்கலாம்"

"சரி மக்கா "

"சுட்டு வச்சேன்னா எப்படி கண்டிப்பா பூனை அந்த வாடைக்கு வந்து மாட்டிவிடுமுக்கா"

"ஆமாம்லே "

நண்பனாக ஐடியா கொடுக்கிறான்

'சரி முதல கூண்டு கிடைக்கான்னு போய் பார்ப்போம்"

"இந்த ராசான்ணன் சாதாரணமான ஆள் கிடையாது பயங்கரமான ஆளு"

"என்னலே சொல்லுற "

"இவரு அவருக்கு சளி பிடித்து காய்ச்சல் வந்துச்சு அப்படின்னா நம்ம எல்லாம் டாக்டர் கிட்ட போவோம்"

"ஆமா மக்கா "

"ஆனா அவரு அப்படி எல்லாம் டாக்டர்ட்டப் போக மாட்டாரு"

"வச்சிருப்பாரு அவருக்குன்னு ஒரு வைத்தியம்"

"என்னல வைத்தியம் அது "

"புதுக்கோட்டை ஸ்கூலுக்கு வந்து ப்ளே கிரவுண்டுக்கு கோட்டை சுவர் கிடையாது"

"அவ்வளவு பெரிய கிரவுண்ட்ல பாத்துட்டீங்கனா தலைச் சுத்துற அளவுக்கு வேகமாக நாலு ரவுண்டு ஓடிவருவார்"

"யா அண்ணன் இப்படி ஓடி வர்றீங்க அப்படின்னு சொல்லிக் கேட்டா "

"இப்போ காய்ச்சல் தலைவலி எல்லாம் போனா ஊசி மாத்திரை இரண்டு மூன்று நாள் இழுப்பாங்க மக்கா

இது நாலு ரவுண்டு ஓடினா போதும் சரியாயிடும் அப்படிம்பாரு"

"அதை நம்புறது தா? நம்பாம இருக்குறதா? தான் தெரியல"

"ஆனா அவரைப் பொருத்தவரைக்கும் அதுதான் உண்மை அவர் அதை தான் பண்ணுவாரு அவருக்கு சரியாயிடும்"

சரி இப்ப நம்ம பூனை பிடிக்கிறதுக்கு போவோம்,

கூட்டாளிக் கூட்டிட்டுச் சைக்கிளையும் எடுத்துட்டு ராசா அண்ணன் வீட்டுக்கு போனோம்,

"யன்ண நீ ஒரு உதவி செய்யணும் அண்ண"

"வா லே குட்டி வாத்தியார் வீட்டுக் கொள்ளி "

"ஏன்னா நா புறா வளக்கமெல்லாம் உங்களுக்கு தெரியும்லாண்ணே? "

"ஆமாம் லே இப்ப அது என்னலே "

"எல்லா புறாவையும் பூனை தினமும் வந்து புடிச்சிட்டு போயிரு துன்ணே சரியான காட்டு பூனை வேற இருக்கு"

"இவன் சொன்னா உங்கிட்ட பூனை பிடிக்கிறதுக்கு ஒரு கூண்டு இருக்கது அப்படின்னு சொல்லி சொன்னா சரி அதான் அந்த கூண்டை வாங்களேன்னு வந்தேன்னே "

இது தான் நடக்கும்

"அந்த மாடு கட்டியிருக்கும் பாரு அந்த புக்கத்துல போய் பாரு கெடக்கும் தூக்கிட்டு போ"

"என்ணே கூண்டு உடனே கிடைக்காது அண்ணே பூனை நிறைய இருக்கு"

"அதெல்லாம் ஒன்னும் பிரச்சனை இல்ல /லே என்னைக்கு கொண்டு வந்து கொடுக்க முடியுமோ அன்னைக்கிக் கொடுத்துக்கோ லே "

"ரொம்ப தேங்க்ஸ்அண்ணே "

"......"

"மக்கா எப்படியோ பூனைப் பிடிக்கிறதுக்கு பெரிய க் கூண்டு வாங்கியச்சி "

"இனி கோழி குடல் மட்டும் வாங்குனா சரி"

"வீட்டுக்கு கோழிக் கறி வாங்கறது கூட நான் இவ்ளோ இன்ட்ரஸ்டாப் போனதில்லை "

அந்த நம்ம புறாவை திங்கிற அந்த பூனை பிடிக்கணும் அப்படிங்கறதுல தான் நான் ரொம்ப இன்ட்ரஸ்டா போனேன்,

"ஏப்பு என்னப்பு வேணும் உனக்கு? "

கோழிக்கறிக் கடைக்கார அண்ணாச்சி கேக்குறாரு,

"ஏன்னா இந்த கோழி குடல வந்து தூர போடுவீங்களா அதுல ஒன்னும் வேணும்ண்ணே "

"இந்தாப் பூ எடுத்துக்கோ பூ "

சரி வீட்ல யாருக்கும் தெரியாம

இதை நெருப்புல வாட்டி பின்பு,

நம்ம வீட்டு சுவருக்கும் செட்டியார் வீட்டு சுவருக்கும் ஒரு பொது சுவர் உண்டு அது மேலே இந்தப் புறா கூண்டு பக்கத்திலேயே, பூனைப் பிடிக்குறக்

கூண்டு வைக்கிற அளவுக்கு ஒரு இடம் ஒன்னு இருந்துச்சு, அதுலே வச்சாசு,

இந்தக் கூண்டும் எலிப் பொறி மெக்கானிசம் தான்,

"ஏழாம் வகுப்புல படிச்ச நெம்புகோலின் தத்துவம் இங்க நம்மா ஒன்பதாம் வகுப்புப் படிக்கும்போது பூனைப் பிடிக்க நல்லா யூஸ் ஆகுது

முதலாம் வகை நெம்புகோலின் தத்துவப் படி இந்தப் பூனைப் பிடிக்கும் கூண்டிலேயும்,தாங்குதானமே நடுவில் இருக்கிறது,கோழிக் குடலைத் சுட்டு பூனை வந்து நிற்கும் அறையில் தொங்க விடப்படிருக்கும், பக்கத்துல உள்ள அறையில் ஒரு புறாக் குஞ்சு பூனையின் பார்வைக்காக அடைத்து வைக்கப் படிருக்கும்,

குடல் வாடைக்கு கோழிக் குடலைக் கடித்து பூனை தலையை சிலுப்பிய உடனே "திறன் "விடுபட்டு பளுவைக் கைவிட்டு பளு உடனேப் பூனையைக் கைவிட்டு விடும்,இந்த கூண்டை கண்டுப் பிடித்த என் நாட்டு வில்லேஜ் விஞ்ஞானிக்கு என்னோ நோபல் பரிசு வழங்கப்படுவில்லை,

பூனை அறையின் கதவு மூடப் படும்

இன்னைக்கு நைட்டு வந்து வாசனை வர அளவுக்கு நல்லா சுட்டு பூனை பிடிக்க கூண்டுல வெச்சாச்சு

அடுத்த நாள் காலைல எழுந்த உடனே ஏதோ ஒன்னு மாட்டிருக்கு

சரியான பூனை கூட்டோட மொதல்ல இருந்து கடைசி வரைக்கும் கூண்டே அடைக்கிற மாதிரி நீளமா இருந்துச்சு

பூனைப் பிடித்து அழகா மேல இருந்து கூண்ட கீழே இறக்கி ஆச்சு

இறங்கி ஒரு தனியா ஒரு ரூம்ல பூனையை தூக்கி போட்டாச்சு

சும்மா கண்ணை மூடிட்டு முட்டுது பாக்கலாம் கூண்டே உடைக்கிறதுக்கு,

நண்பனை கூப்பிட்டேன்

"ஏலே சரியான உருப்படி ஒன்னு மாட்டிருக்குதே"

"ஆமா இப்ப இதே (பூனையை )என்ன பண்றது இத வந்து நம்ம கொல்லவும் முடியாது,

உயிரோட விடவும் முடியாது என்னதான் பண்ணலாம்?"

"ஏலே இது ஒரு கவலையா?"

"பண்டார கோனார் தெரியுமாலே?"

"ஏன் ஆமா அவர் சட்ட போட மாட்டாரு அவரு தான் லே "

"இவன் ஒருத்தன் சட்டை போட மாட்டாரு,

ஜட்டி போட மாட்டாருன்னு "

"கொத்த வேலைக்கு கையாலா வருவாரு லாலே அவரு தான்லே "

ஆமா சித்தாள் வேலைக்கு..

"....."

"ஆமா பண்டாரம் அண்ணாச்சி தானே?

"பண்டாரம் அண்ணாச்சி எனக்கு தெரியும்,

"பண்டாரக் கோனார் நல்லா பூனைக் கறி சாப்பிடுவார் லே "

"அப்ப நம்மள வேணா பூனைய கறிவச்சிக் குடுக்கச் சொல்றியா? "

"ஏ லூசு மண்டை"

"பூனை இருக்குன்னு சொன்னா போதும் அவரே வந்து சாக்லப் போட்டுக் கொண்டு போய் வாப்புலே மக்கா "

"எப்படியோ இது சீக்கிரமா வந்து எடுத்துட்டு போக சொல்லு லே "

"அடுத்து நிறைய பூனைப் பிடிக்க வேண்டி இருக்கு"

கூண்டு வேறத் தேவைப்படுது,

இப்படியே நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ணமாக,

பூனைகளின் எண்ணிக்கை குறையும் போது புறாக்களின் எண்ணிக்கை அதிகரித்தது

மனித மொழி தெரியாத அந்த கபடற்றப் புறாக்களிடம் நான் பேசினேன்

உங்களுக்கு ஒரு பிரச்சனை னா சொல்லுங்க இந்த மதி பய சும்மா இருக்க மாட்டான்.

**கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி.**

# அலரி

நெருங்கவே அஞ்சும் தொலைவும் விளைவும்!
நெருங்கிடத் துணியவே நெஞ்சமும் கலங்கும்!
கொதிநிலைக் குழம்புகள் நிரம்பியக் கொள்கலன்!
தொலைவில் இருந்தே தொடர்ந்திடும் தேசவன்!

சந்திரனுக்கு முத்தொளியால் சாயமேற்றும்
நெசவாளி!
சந்திக்கவே முடியாது சுறுசுறுப்பானத் தொழிலாளி!
சுற்றங்களைச் சுற்றிடவே வைக்கும் முதலாளி!
சாம்பலும் தேறாதே எவரிங்கே எதிராளி?

அண்டவே முடியாத அண்டங்களில் அங்கம்!
அதிதியின் திருவயிற்றில் உதித்திட்ட அமிர்தம்!
ஓய்விலாது எரிந்திடும் நிலையே உருவம்!
ஒருநாளும் தேயாது மாறிடாதப் பருவம்!

பூமியெனும் காகிதத்தில் பொன்னொளித்
தூரிகையால்
புறத்திலும் அகத்திலுமாய் நித்தமும் வரைந்திடும்
ஓவியத்தின் அதிசயத்திற்கு ஒருவனே காரணம்!
ஓளிர்வுடனே கனன்றுக் கொண்டிருக்கும் கதிரவன்!

கார்மேகத் தத்தையின் நீர்க்கருவின் தந்தை!
காரிருளைத் துடைத்தே எடுப்பதுவோ விந்தை!
கண்ணுக்குப் புலப்படும் கதிர்களால் கிரகபதி!
கண்களுக்கு வழி(வெளி)யைக் காட்டும் தயாநிதி!

ஒளிகளின் கோளக் கலவையாலே வடிவம்!
உலொகச் செறிவுமிகு விண்மீனே அலரியும்!
வெப்பமும் வெளிச்சமும் உலகத்திற்கே உயிர்!
வெயிலாலே வாழ்விதுவே துளிர்த்திடும் தளிர்!

அலரி = சூரியன்
தேசவன் = தேசு + அவன்.



# சாணைக் கூறை

அ.ஸ.அப்துல்ஸமது (இலங்கை)

இருபுறமும் இடியப்பத் தட்டுக்களை அடுக்கினாற் போல, இரு காதுகள் நிறைய பத்துக்சோடி அல்லுக்குத்துகளும் அசைந்தாட ஹாஜறா உம்மா சொன்னாள், “ஒண்டி என்ர வயித்தில பொறந்த புள்ள இப்ப இஞ்சினீர் ஆயிற்றான்; என்ர ஆசை தீர அவனுக்கு ஒரு கலியாணம் முடிச்சிற்றனெண்டா, மத்தநாள் கண்ண முடினாலும் கவல இல்லடி பாத்தும்மா”

“எனக்குத் தெரியாதா ராத்தா, நீ பட்ட பாடும் உன் மக னுக்குக் கட்டின காசும்! எப்படியோ காரியத்தில் வெத்தி எடுத்திற் றாய், இண்டக்கி வைரம் அள்ளிக்குடுத்து எடுக்கிற மாப்பிள்ளை உன் மகன்” – இப்படிப் பதில் கூறினாள் பக்கத்துவீட்டுப் பாத் தும்மா .

“ஓமோம், இருபத்தைந்தேக்கர் காணி, இருபத்தையாயிரம் காசு, பெரிய கல்வீடு, இவ்வளவும் இல்லாம இந்த ஹாஜருகிட்ட யாரும் வந்து அணுகமுடியாது; மாப்பிள்ளை கேட்டு ஆட்கள் வந்தா ஊட்டுக்கு முன்னால பத்துக் கார் கெடக்கவேணாமா? இவ்வளவெல்லாம் அந்தஸ்து இல்லாத வங்களோட நமக்கென்ன சம்பந்தம்?”

“நம்முட ஊருல இவ்வளவு குடுத்து ஆர்ராத்தா, இந்த மாப்புளய எடுக்கப்போறாங்க? எங்கபார்த்தாலும் உப்புத் தண்ணி யில இறால் வெளஞ்சமாதிரி குமர்க்கூட்டம். சுத்தி உடுத்த புடவை யும், பின்னிவிட்ட கொண்டையும் தான் மிச்சம். இவளெல்லாம் இந்த மாப்பிள்ளையைக் கனவும் காணமுடியாது; நீ ஒண்டும் யோசியாத, காரில காசும் கட்டிக்கி ஆள்வரும். நான் போக்கிற்று வாறன் ராத்தா” என்று கூறிக்கொண்டு பாத்தும்மா நகர்ந்தாள்.

ஹாஜறாவுக்கு முதல் பிறந்தது நான்கும் பெண்கள். ஐந்தா வதுதான் இந்த எஞ்சினியர் ஸவாஹிர். மகனின் இந்த உயர் நிலையைக்கண்டு சந்தோஷப்பட அவள் கணவர் முஹாந்திரம் முஹிதீன் போடி கொடுத்துவைக்கவில்லை. பதினைந்து வருஷங் களின் முன்னே அவரை இஸ்றாயில் அழைத்துக் கொண்டார். கொஞ்சம் நிலபுலன்கள் கிடந்ததால் ஹாஜரு அவற்றையெல்லாம் விற்று மகனை மேல் படிப்புக்கு விட்டாள்.

இந்த ஊரில் பெரிய படிப்புப் படித்துப் பட்டம் பெற்றவன் ஸவாஹிர்தான். கைநிறையச் சம்பளம் வாங்குகிறான். இவன்ர தகுதிக்குகேற்ற சீதனமும் சீர்வரிசைகளும் வாங்கிக் கொண்டு தானே விவாகம் ஆகணும் என்பது ஹாஜறாவின் தணியாத தாகம்.

ஒரு நாள் அவளுடைய ஆசையும் நிறைவேறத்தான் செய்தது.

பையனோ எஞ்சினியர்; தங்கை என்றும் குடும்பம் என்றும் அல்லுத்தொல்லை இல்லாதவன் என்றால் பெண் பெற்றவர்கள் சும்மா இருப்பார்களா? பக்கத்து ஊர் நெய்ந்தக்கண்டு வட்டா விதானை, ஹாஜறாவின் நிபந்தனைகளுக்கெல்லாம் கட்டுப்பட்டு, அவனது கனவை நனவாக்க முன்வந்தார். மாப்பிள்ளையோ, உம்மாவின் விருப்பங்களை அனுசரித்தும், மனிதகோடிகள் அனை வருக்குமே உள்ள பொருளாசைக்கு வசப்பட்டம், தன் மோதிர விரலை மாமனாரிடம் நீட்டிவிட்டான். அதாவது தனது சம்மதத் தைத் தெரிவித்து மோதிரத்தை ஏற்றுக்கொண்டான். நிச்சயார்த்தம் ஆயிற்று.

ஹாஜறா உம்மாவுக்குப் பூமி மலர்மெத்தையாயிற்று. எண் ணமெல்லாம் இன்பக் கிளுகிளுப்பு. மாப்பிள்ளை கேட்டு வந்த வர்கள் கொண்டுவந்த துதல், மஸ்கத், வாழைப்பழம் இத்தி யாதியை, வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற வித்தியாசம் இன்றி ஊரெல்லாம் பகிர்ந்தாள். ஏன் தெரியுமா? கொழுத்த சீதனத்துடன், மகனுக்கு அயலூரிலிருந்து மாப்பிள்ளை கேட்டு வந்த செய்தி எல்லோருக்கும் தெரிய வேண்டாமா? அதற்காகத் தான். பக்கத்து வீட்டுப் பாத்தும்மாவுக்கு இப்பவே கலியாண வேலை தொடங்கிற்று. இந்த அலுவல்களிளெல்லாம் ஹாஜறா வுக்கு ஒத்தாசையாக இருப்பவள் அவள்தானே.

மறுநாள் பின்னேரம் எஞ்சினியர் ஸவாஹிர் திண்ணையில் கிடந்த சாய்மணையில் சாய்ந்தபடி பத்திரிகை படித்துக் கொண் டிருந்தான். அப்பொழு பத்து வயதுச் சிறுமியொருத்தி ஓடிவந்து, சிறு பொட்டலம் ஒன்றை அவனிடம் நீட்டினாள். அந்தப் பிள்ளையை அவன் இதற்குமுன் கண்டிருக்கிறான். ஆனால் யாரென்று தெரியாது. கைநீட்டிப் பொட்டலத்தை வாங்கியபடி, “நீ யாரும்மா?” என்று கேட்டான். எந்தப் பதிலுமில்லாமல் சிறுமி சிட்டாய்ப் பறந்துவிட்டாள். ஒன்றும் புரியாதவனாக பொட்ட லத்தை அவிழ்த்தான் ஸவாஹிர். அந்தப் பொட்டலத்துள் சிறு குழந்தைக்கான இரு பட்டுச்சட்டைகளும், கடிதமொன்றும் இருந் தன. சட்டைகள் மிகப் பழையவை. பாதுகாத்து வைக்கப் பட்டவை. கடிதத்தை விரித்துப் படித்தான் ஸவாஹிர்.

அன்புள்ள மச்சான்! உங்கள் மாமி மகள் சுபைதாவை, இந்தவேளையில் உங்க ளுக்கு நினைவிருக்க நியாயம் இல்லை. அந்தப் படு போக்கிரிதான் இதை எழுதுகிறேன். உங்களுக்குப் பெண் நிச்சயார்த்தம் ஆயிற்று என்று கேள்விப்பட்டேன். என் வாழ்த்துக்கள்! இந்த மங்கள கரமான நேரத்தில் உங்களுடைய நிம்மதியையும் மகிழ்ச்சியுமை் குலைக்க நான் வரவில்லை .

எனினும் இந்தக் கல்யாண விஷயமாக எனது உம்மாவுக் கும், உங்களது உம்மாவுக்கும் ஒரு ஆகிறத்துக் கடன் உண்டு, அந்தக் கடனை நாமிருவரும் ஒத்து இம்மையிலேயே அழித்து விடுவது சௌஜன்யமானது என்று கருதி இதை எழுதுகிறேன்.

ஆமாம் நான் தன்னறிவு பெற்றுத் தாய்முகத்தைப் பார்க்கு முன்னமேயே அவள் இவ்வுலகைத் துறந்துவிட்டாள். நான் இம்மண்ணுலகில் மனிதப் பிறவி எடுத்த ஏழாம் நான். உங்கள் தாயார் என் தாயாரிடம் ஒரு சங்கற்பம் செய்து கொண்டார். அதன் சான்றுதான் இத்துடன் வரும் சட்டைகள். ஆம்! நாமிரு வரும் விவாகப் பக்குவத்தை அடைந்ததும் என்னைத் தன் மருமக ளான ஏற்பதாகச் சங்கப்பித்து இந்தச் சட்டைகளை உங்கள் சார்பாக சாணைக்கூறையாக வழங்கினார் உங்கள் அன்னை. சாணைக்கூறையாக வழங்கியவற்றை, விவாகக்கூறை வரும்வரை பாதுகாத்து வைக்க வேண்டுமாம் என்று என் மூத்தம்மா, என் உம்மா மவுத்தான பின்பும் இதனைக் கருத்தோடு பௌத்திரப் படுத்தினாள். அனுபவ அறியும், சம்பிரதாயங்களில் உள்ள நம்பிக்கையும் எவ்வளவு அர்த்தபுஷ்டியானவை!

நீலம், பச்சை வர்ணத்தில் அமைந்த இவ்விரண்டு சட்டை களையும் பாருங்கள், பதினெட்டு ஆண்டுகள் பூரணமாகக் கழிந் தும் அதன் அழகும் ஜொலிப்பும் சற்றேனும் மங்கிவிடவில் லையே. ஏனெனில் இது அசல் சீனாப்பட்டு. பூச்சி சில்க் சீலை யொன்றின் வண்ணமும் அழகும் இத்தனை ஆண்டாகியும் இன் னும் மாறவில்லை. மனிதனுடைய சொற்களும் நிலைமைகளும் எவ்வளவு மாறிவிட்டன. பாருங்கள்.

சாணைக்கூறை என்ற இச்சம்பிரதாயம்; நம்பிக்கை நிறைந்தது. இதில் வாக்குறுதி மீறப்பட்டால் மறுமையில் இறைவன் முன் வழக்காடல் நிகழும் என்பார்கள். இது உண்மையாயின் மறுமை யில் என் உம்மா உங்கள் உம்மாவுடன் வழக்காட நாமிருவரும் சாட்சிகளாக இருப்போமல்லவா? உங்கள் தாய் வாக்குறுதி மீறினார். நீங்கள் அதற்கு அனுசரணையாக இருந்தீர்கள் என்ற இவ்வழக்கு எவ்வளவு சுவாரஸ்யமானது.

சாணைக்கூறை போட்டவன்தான் சந்தூக்குக் கூறையும் போடவேண்டும் என்பது மற்றோர் ஐதிகம். அதாவது ஒரு பெண் இறந்ததும் அவளுடைய பாடையை மூட, அவளது விவாகக் கூறையைப் பயன்படுத்துவது நம்வழக்கம். ஒரு பெண்ணுக்கு சாணைக்கூறை போட்டிருந்தவர்தானே சந்தூக்குக் கூறையும் வாங்கி இருப்பார்.

மச்சான்! சாணைக்கூறையை நீங்கள் போட, விவாகக் கூறையை இன்னொருவர் கொண்டுவர, சந்தூக்குக் கூறையை மற்றொருவர் கொண்வரும்படியான துரதிர்ஷ்டம் என் வாழ்க் கையில் நிகழ்ந்துவிட்டால், இந்த முதற் கூறையோடு என் வாழ் வுக் கதையும், முற்றுப் பெற்றுவிடுவது எவ்வளவு சௌகரியம். பதினெட்டு வருடங்கள் என் மனதில், நாற்பது திரியிட்ட குத்து விளக்காகப் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒருவரை ஒரு நாள் திடீரென இழப்பது இதயம் தாங்கமுடியாத ஒரு சோதனைதான். மறப்பதும் மன்னிப்பதும் மனிதமனங்களின் இயல்பான தொழி லல்ல. காரணங்களை வருவித்து அவற்றை நாம் செயற்கையாகச் செய்கிறோம் அவ்வளவுதான்.

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதாக எண்ணு வீர்கள். கூழுக்கு வழியில்லாத ஒருவன் பாற்சோறு தின்னக் கனவு காண்பது எவ்வாறு? நீங்கள் இந்தப் பெரிய படிப்புப் படித்திரா விட்டால், அல்லது நான் இந்த ஏழ்மை நிலைமை எய்தி இரா விட்டால், உங்களுடைய விவாகக் கூறை எனக்குரியதுதானே.

அதுவே சந்தூக்கு மூடவும் ஆகி இருக்குமல்லவா?

எனது முற்றத்தில் மலர்ந்த கொடி மல்லிகைப் பூக்கள், மற்றொருத்தியின் கொண்டையில் சரமாகச் சூடி இருப்பதைப் பார்ப்பது துயரமே. வறுமை காரணமாக, அம்மலரை நான் சூடும் திராணியற்று, அதனை மற்றொருத்திக்கு விற்றுவிட்ட எனக்கு,

பொறாமை ஏன்? ஆசை ஏன்?

இதோ சாணைக்கூறையான இரு சட்டைகளையும் என் இதயத்தைப் பெயர்த்தளிப்பது போல, உரியவரிடம் ஒப் படைத்து விட்டேன். இதனை நானே விரும்பிச் செய்தபடியால் மறுகையில் என் தாயும் உங்கள் தாயும் வழக்காட நியாயமில்லை அல்லவா?

இனி உள்ளது, உங்கள் உம்மா என் உம்மாவிடம் கொடுத்த வாக்குறுதிதான். நெல்லைக் குத்தி அரிசியைக் கண்டால் உமியைப் புடைத்துத் தள்ளிவிடுவதுதானே. உங்கள் உம்மா உங்களை அரிசியாகக் கண்ட போது, நான் உமியாகிவிட்டேன். உமி இப் பொழுது குப்பையில் கிடக்கிறது. நான் உமியான காரணத்தினால் உங்கள் உம்மா கொடுத்த வாக்குறுதியும் உமியாயிற்றா? நெய்ந்தக் கண்டு வட்ட விதானையிடம் கொடுத்த வாக்குறுதி மட்டும் வைர மானதா? இந்நிலையில் உங்கள் பெற்றதாயை எவ்வாறு விடு விக்கப் போகிறீர்கள்?

என் உம்மா மவுத்தானதும், என் வாப்பா வேறு விவாகம் செய்ய விரும்பாமல் எனக்காகத் தன் வாழ்வைப் பரித்தியாகம் செய்தார். என்னை எஸ். எஸ். ஸி. வரை படிப்பித்தார். எனக்காக ஒரு அழகிய வீட்டைக் கட்டினார். நான் கண்கலங்காமல் ஆத ரித்தார். அவரால் முடிந்தது இவ்வளவே. இதற்காக அவர் செய்த தியாகங்கள் அதிகம். இந்த அந்தஸ்தில் ஒரு எஞ்சினியரை நான் எப்படிக் கனவு காணமுடியும்?.... அந்தக் கூட்டுக்கலவியிலே கவிதை கொண்டுவர வேண்டும்..... என்ற பாரதி பாடலைப்போல, நான் கவிதை தருவேன். காசுதர என்னால் முடியாது! காணிதர என்னால் இயலாது மச்சான்! இந்தப் பிச்சைக்காரிக்கு இனி ஆண் துணையே தேவை இல்லை. ஏனெனில் உங்களை மனதில் வைத்துக்கொண்டு மற்றொருவரை மஞ்சத்தில் வைத்துக் கொஞ்சி விளையாடும் விந்தை எனக்குத் தெரியாது! ஆதலால் உங்க ளுடைய தாயின் இரண்டாவது வார்த்தையை நிறைவேற்றி இன்பமாக வாழுங்கள்!

அன்பின் சுபைதா. இரவு கலியாண முற்றாய்ப்புக்காக, பெண் வீட்டிலிருந்து வந்த இனிப்பு வகைகளை ஒரு தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு "இதத் திண்டுபார் மகன்!" என்று கூறியபடி ஸவாஹிரிடம் வந்த ஹாஜறா, மகனின் நிலையைக் கண்டாள். கண்கள் கலங்கியபடி எதையோ இழந்துவிட்டவனைப் போல உட்கார்ந்திருந்தான் ஸவாஹிர். முன்னால் இருந்த ரீபோவில் இரு சட்டைகளும் கடிதமும் கிடந்தன.

"என்னமகன் இது! பேயறஞ்ச மாதிரி இருக்காய்!" என்று கேட்டபடி சட்டைகளைக் கையில் எடுத்தாள் ஹாஜறா. அவளுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. சொல்லி வைத்தாற்போல பாத்தும் மாவும் வந்து சேர்ந்தாள்.

"அடியே பாத்தும்மா, இஞ்சப்பாத்தாய, புதினத்த. இந்த முகாந்திரம் போடியிர பெண்டாட்டி இதுக்கெல்லாம் அசை கிறவளா?" என்று பிரலாபிக்கத் தொடங்கினாள். விஷயம் பாத்தும் மாவுக்கும் தெரிந்ததுதான். எனவே அவளுக்கும் எல்லாம் விளங்கி விட்டது. "என்ன தம்பி இது? கழிஞ்சிபோன கண்ணறாவிய கழுத்தில சுத்திக்கி அழுகிறதா? உட்டு வீசிற்று மத்த அலுவலைப் பாருங்கள்!" என்று அவளும் பதிலுக்குப் பாடினாள். ஸவாஹிர் பொங்கிவரும் வேதனையைக்

தாழமுடியாதவனாக பாத்தி மாவைப் பார்த்து,

“என்ன ராத்தா! கதக்கிறயள். பதினெட்டு வருஷமா ஒரு பெண் வச்சிக்கிருந்த நம்பிக்கையை நீங்களெல்லாம் சேர்ந்து நாசம் பண்ணிற்றீங்க! நானும் அதுக்கு உடன்பட்டவனாயிற்றன். இது போக, என் மாமியிடம் என் உம்மா ஒரு சங்கற்ப வாக்குறுதி அளித்திருக்கா, அதையாவது நான் காப்பாற்ற வேண்டாமா?”

“என்ன தம்பி சங்கற்பம்! எல்லாம் சந்தர்ப்பம் தானே! நீ கூட நேத்திராவு உன்ர மாமனாரிடம் விரலை நீட்டி மோதிரத்தை வாங்கிக் கொண்டாய்! ஒரு சபையில் நாலு பெரியவங்க முன்னால், நீ செய்த சங்கற்பத்தை இப்ப மாத்தப் போறாயா? நீ ஒரு படிச்சபுள்ள – நான் ஒரு மடச்சி பேசுறன். யோசிச்சுப் பாரு...” பாத்திமா இப்படிக் கூறினாள்.

“ராத்தா! நான் படிச்சவன், பெரிய சம்பளம் எடுக்கிறவன். அதனால் தானே என் உம்மா, மாமியிடம் கொடுத்த வாக் குறுதியை அழிக்கிறேன். என் மாமி மகளின் நம்பிக்கையை மோசம் செய்கிறேன். நான் கற்றதன் விளக்கம் இதுதானா? சுபைதா போன்ற பணம் மட்டும் இல்லாத ஒரு பெண், ஒரு எஞ்சினியரைக் கணவனாகப் பெறும் தகுதி அற்றவள் என்று என் தாய் முடிவு செய்த காரணம் என்ன?” அவதான் இதே சுபைதா வுக்குச் சங்கற்பம் செய்து சாணைக் கூறை போட்டா! இந்தச் சம்பிரதாயத்தையும் அது வளர்த்த நம்பிக்கையையும் மீற நான் தயார் இல்லை ராத்தா!”

“ஏன் தம்பி! நீ நேத்திராவு கையை நீட்டி மோதிரத்தை வாங்கிக் கொண்டாயே அதுவும் சம்பிரதாயந்தானே! இதனால் இன்னொரு பெண்ணின் மனத்தில் ஒரு ஆசைக்கனலை வளர்த்து விட்டு, தப்பப் பார்க்கிறாய்?”

“என்ர அல்லாவே! என்ர புள்ளங்கி என்னமோ தூள் போட்டுட்டாளுகள். மகுறம் நடந்து போச்ச. யா முஹ்ஹிதீன் ஆண்டவரே! கப்பலைக் கரைசேர்த்த நீங்கள் தான் என்ரபுள்ளயயும் காப்பாத்தவேணும்!” இவ்வாறு கூறிப் பிரலாபித்தாள் ஹாஜறா.

ஸவாஹிரின் தலை சுழன்றது. உலகம் முழுவதுமே அவனை நோக்கிக் கேள்வி கேட்பது போன்றிருந்தது. கல், மண், கட்டிடக் கலையில் நிபுணத்துவம் பெற்ற அவன், பொன், மண், பெண் எனும் மூன்றையும் அறியாதவனாகவே நின்றான். ஒரு நிமிஷத்தில் அவன் ஒரு முடிவுக்கு வந்தான். கையில் கிடந்த மோதிரத்தைக் களற்றி உம்மாவின் கையில் கொடுத்தான். அவன் கால்கள் நடந்தன.

ஆம்! சுபைதாவின் வீட்டை நோக்கி அவன் கால்கள் நடந்தன.

– நன்றி: சிறுகதை.கொம்

பாக்யபாரதி

# நினைவுகள்

மழலைப் பருவ நிகழ்வுகளை
பலமுறை முயற்சித்தும்
அசைபோட முடியவில்லை
ஏனோ தெரியவில்லை...
இளமைப் பருவ நிகழ்வுகள்
இதய அறைக்குள்
நிரம்பி கிடப்பதாலேனோ
நினைத்தவுடனேயே
போட்டிப் போட்டுக் கொண்டு
முன்னால் வருகின்றன!
முதன் முதலில்
எனக்குக் கவியெழுத
கற்றுக் கொடுத்த
காதல் உணர்வுகளின்
தூண்டலை சொல்வதா?
இரவு வந்ததும்
முளைத்த கனவு
விடியும் வரை
தொடர்ந்ததை சொல்வதா?
நட்புக்களுடன்
அரட்டை அடித்து விட்டு
நடுசாமத்தில்
வீட்டிற்கு வந்து
அப்பாவின்
கோபமான பேச்சுக்களை
கேட்டுக் கொண்டே
உறங்கியதை சொல்வதா?
கட்டம் கட்டி
ஆட்டம் போட்ட
கல்லூரி நாட்களை
பட்டியலிட்டு சொல்வதா?
எதை சொல்வது?
எதை விட்டுவிடுவது?
நினைக்க நினைக்க
எல்லாமே இனிமை!
இறந்தகால நினைவுகள்
இன்றைக்கும் புதுமை..!

ஆங்கிலத்திலிருந்து தமிழில் : 'ஸ்ரீ என் ஸ்ரீவத்ஸா'



# The Price Of Freedom

*If you choose freedom*
*you have to pay-*
*they say.*
*I pay for mine.*
*I pay in expletives.*
*My father calls me*
*rebel*
*My mother calls me*
*Bad girl.*
*The society calls me,*
*Fallen*
*And my ex calls me*
*Arrogant bitch.*
*My sister calls me a failure*
*for failing to seduce a husband.*
*My country calls me*
*Anti-national.*
*But I call myself a free woman.*

*Moumita Alam - 20/08/23*

# சுதந்திரத்தின் விலை

*நீங்கள் சுதந்திரத்தைத் தேர்ந்தெடுப்பீர்களானால்*
*விலை கொடுக்க வேண்டிவரும்*
*என்கிறார்கள் அவர்கள்.*
*என்னுடையதற்காக நான் விலை கொடுக்கிறேன்.*
*வசவுச் சொற்களால் கொடுக்கிறேன்.*
*என்னைப் கலகக்காரி என்றழைக்கிறார் என் தந்தை.*
*என்னைக் "கெட்ட பெண்" என்கிறாள் என்*
*அன்னை.*
*சமூகம் என்னை வாழ்க்கையில் விழுந்தவள் என்று*
*கூறுகிறது.*
*கர்வம் பிடித்த பெட்டைநாய் என்கிறான்*
*என்னுடைய முன்னாள் காதலன்.*
*ஒரு கணவனைச் சாகசமாக மயக்குவதில் தோல்வி*
*கண்டதால் என் சகோதரி என்னை ஒரு தோல்வி*
*என்று விளிக்கிறாள்.*
*என் நாடு என்னை தேச விரோதி என்கிறது.*
*ஆனால், என்னை நான் ஒரு சுதந்திரமான பெண்*
*என்றே அழைத்துக்கொள்கிறேன்.*

*(மௌமிதா_ஆலம்)*

*- நன்றி:முகநூல்*

–நெய்தலூர்_தமிழாதன்

(த.கி.ஷர்மிதன்)

# திருஷ்டி

என் வீட்டிற்கு
திருஷ்டி படுவதேயில்லை,
என் மகள் வரைந்த
ஓவியங்கள் இருக்கும் போது
கண்திருஷ்டி கணபதி
எதற்கு...?

ஸ்ரீவி.முத்துவேல், சென்னை

# ஹைக்கூ

குரங்கிற்கு நீரளித்துத்
தாகத்தோடு மலையேறும் பக்தன்
பொழியும் மழை

❍

உச்சத்தில் அக்னிநட்சத்திரம்
மகிழம்பூ மரநிழலில் நான்
நீயும் வா தும்பியே...!

❍

ஆவணியில் கோடைவெயில்
குழாயைத் திறக்கும் சிறுமி
தாகம்தணிக்கும் காகம்

சுந்தரிமணியன்,புதூர்

# ஆடு...

நாள்தோறும்
புல்வைத்து
நலியாமல் குளிப்பாட்டி
அழகு பார்த்தாய்...
தண்ணீரின் குளிரில்
வறட்சிக்கும் தண்ணீர் காட்டினாய்...
என் தோழர்கள்
எல்லோரையும் அரவணைத்தாய்...
என்னுயிரே நீதான் என்று
என்னில் ஒருவன் ஆனாய்...
இப்படியெல்லாம்
ஊரார் புகழ ஓயாமல்
பணிவிடைகள் செய்தீர்கள்...
இறுதியில் ஏன்?
என் தலையினைக் கொய்து
குருதியினை எடுத்தீர்கள்? எஜமானே!
இதுவும் ஒரு சேவைதானா?
எங்களுக்கு...

இளையவன் சிவா, மடத்துக்குளம்

போக்கிடம் துறந்த புத்தனின் பாதையில்/
பிச்சைக்காரனும் பேராசைக்காரனும் வழிமறிக்க/
உலகத்தில் போக்கில் சுயநலம் நிறைந்து/
காணும் அனைத்தும் தனதென்றாக்க/
வளரும் பேராசையின் வயிற்றுப் பாட்டிலும்/
யாசகம் கேட்டு நீளும் கரங்களில்/
வசவுகள் பெருகி தட்டில் நிறைவதை/
வருத்தமுடன் விளம்ப/
துன்பத்தின் வேர்களைத் துடைத்திட/
பாதைகள் தேடிய புத்தனுக்குள்ளும்/
மனதின் சஞ்சலம் எட்டிப் பார்க்கிறது/
பேராசையின் கனவுகளுக்குள் புகுந்தாலும்/
பிச்சைக்காரனின் மனதினில் நுழைந்தாலும்/
துரத்தும் ஆசைகளைத் தீண்ட முடியாமல்/
போதி மரத்தைத் தேடும் புத்தனை விட/
உலகின் போக்கில்/
ஒப்புயர்வுடன் வாழும்/
வறுமையின் வாழ்க்கை மேலெனலாம்.



கவிஜி

## மாடு மேய்க்கும் இவன்

இறங்கி ஏறும்
வெளியின் றெக்கைகள்
அசைவதை
அசையாமல் செய்யும்
ஒற்றைக்கால் தவங்கள்
ஓடினாலும் நிற்கும்
கண்ணாடி பாறைகள்
விழுந்த பிறகும்
இதயம் பேசும் பழுப்புகள்
கூடவே சிவப்பு பச்சைகள்
அண்ணார்ந்தோருக்கு
வனம் தாண்டும்
தன்னிற மெல்லிசை
பஞ்சு மிட்டாய் பகல்
பாதி நீல கனவு
பூமிக்கு மீசை முளைத்ததால்
நிமிரும் ஆசைகள்
சிறகு முளைத்ததால்
புருவ ஓசைகள்
மெய் சிலிர்க்க நம்பலாம்
மாடு மேய்க்கும் இவனை
மடல் ஆக்கும் இம் மதியம்....!

இரா.வெங்கடேஸ் குமார்

## காதல்

நாட்டியம் பேசும் விளையாட்டு விழிகள் யாவும்
தூக்கம் மயக்கம் மறந்து ஊஞ்சல் ஆடும்
உதட்டின் இதழ்கள் பேச ஒலியை மறுத்து
தனிமை எனும் ஒலியை தழுவி ஏங்கி வாடும்
கண்ணில் மாயம் காட்டும் கானல் நீரினை போல
காதல் காட்டும் வண்ணம் நிறைந்த மாய உலகில்
விழி கண்ட யாவும் நொருங்கும் பிம்ப ஒளியே
கானலாய் இருக்கும் மாயம் முற்றும் மறைந்து
அன்பு நிறைந்து அளவற்று ஓடும் கங்கை நீராய்
மாற்றம் எனும் வழியில் நடந்தால் காதலும் வாழும்
மாறா மனிதன் கங்கை எனும் இலக்கை அடிய
முடியா
கானல் தந்த பிம்ப எனும் வாழ்வில் மூழ்கி வீணாய்
நீளும்,,,



சாய்சக்தி஡ீ

# புதிர்

கூட்டாஞ்சோறை பகிர்ந்துவிட்டு
எஞ்சிய பருகைகளை வாயில்
அப்பிக்கொண்டு சிரிக்கிறாள்
சிறுமி
அறுபட்ட மின் கம்பிகளுக்கு
இறையாகிகொண்டிருந்தது
கூட்டிலிருந்து புறப்பட்ட
பறவை
இரண்டையும் கடந்து சென்ற
சாலையின் முகத்தில்
கிடைத்தது
ஓர் துறவியின்
தரிசனம்

# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2022


சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2021


மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019


தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020


பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்